# விதைகள்...

## பாகம்–2

# என்னுரை...

தேவன் தான் தெரிந்து கொண்ட ஜனங்களுக்குத் தன்னை வெளிப்படுத்துகிறார். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக; அவர்களை அழைத்த நோக்கத்திற்கு ஏற்றவாறு தன்னை வெளிப்படுத்துகிறார். அதுமட்டுமல்லாமல் அவர்களை அழைத்த அழைப்பிற்கேற்றவாறு தன்னுடைய நாமத்தையும் வெளிப்படுத்துகிறார். ஆனால் அதற்கு முன்பாக நாம் செய்ய வேண்டிய காரியமும் ஒன்று உண்டு. அதாவது நாம் தான் அதை அவரிடம் கேட்க வேண்டும். கேட்டால் தான் சொல்லுவார்.

மனோவா தேவனை நோக்கி, நாங்கள் உம்மைக் கனம் பண்ணும்படி உம்முடைய நாமம் என்னவென்று கேட்கிறான். அதற்கு அவர் அது "அதிசயம்" என்று பதில் கொடுக்கிறார். அந்த நாமத்தின்படியே அவனுடைய வாழ்க்கையின் முடிவு வரை அவனுடன் கடந்து வருகிறார். (நியா. 13:17,18) ஆபிரகாமுக்கு "யெகோவாயீரே" என்ற நாமத்தில் தன்னை வெளிப்படுத்தி; அதன்படியே அவனுடைய வாழ்க்கையில் பொறுப்பெடுத்தார், எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டார். (ஆதி. 22:14) "சர்வ வல்லமையுள்ள தேவனாக" ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்குத் தன்னை வெளிப்படுத்தி; இன்றளவும் தன் வல்லமையை நிலை நாட்டி வருகிறார். (யாத். 6:3)

அப்படியே, கிதியோனுக்கு "யெகோவா ஷாலோமாக" (நியா. 6:24), தேவரீர் ஒருவரே பூமியனைத்தின் மேலும் உன்னதமானவர் என்ற அர்த்தமுள்ள "யெகோவா" என்ற நாமத்தில் பூமியெங்குமுள்ள மனுஷருக்கும் தன்னை வெளிப்படுத்துகிறார். என்றாலும் ஒரு சிலருக்குத் தன்னுடைய தனிப்பட்ட நாமங்களில் தன்னை வெளிப்படுத்துகிறார். (சங். 83:17) விதைக்கிறவனு(ளு)க்கு விதையைத் தருகிறவராக, எனக்குத் தன்னை வெளிப்படுத்தினார். அதுமுதற்கொண்டு நான் வேதம் வாசிக்கும்போது வசனங்கள் சுவிசேஷ விதைகளாக வெளியேறியது... புத்தக வடிவாக உருக் கொண்டது, 30%, 60%, 100% பலன் கொடுக்கத்தக்க நிலங்களில் விழுந்தது. விழுந்து கொண்டிருக்கிறது, இன்னும் விழும். தேவன் தன் வார்த்தையின்படியே செய்து வருகிறார். அவர் செய்ய நினைத்தது ஒருநாளும் தடைபடாது. அவர் ஒருவருக்கே மகிமையுண்டாவதாக... அவருடைய மகிமையை வேறு யாரும் எடுக்காமல் இருப்பார்களாக! எடுக்க முடியாமல் போவதாக! அல்லேலூயா!

## உங்களுடன் மனசு விட்டு....

தேவனுடைய இராஜ்ஜியத்திற்காக விதைப்பதைப் பற்றி வேத வாக்கியங்களின் ஆழங்களில் கிடக்கும் அத்தனை காரியங்களையும் அச்சேற்றுவதென்றால்; அது இந்த உலகம் கொள்ளாதென்று நினைக்கிறேன். யோவான். 21: 25. தேவன் தந்த தரிசனத்தின் முதல் துளியான "விதைகள்" புத்தகத்தின் தொடர்ச்சியாக இந்த இரண்டாம் துளி...

நான் எழுதிய முதல் புத்தகமான "விதைகள்" வெளிவந்தவுடன், அது பணத்தை அடிப்படையாகக் (Basic) கொண்டு அமைந்திருப்பதைப் பார்த்து ஒரு சிலர் யோசித்தனர், தயங்கினார்கள், ஏன் பயந்தார்கள் என்று கூடச் சொல்லலாம்! இயேசு கிறிஸ்துவுக்குள் இருக்கும் வாக்குத்தத்த ஆசீர்வாதங்களைச் சுதந்தரிக்கும் விஷயத்தில் பயம் வருகிறதென்றால் அது

சாத்தானின் தந்திரம் தான் என்பது வெட்ட வெளிச்சமாகிறது.

உலகப் பணக்காரர்களின் துன்மார்க்க ஜீவியத்தைக் கவனித்திருக்கும் ஆவிக்குரியவர்களின் மனக்கலக்கம் இப்படி யோசிக்க வைக்கிறது. சங். 92:7 உண்மையான ஆவிக்குரிய பணக்காரர்கள் பிரச்சனைக் குரியவர்களல்ல என்பது நிதரிசன நிஜம். ஆனால் அந்த ஐசுவரியத்தின் மீது மனதை வைக்கும் போதுதான் விசுவாசிகளின் எல்லைகளில் பிரச்சனைகள் ஆரம்பிக்கிறது.

ஆபிரகாம் ஒரு "செல்வச் சீமான்"(ஆதி.13:2) என்ற வசனம் பழைய ஏற்பாட்டில்தானே என்று யோசித்தால் ... கொஞ்சம் நிதானிப்போம். "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினார்" என்ற வசனம் கூட பழைய ஏற்பாடுதான். அதனால் அதைக் கணக்கில் எடுக்க வேண்டாம் என்று முடிவு செய்தால் டார்வினின் கொள்கை Darwin Theory தான் சரி என்று நவீன விஞ்ஞானிகளுக்கு ஒத்துப் போக வேண்டியது வரும்! (1தீமோ. 6:20). தேவ இராஜ்ஜியத்திற்காகக் கோதுமை மணிகளாக நம்மையே விதைக்க வேண்டும் என்று ஒருவர் எழுதினார். சபை மக்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள். சுவிசேஷ விதைகளாக வசனங்களை விதைக்க வேண்டும் என்று இன்னுமொருவர் எழுதினார், அதையும் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் ஆத்தும ஆதாயப் பணிக்காக, பணத்தையும் விதைக்க வேண்டும். விதைக்க வேண்டுமானால் நாம் வாக்குத்தத்தத்தின்படி ஐசுவரிவான்களாக மாற வேண்டும், அதுதான் தேவனுடைய சித்தம் என்ற சத்தியத்தை எழுதினால் மட்டும் ஏற்றுக் கொள்ளத் தயங்குவது ஏன்?

பணத்தைப் பற்றியே அதிகம் எழுதினால் அது "செழுமை உபதேசம்" என்று எல்லோராலும் தர்க்கிக்கப்படும் தவறான உபதேச பட்டியலில் சேர்ந்து விடக்கூடாதல்லவா? என்பது சிலரது கருத்து. நல்லதுதான். ஆனால் ஒன்று, தேவன் எனக்குக் கொடுத்திருக்கும் தரிசனத்தை அடிப்படையாகக் (Base) கொண்டுதான் எழுத முடியும். எனக்கு வேதத்தில் வெளிச்சம் கிடைத்த பகுதிகளில் இருந்துதான் அதற்கான வசனத்தைத் தேர்ந்தெடுத்து (select) எழுதவும் முடியும்.

தேவ இராஜ்ஜிய கட்டடம் கடைசி காலத்தில் வேகமாக எழும்பி வருகிறது. அதில் எனக்குத் தந்திருக்கும் வேலையை, எனக்குக் கிடைத்த தரிசனம், ஊழியம், வரத்தின் அடிப்படையில் செய்து வருகிறேன். தேவ ஜனங்கள் ஆசீர்வாதமாக இருக்க வேண்டும் என்பதும், ஆசீர்வாதத்தை அவருடைய வேலைக்காக செலவிட வேண்டும் என்பது வெளிப்படையாகத் தெரியும் சத்தியம். மறைமுகப் பகுதியைப் பார்ப்போமானால் தேவ ஜனங்கள் அனைவருமே ஏதாவது ஒரு பகுதியில் வேலை செய்தாக வேண்டும் என்பது தான். அந்த சத்தியத்தை மனதில் பதித்தால் முரண்பாடுகள், கேள்விக்குறிகள், சந்தேகங்கள் தோன்றாது.

(எபி.11:13, 39) ஆகிய வசனங்களில் விசுவாசத்தினால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றுக் கொள்ளாமல், அவற்றைக் கண்களினால் மாத்திரம் பார்த்துவிட்டு சிலர் மரிக்கிறார்கள். இந்தப் பகுதியின் மேல் எனக்குச் சரியான வெளிச்சம் கிடைக்காததினால், தவறானதை எழுதி விடக் கூடாது என்பதற்காக இந்த வசனங்களில் கை வைக்கவில்லை. வேத வசனங்கள் இருபுறமும் கருக்குள்ள பட்டயம் என்பது தெரிந்த விஷயம். சரியானபடி கையாண்டால் இருபுறங்களிலும் அனுகூலமாயிருக்கும். தவறாக கையாண்டால் பீறிப்போட்டு விடும். "வறுமை" பற்றிப் பேசுவதைத் தவறென்று தள்ளிவிட முடியாது. ஆனால் அதைப்பற்றிய தரிசனம் (Vision) எனக்கு இல்லாததினால் அதைப் பற்றி எழுதவில்லை.

## இரண்டாவதாக சில வரிகள்:

2 பேதுரு 1:4ன் படி ஆசீர்வாதங்களைப் பலவந்தம் (Claim) பண்ணி பெற்றுக் கொள்ளும்போது, தேவனுடைய சுபாவங்களில் ஒன்றான “ஐசுவரியம்” நமக்குள் வருகிறது. அது அவருடைய சாயலாக மாறவும் வழி வகுக்கிறது. அதுமட்டுமல்ல உலக ஐசுவரியத்திற்கும் அது தரும் வேதனைகளிலும் இருந்து நாம் தப்பித்துக் கொள்ள இந்த வாக்குத்தத்த ஐசுவரியங்களின் மூலம் நமக்கு ஒரு பாதுகாவலும் கிடைக்கிறது.

ஒரு 100 ரூபாயி-ருந்து 10 ரூபாயைச் செலவழித்து விட்டால் என்ன நடக்கிறது? 100-10=90 என்ற இயற்கை விதி நிறைவேறுகிறது. இதே காரியத்தை ஆவிக்குரிய உலகத்தில் செய்தால் என்ன நடக்கிறதென்று பார்ப்போம். தேவனுடைய இராஜ்ஜியத்திற்காக 10 ரூபாயைக் காணிக்கையாகக் கொடுக்கும் போது 100-10=1000 என்ற ஆவிக்குரிய விதி நிறைவேறுகிறது. (மாற்கு 10:30). அதாவது ஆவிக்குரிய விதி நிறைவேறும்போது, இயற்கை விதி செயலற்றுப் போகிறது. இந்த விஷயத்தில் வெளிச்சம் இல்லாதவர்களின் ஆவிக்குரிய கண்களில் பிரச்சனை இருப்பதால் இது தெரிவதில்லை, அதனால் இதை அவர்கள் நம்புவதோ, விசுவாசிப்பதோ இல்லை. இது புறஜாதியாருக்கல்ல, தேவ சபைக்குட்பட்டவர்களுக்குத்தான். (2 கொரி. 4:4)

உங்களது சந்தேகங்கள் - கேள்விகள் - ஆலோசனைகள் ஏதேனுமிருப்பின் எங்களுக்கு எழுதுங்கள். தொடர்பு கொள்ளுங்கள்.


எங்கள் முகவரி:

சகோதரி. **லதா டேவிட்**

**நித்தியர் இயேசு ஊழியங்கள்**

**5-A/233,** கால்டுவெல் காலனி, 2-ம் தெரு கிழக்கு,
தூத்துக்குடி-628 008

தொலைபேசி: +91-461-2377889
அலைபேசி: +91-0-94424-66250 & +91-0-9003456506

Email : sovereignjesus@gmail.com
Web : www. sovereignjesus.com

**Our Address:**

**Sis. LATHA DAVID**
**SOVEREIGN JESUS MINISTRIES**
**5-A/233, CALDWELL COLONY,**
**2nd STREET (EAST),**
**TUTICORIN-628 008**

**Ph.: +91-461-2377889**
**Mobile: +91-0-94424-66250 & +91-0-9003456506**

Email : sovereignjesus@gmail.com
Web : www. sovereignjesus.com

## தேவ கோபம்:

தேவ ஜனங்களின் எல்லைகளுக்குள்ளே தேவ கோபம் சுழன்று வருவதாலும் நம் ஆசீர்வாதம் பிரச்சனைக்குள்ளாகிறது. (லேவி. 26:16) அதன் காரண காரியங்களை ஆராய்ந்து அவற்றை அகற்றி விட்டால் ஆசீர்வாதம் சூழ்ந்து கொள்ளும். (உபா. 6:14)

## காரணம் என்ன ?

பாவம்... இது தேவ பயமில்லாததினால் உண்டாகிறது. (அதனால் விக்கிரகங்கள் மீது மனம் தாவுகிறது.) அதிகமான வருமானத்தை தேவன் கொடுத்து ஆசீர்வதித்திருந்த காலங்களில் ஏதோ மிச்சம் மீதியிருக்கும் கொஞ்சம் பணத்தை, ஏனோதானோ என்று காணிக்கைப் பெட்டியில் போட்டுவிட்டு வந்தோமே, அது... தேவ பயம் இல்லாமல் போனது தான் காரணம். அந்நிய தேவர்கள் நம்மைத் தூண்டி விட்டதுதான் காரணம். இரட்சிக்கப்பட்டபிறகும் தேவனுக்குப் பயப்படாமல் மனம் போனபடி புறஜாதியாரைப் போலவே வாழ்வது, சில நேரங்களில் அதை விட மோசமாக வாழ்வது, இதுதான் தேவப் பிள்ளைகளின் எல்லைகளில் காணப்படும் தேவ கோபாக்கினைக்கான காரணங்கள்.

ஒரு கொசுவுக்கு கோபம் வந்து கடித்தால்... மலேரியா காய்ச்சல் வந்து விடுகிறது. ஒரு தேளுக்கு கோபம் வந்து கடித்து விட்டாலோ கேட்கவே வேண்டாம், உயிரைக் காக்க ஆஸ்பத்திரிக்கு ஓடுகிறோம். இதென்ன பெரிய விஷயம்? ஒரு எறும்பிற்குக் கோபம் வந்தால் கடி தாங்காமல் கையை "ஸ்" என்று தூக்குகிறோமே... நிலைமை இப்படியிருக்க நம் தேவனுக்குக் கோபம் வந்தால்?

## தேவ கோபம் மாற என்ன செய்யலாம் ?

தேவ கோபம் எதனால், நம் விளை நிலத்தைச் சுற்றி வந்தது? தேவ கோபம் மாற என்ன செய்யலாம்? என்பதை புரிந்து கொள்ள முயற்சிப்போம்.

1. சுவிசேஷ வேலையை ஊழியர்கள் உண்மையாய்ச் செய்யாமல், மோசடியில் இறங்கியிருக்கிறார்கள். தேவனுக்குக் கோபம் வர கேட்கவா வேண்டும். இப்படிப்பட்ட ஊழியங்களுக்குக் கொடுக்கும் போது தேவன் அவற்றை விதைகளாக ஏற்றுக் கொள்ள மறுக்கிறார். (எரே. 12:10-13)

2. தேவனுக்குக் கீழ்ப்படியாமல், மனிதர்களின் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வதால் இது நடக்கிறது.

மனிதர்கள் தரும் ஆலோசனைகள் பெரும்பாலும் வேத வசனங்களைச் சார்ந்திருப்பதில்லை. அவைகள் உலக ஞானத்தைச் சார்ந்திருக்கும். அதில் "விதைப்பு" என்கிற பேச்சுக்கே இடமில்லை. (எரே. 35:7,9)

3. தேவனை மறந்து, அந்நிய தேவர்களின் கண்ணிகளுக்குள் மாட்டிக் கொண்டதால். இது ஏன் நடக்கிறது? வேதம் வாசிக்காததினால் தான். இரட்சிக்கப்படுவதற்கு எப்படி இயேசுவைத் தவிர வேறு நாமம் இல்லையோ, அது போலவே தேவனை அறிந்து கொள்வதற்கும் வேத வசனங்களைத் தவிர மாற்று வழி இல்லை. (ஓசியா. 8:7)

4. தேவனுக்கு ஊழியம் செய்யாமல், உலகத்துக்குள்ளேயே மூழ்கி விடுவதால்.... (ஆகாய். 1:6)

5. "தீட்டான காணிக்கைகள்." (ஆகாய். 2:14)

இனி தேவ கோபம் தீர...? மிக எளிது. (Very Simple) சிந்தித்துப் பார்த்து, மனந்திரும்புவதுதான்... (ஆகாய். 1:17,18)

அவரைச் சேவித்து, ஆராதனை செய்வோம், பலியிடுவோம். (2 நாளா. 30:8) பிறகு பரிசுத்தாவியானவர் வெளிச்சம் தர, அந்த வெளிச்சத்தினூடே நடந்து சென்று விதிமுறையைக் (Formula) கண்டு பிடித்து, கணக்குப் போட்டுப் பார்த்து... தேவனிடமிருந்து செழிப்பான கதிர்களைப் பெற்று வரலாம்.

## அடுத்ததாக...

"இயேசுவுக்குள் ஒளிந்து கொள்ள வேண்டும்." (ஏசாயா. 26:20) பிதாவின் சினம் கடந்து சென்ற பிறகுதான் கதவைத் திறந்து கொண்டு வெளியே வர வேண்டும்! அதாவது இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கும் போது, பிதாவின் கோபம் மாறுகிறது.

## தேவனே என் வெளிச்சம்:

நாம் வேத வசனங்களைத் தியானிக்கும் போது பரிசுத்த ஆவியானவர் வெளிச்சம் தருவதால் மட்டுமே அதன் ஆழங்களையும், இரகசியங்களையும் காண முடிகிறது. (தானி. 2:22) நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்கேற்ப அவர் வெளிச்சத்தைக் கூட்டியோ, குறைத்தோ கொடுக்கிறார். அந்த வெளிச்சத்திற்கேற்ப நம் இருதயமும் தன்னிடமுள்ளதை வெளிக்காட்டுகிறது.

பரிசுத்தாவியானவரின் வெளிச்சம் கிடைத்தவர்கள் தேவ இராஜ்ஜியத்திற்கென்று விதைத்து, அவரவர் எல்லைகளில் நீதியின் விளைச்சலை அறுவடை செய்து கொண்டிருப்பார்கள். அதே நேரத்தில் இந்த தரிசனத்திற்கு வெளியே நிற்பவர்கள் விதைக்காமல்தான் இருப்பார்கள். அவர்களைக் கட்டாயப்படுத்தி நம் வளையத்திற்குள் இழுக்கப் பார்த்தாலும் பிடி கொடுக்காமல் வழுக்கிக் கொண்டு போய் விடுவார்கள். (யோவான். 11:10) உடனே நம் கண்கள் அவர்களைக் குறைவான மதிப்பீட்டுடன் பார்க்க ஆரம்பித்து விடும். இது எப்படி சரியாகும்? நாமும் வெளிச்சத்திற்கு வெளியே இருந்த போது, அப்படித்தானே இருந்தோம்? இதனால் "நாம் அவர்களை விட ஆவிக்குரிய புத்திசாலிகள்" என்று கணக்குப் போட்டு விடக்கூடாது. (ரோமர். 14:1)

அவர்களின் உள்ளான மனிதனின் வளர்ச்சிக்கேற்ப தேவன் அவர்களுக்கும் வெளிச்சம் கொடுக்கும் போது அவர்களும் உள்ளே வருவார்கள். ஆனால் நாம் சொல்ல வேண்டியவற்றை சொல்லி விட வேண்டும். வசனங்கள் "சும்மா" திரும்புவதில்லை. சுவற்றில் அடித்த பந்தைப் போல "அறைந்து" செய்ய வேண்டியதை செய்து விட்டுத்தான் திரும்பும். (எசே. 2:7)

பறவைகள் தேவனை விசுவாசித்து உஷ்ண தேசத்தை நோக்கிப் பறக்கின்றன. ஆனால் நாமோ, இறக்கைகளை மடக்கி வைத்துக் கொண்டோம்! (மத்.10:29)

அவர்களுக்கு வெளிச்சம் கிடைக்காமல் போவதற்குக் காரணம், மாம்சீகக் கண்களின் குறுக்கீடுதான். ஆவிக்குரிய கண்களுடன் அவை சம்பந்தங் கலப்பதில்லை. ஏறுக்குமாறாக பார்க்கிறது! (1 கொரி. 2:14) தண்ணீரினுள் மூழ்கிய நிலையில் சில நிமிடங்கள் கண்களைத் திறந்து வைத்துக் கொண்டே இருக்க முடிவதாக வைத்துக் கொள்வோம். தண்ணீருக்குள் இருக்கும் எல்லாவற்றையும் தெளிவாகப் பார்க்க முடியும் என்கிற நம் ஆசையில் மண் விழும்! தெளிவில்லாத பிம்பங்களைத்தான் பார்க்க முடியும். தண்ணீருக்குள் இருக்கும் பொருட்கள் எப்படி தோற்றமளிக்கும் என்பதை பார்க்க வேண்டுமானால், இருபுறமும் குழியுள்ள லென்ஸ் (Lens) மூக்குக் கண்ணாடியைப் போட்டுக் கொள்ள வேண்டும். இந்த "Lens" உள்ள கண்ணாடி ஒளிக்கதிர்களை அதிகமாக விரியச் செய்து கதிர்களை விழித்திரைக்கு மிகவும் பின்னாக குவியச் செய்கின்றன. (Plint) பிளின்ட்

என்ற கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பார்த்தால் தான் தண்ணீரினுள் தெளிவாகப் பார்க்க முடியும். இந்த கண்ணாடியின் சிறப்பம்சம்? அதன் விலகு விகிதம் மிக அதிகம்; ஏறக்குறைய **'2'**. சாதாரண கண்ணாடி 1.5, இது நீரின் (1.34) விலகு விகிதத்தை விட சிறிதுதான் அதிகம். "கிட்டப்பார்வை" (**Short sight**) உள்ளவர்களுக்குக் கண்ணாடி இல்லாமல் தண்ணீருக்குள் பார்ப்பது ஓரளவுக்கு சாத்தியம்.

இரட்சிக்கப்படாத ஒரு நபருக்கு வேதத்தின் ஆழ்கடல் இரகசியங்களை அறியும்படி ஏன் வெளிச்சம் கிடைக்கவில்லை என்பது இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும். நீச்சலாழம் (எசேக். 47:5) அறியும்படி அவர்களுக்கு இன்னும் "**Lens**" உள்ள கண்ணாடி பரிசுத்தாவியானவரால் தரப்படவில்லை. இந்தக் கண்ணாடி எனக்குக் கிடைக்குமுன்பாக, நானும் "குழம்பிய காட்சிகளைத்" தான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

மீனின் கண்களைப் பெற்றுக்கொள்ள வாஞ்சிப்போம்! (அப்.9:18) ஏன்? மீனின் கண்கள் விலகு விகிதம் மிக அதிகமுள்ள மிகக் குவிந்த கோள வடிவமான கண்கள்! (மீன்கள் கண் தெரியாமல் தத்தளிக்கக்கூடாது என்பதற்காக தேவனின் இலவச ஏற்பாடு இது!) (பிர. 3:11)

## "விஷ விதைகள்" ( எதை விதைக்கிறோம் ? )

நம் பழைய ஏற்பாட்டு முற்பிதாக்கள் நீதிமான்களாய் மரித்த போதும், தங்கள் அறியாமையினால் விதைத்த, விஷவிதைகள் இக்காலம் வரைக்கும் விளைந்து கொண்டே இருக்கின்றன. இதனால் சுவிசேஷ வயல்கள் நாசமாகி, தங்க மணிக்கதிர்கள் ஓலமிடுகின்றன. அறியாமல்தானே செய்தார்கள் என்று அவர்களுக்கு ஆதரவாகப் பேசவும் முடியாது. ஒரு விவசாயி வயலில் விதை தூவும் போது அதில் களை விதைகள் கலந்திருப்பதை அறியாமல்தான் விதைக்கிறான். அதனால் அவை வளராமல் இருப்பதில்லையே! போட்டி போட்டுக் கொண்டு பயிரை மிஞ்சி வளர்ந்து விடுகின்றன. நாம் கொடுக்கும் காணிக்கையிலும் இந்த ஆபத்து ஒளிந்திருக்கும் சந்தர்ப்பங்கள் வரலாம். (உபா. 23:18)

இங்கே, எடுத்துக்காட்டாக வரும் லோத்து ஒரு நீதிமான் தான். (ஆதி. 19) "பச்சைப் பசேல்" என்ற செழுமையினால் கவர்ந்திழுக்கப்பட்ட லோத்து, சோதோமைத் தெரிவு செய்து கூடாரம் அடித்தாலும் (ஆதி. 13:10,11) அந்த சோதோமின் அருவெறுப்பு அவனை வாசலிலேயே உட்கார வைத்தன. "**XX**" பாவத்துக்குட்பட்ட சோதோம் மக்களின் கூக்குரல் தேவனுடைய காதுக்கு வருகிறது. தேவனுடைய கோபம் சோதோமை அழிக்கும் அளவுக்கு மேலெழும்புகிறது. அழிக்க வரும் தூதர்களுக்கு லோத்தின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. காரணம் கீழ்ப்படிய மறுக்கிறான். சோதோமில் வாழ்ந்து கொண்டிருந்த "**XX**" பாவிகளிலேயே தன் மகள்களுக்கு மாப்பிள்ளைகளைப் பார்த்திருந்த உணர்வில்லாத லோத்து, அந்த விஷ விதைகளைக் காப்பாற்ற, மறுபடியும் சோதோமுக்குள் போகிறான்.

"தேசம் அழியப் போகிறது" என்ற எச்சரிப்பைப் பெற்ற பிறகும் லோத்தின் அசமந்தமான (**Slow Motion**) நடவடிக்கைகளைப் பார்த்த தூதர்கள், அவனையும் அவன் குடும்பத்திலுள்ளவர்களையும் "தர தர" வென்று, கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே வருகிறார்கள். கீழ்ப்படியாத லோத்தினால் தேவனுக்கு மட்டுமல்ல, தேவ தூதர்களுக்கும் திண்டாட்டம்!

சரி, இனிமேலாவது தேவனுக்குக் கீழ்ப்படிகிறானா என்று பார்த்தால், அதுதான் இல்லை! மலைக்கு ஓடிப் போகச் சொன்ன தேவனுடைய ஆலோசனையைத் தள்ளி "சோவார்" என்று பக்கத்து ஊருக்குப் போக

அனுமதி கேட்கிறான். அந்த சிற்றூரிலும் "XX" பாவிகள்தான் வாழ்ந்து வந்தார்கள் என்பதை ஆதி. 19:21-ல் இருந்து அறிந்து கொள்ளலாம். தான் தேவனுக்கு கீழ்ப்படியாததினால் "ஒரு விஷவிதையைத் தப்ப விடுகிறோம்" என்பது அப்போதைக்கு அவனுக்குத் தெரியவில்லை. 30-ம் வசனத்தில் தேவனுக்குக் கீழ்ப்படிந்த லோத்து, அதை 17-வது வசனத்திலேயே செய்திருப்பானானால் அந்த "விஷவிதை"யும் சேர்ந்து அழிக்கப்பட்டிருக்கும். அவனுடைய இரண்டு பெண் பிள்ளைகளினால் உருவான சாபச் சந்ததிகளாக "அம்மோன், மோவாப்" என்ற சந்ததிகளின் விஷ விதைகளும் தோன்றாமலேயே இருந்திருக்கும். (ஆதி. 19:31-38) லோத்தினால் அக்கினிக்குத் தப்பின அந்த விஷ விதைகளினால் பயிரான எய்ட்ஸின் (Aids) அமோக விளைச்சல் இன்றைய உலகத்தை எந்த அளவிற்கு உருட்டிக் கொண்டிருக்கிறது என்பது சின்னப்பிள்ளையும், படிக்காத பாமரனும் கூட அறிந்த விஷயம்.

லோத்தைப் போன்ற மதியீன விதைப்புகளுக்கு நாம் நம்மையறியாமல் காரணமாகி விடக் கூடாது என்றால் என்ன செய்ய வேண்டும்?

லோத்து செய்த எதையும் செய்யாதிருந்திருக்க வேண்டும் என்பதே பதில்!

- சகோதரனை விட்டுப் பிரியாதிருந்து,
- உலக செழிப்பைப் பார்க்காமல்,
- பெற்ற குழந்தைகளிடம் பாசமில்லாமல் இருக்கும் குணத்தை மாற்றி,
- மாறுபாடான மக்களுடனான ("XX") தொடர்பைத் துண்டித்து,
- மந்தகதியில் இருக்காமல் (சோம்பல்)
- தேவனுடைய வார்த்தைகளுக்கு எதிர்மறையானதைச் செய்ய முயற்சி எடுக்காமல்,
- குடும்பத்திலுள்ளவர்களின் ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து அசட்டையாக இருக்காமல் இருந்து,
- மனுஷர்களுக்குப் பயப்படாமலிருந்து, (தேவனுக்கு மட்டும் பயந்து),
- மூளை வேலை செய்யாமல் போகும் அளவிலான எந்தக் காரியத்தையும் செய்யாம-ருந்தால் ...

பரலோகத்திலும் போய் அழுது கொண்டிருக்க வேண்டியதிருக்காது! (வெளி. 21:4). விஷ விதைகளை விதைத்து விடாமல் தேவனால் காப்பாற்றப்படுவோம். ஆபிரகாமைப் போல நல் சுவிசேஷ வித்துக்களை முளைக்க வைப்போம். (எபி.7:2, யாக். 2:23)

பாழாக்கும் அருவெறுப்பைக் குறித்து தானியேல் சொல்-யிருக்கிறாரே! (தானி. 9:27) அது அந்திக்கிறிஸ்துவைப் பற்றியது என்றாலும் இதற்கும் பொருந்தும். ஏனென்றால் அந்திகிறிஸ்துவின் ஆவி இக்காலங்களிலும் கிரியை செய்து கொண்டிருக்கிறது என்பது வெளிப்படை. (1 யோவான். 2:22) அருவெறுப்பான செட்டைகளுடன் வரும் அந்த அசுத்த ஆவிகள், வலையையும் விரிக்கிறது. (சங்:55:6) இளைஞர்களின் கால்கள் மறைவாக வைக்கப்பட்டிருக்கும் கண்ணிகளில் மாட்டிக் கொள்கிறது. அன்றைய "XX" பாவம் இன்று "XXX" ஆகி நிற்பதைப் பார்க்கும் போது மலைக்கு ஓடிப் போங்கள். அது "நிற்கத் தகாத இடம்". "நிற்கத் தகுந்த இடம்"என்பது தேவனின் சமூகம், அவருடைய பிரசன்னம் சூழ்ந்த இடம், அவருடைய வேலைகள் நடக்கும் இடம் என்று எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். சிந்தியுங்கள். சோவாருக்குப் போய் சமாளிக்கலாம் என்று முயற்சிக்க

வேண்டாம். (மலை என்பது ஜெப அனுபவத்தைக் குறிக்கிறது). இளைய தலைமுறையினரைக் காப்பாற்றுவோம். இனிவரும் காலங்களில் சுவிசேஷத்திற்கு வித்திட அவர்கள்தான் இருக்கிறார்கள். அவர்கள் முக்கியம், அவர்களுடைய இளமையும், வயதும் இயேசுவுக்கு மிக மிக முக்கியம்! (நீதி.20:29) வாலிபர்கள் தங்கள் பராக்கிரமத்தை ஆயுதமாக இயேசுவிடம் கொடுக்கும் போது அவர் அதை உபயோகித்து எதிரிகளை அழிப்பார். (சங். 60:12)

நம்மைப் போன்ற, வயதாகிப் போனவர்களின் காலம் மலையேறிக் கொண்டிருக்கிறது என்பதை வெட்ட வெளிச்சமாக்கிக் கொண்டிருக்கும் நரைமுடிகள்! மறைக்க முயற்சிக்கலாம், கடிகார முள்ளை நிறுத்தி வைக்கலாம், ஆனால் காலத்தை பின்னோக்கி திருப்பி விட முடியாதே!

இளைய தலைமுறையினரைக் கொன்று குவிக்க சாத்தான் எடுத்திருக்கும் இந்த முயற்சிகள் மீது கந்தகத்தையும் அக்கினியையும் இறக்குவோம்!

ஆண்டவர் **(Slow Motion-ல்)** அசமந்தமாக ஆடிக்கொண்டுப் போகச் சொல்லவில்லை, ஓடிப் போகச் சொல்கிறார். பாலிய இச்சைக்கு விலகி ஓடுங்கள்... (2 தீமோ. 2:22) என்ற வசனத்தை நினைவுபடுத்திக் கொள்வது நல்லது. ஓடாமலேயே நான் ஒழுங்காக இருப்பேன் என்று வாதிடுவது? எப்படி இருக்கிறது தெரியுமா? நம் **(dress)** ஆடைக்குள்ளேயே நெருப்பை வைத்துக் கொள்வதைப் போலத்தான்! (நீதி. 6:27)

“ஓடுதல்” என்பது ஒரு அவசரமான செய்கையைக் குறிக்கிறது. அதாவது **Maximum** அந்த இடத்தில் நிற்கும் நேரத்தைக் குறைக்க எடுக்கப்படும் அவசரகால முயற்சி என்று சொல்லலாம். அசுத்தம் இருக்கும் இடத்தில் அதிக நேரம் நின்றால் கூட காற்றில் வியாதிக் கிருமிகள் பரவி “**infection**” ஆவதைப் போலத்தான் இதுவும்.

இயேசு கிறிஸ்துவின் அதிகப்படியான மலை ஜெப அனுபவம்தான் நாம் நித்திய ஜீவனை அடைய, வாசலைத் திறந்தது. சோவாரின் அனுபவம் அதற்கு எதிர்மறையானதைத்தான் செய்யும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஜெபம் மட்டுமே நம்மையும் காப்பாற்றி, அடுத்தவரையும் இழுத்துக்கொண்டு ஓடும் வல்லமையை நமக்குத் தரும் என்பதிலும் எவ்வித சந்தேகமுமில்லை. யோசித்துக் கொண்டு நின்றாலும் ஆபத்து, இறங்கினாலும் ஆபத்து, திரும்பினாலும் ஆபத்து! உபத்திரவங்களின் “உச்ச கட்ட” காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், அந்த “உச்ச கட்ட” பாவத்தில் இருந்து இக்காலத் தலைமுறையினரைக் காப்பாற்ற நமது ஜெப நேரத்தை அதிகப்படுத்துவோம்.

“வெறுப்பில் அலையும் மனிதர் மேல் நமக்கிருக்கும் பொறுப்பை உணர்ந்து கொள்வோம்”. “கோதுமை மணி”களாக உருவெடுப்போம். (ஓசியா. 2:23), இயேசுவிடம் என்னை அனுப்பும் “நான் போகிறேன்” என்போம். (ஏசாயா. 6:8)!

### இக்கால இளைஞர்களின் கவனத்திற்கு...

“அழகான சுவிசேஷக் காலணிகள்” உங்கள் அளவுகளுக்கேற்ப **(ready)** ஆயத்தமாக இருக்கிறது (ஏசா. 52:7). வரிசையில் **(Queue)** நிற்க வேண்டிய அவசியமில்லை, தேவைக்குப்போக மீதிகூட இருக்கும். “அறுப்பு மிகுதி ராஜாவே, ஊழியம் தந்திடும்” என்ற பாடல் வரிகள் எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஆனால் கொஞ்சம் நிறுத்தி யோசித்தேன். ஊழியம்தான் தந்தாகிவிட்டதே, நாம்தான் இன்னும் செயல்படாமல் இருக்கிறோம்.

நமக்காக வந்த இயேசு... தன்னந்தனியாக ஆலையை மிதித்துக் கொண்டிருக்கிறார். (ஏசாயா. 63:3) இளைஞர்களே! வாருங்கள்,

சிலுவையைப் பார்த்து தயங்காதீர்கள். (மத். 10:38) இயேசு யோசித்திருந்தால்... நம் நிலைமை என்னவாகியிருக்கும்? (சங். 40:7)

## வாக்குத்தத்தம் பண்ணினவர் சர்வ வல்லமையுள்ளவர்

அது மட்டுமல்ல, அவர் சகலத்தையுமே செய்து முடிக்க வல்லவர். அவருடைய வல்லமையைப் பரிபூரணமாக விவரிக்க வேண்டுமானால், அதற்கு அவர்தான் புறப்பட்டு வரவேண்டும். வேறு யாராலும் முடியாது. என்றாலும் அவருடைய வல்லமையின் ஒரு "அணு" வைப் பற்றிய **"Explanation"**!

சூரியனின் ஈர்ப்பு சக்தி திடீரென்று இல்லாமல் போய்; நம் பூமி விண்வெளியின் ஒரு இருண்ட முடிவுப் பகுதிக்குள் ஓடி, மறைந்து விடக்கூடிய ஒரு பயங்கரம் நடக்கப் போவதாக விஞ்ஞானிகள் கண்டு பிடித்து விட்டதாக ஒரு கற்பனையை உதாரணத்திற்காக எடுத்துக் கொள்வோம்.

இந்த ஆபத்தைத் தடுக்க உலகத்திலுள்ள பொறியியலாளர் (Engineers) ஒன்று சேர்ந்து திட்டமிடுகின்றனர். அதாவது பூமியை அதன் சுழல் பாதையை விட்டு விலகி விடாமல் அதை சூரியனுடன் இணைக்க கண்ணுக்குத் தெரியாத ஈர்ப்பு விசைக்குப் பதிலாக உறுதியான "உருக்குத் தூண்கள்" அமைக்க முடிவெடுக்கின்றனர்.

1 ச. மி.மீட்டருக்கு 100 கி.கிராம் இழுப்பு விசையை தாங்கக் கூடியது. 5 மீட்டர் குறுக்களவுள்ள இரும்புத் தூணின் குறுக்கு வெட்டின் பரப்பளவு 2,00,00,000 ச.மி.மீட்டர்! (20,00,000 டன் எடை இதன் மீது மோதினால் தான் தூண் உடைந்துவிட வாய்ப்பு இருக்கிறது.)

இந்த அளவிலான, சூரியன் வரை நீண்டிருக்கக் கூடிய சுமார் 1 லட்சம் கோடி தூண்கள் செய்தால் தான் போதுமானதாக இருக்கும். (ஒவ்வொரு தூண்களுக்கும் இடையிலான இடைவெளி, அந்த தூண்களின் தடிமனை விடக் குறைவானதாக இருக்கும்). இது சூரியனை அதன் சுழற்பாதையில் இருந்து திருப்பி **3mm/Sec.** என்ற அளவிற்குத்தான் திரும்பச் செய்ய முடியும். இத்தனை பிரமாண்டமான விசையை **(30,000 M/Sec.)** கண்ணுக்குத் தெரியாத அளவில் உருவாக்கியிருக்கும் தேவனுடைய "சர்வ வல்லமையை" **Calculate** பண்ணுவதால் ஒரு பிரயோஜனமும் இல்லை! (பூமியின் மீது மட்டும் செயல்படுத்தப்படும் அவருடைய வல்லமையின் ஒரு "தூசி" அளவிலான உதாரணம் தான் இது. "விண்வெளி" மீதான அவருடைய வல்லமையைக் கணக்கிட்டால்? போட வேண்டிய (Zero) ஜீரோவைக் கணக்கிட முடியாது.)

சந்தேகமே இல்லாமல் நம் இயேசு சர்வ வல்லவர்தான், அப்படியானால் ஏன் வாக்குத்தத்தம் நிறைவேறவில்லை? அவருடைய "வல்லமை" நம்முடைய விஷயத்தில் அப்படியே செயல்படாமல், (நாம் செயல்படுத்தாமல்) இருப்பதுதான் காரணம். அவருடைய வல்லமை வெளிச்சிதறலுக்குள்ளாக வேண்டும். அதாவது அதை வெளியே கொண்டுவர வேண்டும். வல்லமை என்பதை "கதவு" என்று வைத்துக் கொண்டால், பூட்டைத் திறக்க ஒரு "சாவி" தேவை, அது தான் விசுவாசம். உலகத்தில் தயாரிக்கப்படும் எந்தப் பூட்டுமே, சாவி இல்லாமல் தயாரிக்கப் படுவதில்லை.

"பெரும்பாடுள்ள பெண்ணின்" விசுவாசத் தொடுதலால், இயேசுவின் வல்லமை வெளிப்பட்ட போது, அவளுக்குச் சுகம் கிடைக்கிறது. எசேக்கியா ராஜாவின் விசுவாசமோ, அவனுடைய சந்ததியில் உலக இரட்சகரையே பிறக்க வைத்தது! அல்லேலூயா!! (மத்.1:10)

அதாவது நம் விசுவாசம் அவருடைய வல்லமையின் மீது கிரியை

நடப்பிக்கிறது. ஒரு பச்சை நிற (Table Cloth)மேஜைவிரிப்பின் மீது வெள்ளை நிற ஒளியை வீசச் செய்தால், அது பச்சையாகத்தான் இருக்கும். ஏனென்றால் மற்ற நிறக் கதிர்களைக் கிரகித்துக் கொண்டு பச்சையை மாத்திரம் சிதறடிக்கிறது. ஆனால் அதே மேஜை விரிப்பின் மீது சிவப்பு, வயலெட் நிற வெளிச்சங்களை கலந்து பாய்ச்சினால் விரிப்பு வயலெட் கலரில் நமக்குத் தெரியும். ஏன்? பச்சை நிற விரிப்பு, சிவப்பு நிறத்தின் பெரும் பகுதியை உறிஞ்சிக் கொண்டு, வயலெட் நிறத்தை மட்டும் ஒளிச் சிதறலுக்குள்ளாக்குகிறது. ஒரு சிவப்புப் பூவின் மீது, அதே சிவப்பு நிற ஒளியைக் காட்டினால், அந்தப் பூ வெள்ளையாகக் காட்சியளிக்கும்! பூ சிவப்பு நிறத்தை ஜீரணித்து விட்டு, வெள்ளையை மட்டும் வெளிக்காட்டுகிறது என்று சொல்ல வேண்டியதில்லை."ஒரு பரப்பு, தான் கிரகித்துக் கொள்ளும் ஒளிக்கதிர்களை விட சிதறடிக்கும் கதிர்களின் நிறத்தையே அதிகம் பெறுகிறது". **(Rayleigh's scattering law)**

இதைப் போலவே நம் விசுவாசத்தைத் தேவன் மேல் வீசச் (அசைவாடச்) செய்யும் போது, அவர் நம் விசுவாசத்தை விட, அவருடைய வல்லமையைப் பல மடங்கு அதிகமாகவே வெளிப்படுத்துகிறார். அதனால்தான் இயேசு "கடுகளவு" விசுவாசத்தையாவது (Practice) அப்பியாசம் பண்ணச் சொல்கிறார். அந்தக் கடுகு விதை போய், தேவனுடைய வல்லமை வெளியே வரும்படி வாசலைத் திறக்கும் போது, அது பரலோக இராஜ்ஜியத்தின் ஒரு மகத்தான திட்டத்தை நிறைவேற்றி முடிக்கும் அளவிற்கு மகா பெரிய மரமாகிறது. தேவனுடைய வல்லமையை வெளிப்படச் செய்யும் போது நாம் உலகத்திற்கே ஆசீர்வாதமாக மாற முடியும்.

## விசுவாசம்:

சந்தேகம் கலந்த அரைகுறை விசுவாசம்; மழையைத் தராத வெற்று மேகங்களைப் போன்றவை (லூக்கா. 24:21). அழகிய ரோஜா மலர்கள் பூத்திருக்கும் தோட்டத்திற்குள் உலாவும் போது இருக்கும் அதே விசுவாசம், முள் காட்டிற்குள் நடந்து செல்லும் போதும் இருக்குமானால் அதுதான் சரியான விசுவாசம்.

நம்முடைய வாழ்க்கையே - பிழைப்பே - உயிர்வாழ்தலே - அது தேவ சார்புடைய விசுவாசத்தில்தான் இருக்கிறது. (எபி.10:38) நெம்புகோல் விதியை கண்டுபிடித்த **Archimedes** என்பவர், "இன்னொரு புவிக்கோளம் இருக்குமானால்; அங்கே நின்று கொண்டு நெம்புகோலால் பூமியைத் தூக்கி விடுவேன்" என்று கூறினார். நெம்புகோல் விசையால் மிகப் பளுவான சுமையையும் தூக்க முடியும் தான்... ஆனால் பூமி எவ்வளவு பிரமாண்டமானது என்று தெரிந்திருந்தால் அப்படிச் சொல்லியிருப்பாரா?

பூமி 6,00,00,000,00,00,000,00,00,000 டன் எடையுடையது (ஆறு கோடி கோடி கோடி) என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஒரு மனிதனால் 60 கிலோ எடையைத் தூக்க முடியுமானால் பூமியை தூக்குவதற்கு குட்டையான புயத்தை விட நூறு கோடி கோடி கோடி மடங்கு அதிக நீளமுள்ள நீண்ட புயத்தையுடைய நெம்புகோல் தேவை. (உ.ம்: 100,00,00,000,00,00,000,00,00,000)

ஆர்க்கிமிடீஸ் **(Archimedes)** விருப்பப்படி இன்னொரு பூமி கிடைப்பதாகவும், பூமியைத் தூக்க தேவையான அளவு நெம்புகோல் செய்ய முடிவதாகவும் வைத்துக் கொள்வோம். நெம்புகோலின் புயத்தின் முனை 1 செ.மீ. அளவிற்கு உயர்வதற்கு மற்ற புயம் வான வெளியில் 16,000 கோடி கோடி கி.மீ. நீளத்திற்குப் பிரமாண்டமான வில் வளைவில் நகர வேண்டியதாயிருக்கும். 3,00,000 கி.மீ./வினாடி என்ற ஒளியின் வேகத்தில்

நெம்புகோலைத் தள்ளினால் 1 கோடி ஆண்டுகள் தள்ளிய பிறகுதான் அவர் பூமியை 1 செ.மீ. உயரத்திற்குத் தூக்கியிருப்பார்!

இது, ஒரு மனிதன், சாதாரணமான நெம்புகோல் மீது வைத்திருந்த நம்பிக்கை வார்த்தைகள்தான். ஆனால் உண்மையாகவே அவர் சொன்னதைப் போன்ற பிரமாண்டமான காரியத்தைச் சாதித்துக் காட்டிய ஒரு மனிதனை வேதத்தில் நாம் பார்க்கிறோம். (யோசுவா.10:12,13,14) பூமியின் சுழற்சியை ஒரு பகல் முழுவதும் நிறுத்திக் காட்டினார் யோசுவா! விசுவாசம்தான் அவருடைய நெம்புகோல். இந்த விசுவாசத்தைத்தான் இயேசு நமக்குள் துவக்கியிருக்கிறார். அதை நாம் சாவியாக உபயோகிக்காமல் இருப்பதால் வாக்குத்தத்தக் கதவுகள் பூட்டியே கிடக்கின்றன. (மத்தேயு. 16:19)

## வாசல் வரைக்கும் வந்த யுத்தம்:

"யுத்தம்" என்றவுடன் நினைவில் வருவது "ஆறாக ஓடும் இரத்தம் தான்". போரை யாரும் விரும்புவதில்லை; என்றாலும் சில வேளைகளின் தேவனுடைய பிள்ளைகளின் வாசல் வரைக்கும் இந்த அபாயம் வருகிறது. சில வேளைகளில் வாசலுக்குள்ளேயும் நுழைந்து விடக்கூடிய பேராபத்தையும், தேவ பிள்ளைகளே உருவாக்கி விடுகிறார்கள்.

அப்படி என்னதான் செய்கிறார்கள்? நூதன தேவர்களை தெரிந்து கொள்வதால் (நியா. 5:8) என்று வேதம் எச்சரிக்கிறது. புறஜாதியார் வழிபடும் தேவர்களை தங்கள் எல்லைகளில் நுழைய விட்டு விடுவதுதான் காரணம். (உலகமெங்கும் தேவனை அறியாத புறஜாதியார் வணங்கும் தெய்வங்கள் "முப்பது முக்கோடி" என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதாவது 30X 3,00,00,000 = 90,00,00,000) நம் எல்லைகளுக்குள் முற்றுகையிட்டபின் அந்த தேவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள், இருக்கவும் முடியாது. நூதனமான காரியங்களைச் சொல்-க் கொடுப்பார்கள். (அப். 5:5)

கொடுக்க வேண்டிய காணிக்கையைக் கொடுக்காதபடி அதிலும் ஒரு பகுதியை வஞ்சிக்க வைத்து "தேவனிடத்தில் பொய் சொல்லும்" அளவிற்கு நமக்குக் கடின இருதயத்தை உண்டாக்குவார்கள் அந்த தேவர்கள்.

அதுமட்டுமல்லாமல், பொய்யையும் சொல்லும்படி ஏவி விட்டு, கர்த்தருடைய ஆவியையே சோதிக்கும் அளவிற்கு துணிகரத்தில் கொண்டு போய் நிறுத்தி விடுவார்கள் அந்தப் பொல்லாத தேவர்கள். அனனியாவும், சப்பீராளும் சேர்ந்து செய்த அந்தக் "காரியத்திற்கு" என்ன பலன் கிடைத்தது? அனனியாவை அடக்கம் செய்தவர்களின் "கால்கள் வாசல் வரைக்கும் வந்தது" வாசலுக்குள்ளேயும் வந்தது, சப்பீராளின் பிரேதத்தையும் தூக்கிச் சென்றது!

அப். 5-ம் அதிகாரத்தில் வரும் சம்பவம் ஒழுங்காக காணிக்கை கொடுக்காத ஒவ்வொரு வீட்டிலும் நடக்க வேண்டுமே! அப்படி நடக்காததற்கு என்ன காரணம்? (யார் காரணம் என்று கேட்டால் பொருத்தமாக இருக்கும்.) நம் நித்திய பிரதான ஆசாரியரான, பரிந்து பேசும் தெய்வமான இயேசுதான் காரணம். அவருடைய "கிருபையின் காலத்தின் நீட்டிப்பு" (Extension) "நீடிய பொறுமை" ஆகியவை எல்லைப் புறங்களில் பிதாவினுடைய கோபத்தைக் குறைத்து விடுவதுதான் காரணம்! அதனால் தப்பித்து விடுகிறார்கள்.

ஆனால் இதே சூழ்நிலை எப்போதுமே இருக்காது, "சுவிசேஷத்தைப் பிரசங்கியாதிருந்தால் ஐயோ" என்றால் "சுவிசேஷத்திற்காக விதைக்காதிருந்தாலும்..." அது கடமை, கட்டாயம். (Compulsory)

## நம் பிரச்சனைகளுக்குக் காரணம் நாமே தான்!

நம்முடைய நிகழ்காலப் பிரச்சனைகளுக்கு (விளைச்சலுக்கு) நம் இறந்த கால அறியாமையினால் (விதைப்பினால்) நாமே தான் காரணமாகிப் போனோம். அப்படி என்ன செய்துவிட்டோம்?

ஒன்றா, இரண்டா அடுக்குவோம்...

1. சாத்தானின் ஆளுகைக்குள் சுகமாகப் படுத்திருந்தோம்... (மத்தேயு 16:27) 2. அவிசுவாச அறிக்கைகள்... (லூக்கா 6:45) 3. நம் கையின் வேலைகளில் பிரயாசம் எடுக்காததினால்... (லூக்கா 19:15) 4. தேவனை விட்டு வழி விலகிப் போனதால்... (யோவான். 16:32) 5. நிலையற்ற மனது... (ரோமர் 15:5) 6. சோம்ப-ன் கை வேலை... (1 கொரி. 3:8) 7. கிறிஸ்து என்ற அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கும் நம் ஆவிக்குரிய கட்டடத்தில் பிரச்சனைகள்... (1 கொரி. 3:10). 8. அழைப்பை அசட்டை பண்ணியதால்... (1 கொரி. 7:17) 9. நம்மை மட்டுமே பாதிக்கும் விஷயங்களைப் பற்றியே கவலைப்படுவது... (1 கொரி. 11:20) 10. காணிக்கையா? - "ஏனோ தானோ" (1 கொரி 16:2) 11. செய்த தீமைகள் - நன்மை செய்ய சந்தர்ப்பம் கிடைத்தாலும் தட்டிக்கழித்ததால்... (2 கொரி. 5:10) 12. நம் கண்ணில் உத்திரத்தை வைத்துக் கொண்டு, அடுத்தவர் கண்ணில் இருக்கிற துரும்பை எடுக்கிறேன் என்று சொல்லி நம் உத்திரத்தால் அவர்களை இடித்துத் தள்ளுவது! (கலாத்தியர் 6:4) 13. யானை மாதிரி நம் மேலேயே புழுதியை கொட்டிக் கொண்டு... (கலா. 6:5) 14. "பொய்"யைப் பேச்சு வழக்காய் மாற்றுவது... (எபே. 4:25) 15. அன்பில்லாமல் போனதால்... "ஆவியின் கனிகள் வெம்பி, பழுப்பதற்கு முன்பாகவே உதிர்ந்து விட்டன" (எபே. 5:33) 16. பரிசுத்தக் குறைச்ச-னால்... நம் பாளையத்திற்குள்ளாக தேவன் காலடி வைக்க யோசிப்பார்... (1 தெச. 4:5) 17. கடைசியாக நம் சுய இச்சைகளினால் இழுக்கப்படுவதால்... முடிச்சு விழுந்து விடுகிறது! (யோவான். 1:14) என்ன? (What?)

ஒரு கூஜாவையும் தூக்கிக் கொண்டு, அவன் (சாத்தான்) சொல்லும் எல்லாவற்றிற்கும் "பூம்பூம்" என்று தலையையும் ஆட்டிக் கொண்டு, அவனோடு கை கோர்த்துக் கொண்டு, தெருத் தெருவாக சுற்றினோமே... அப்போதுதான் இந்த "முடிச்சு" விவகாரத்தில் மாட்டிக் கொள்கிறோம்.

தேவன் வாக்குப்பண்ணியிருக்கும் செழிப்பின் நாட்களைத் தொலைத்து விட்டு கையைப் பிசைந்தபடி நிற்கும் இந்நாட்களிலாவது புத்தி வந்தால் நலமாயிருக்கும். "விதை" என்ற Project நம் விசுவாசப் பரீட்சைகள் நிறைந்த வாழ்க்கைக்குத் தேவையில்லாதது என்று "சாத்தான் ஊதிய சங்கை" நம்பினோம்.

## இப்போது நிலைமை என்னவாச்சி என்று கவனிப்போமா?

"முடிச்சு" என்றால் என்னவென்று தெரியும் ஆனால் அது உருவாகும் விதம் தெரிந்தும், தெரியாமலும் இருக்கும். "ஒரு கயிற்றின் மீது அதே கயிறு சுற்றப்படுவதைத்தான்" முடிச்சு என்கிறோம்! (Oiler Theory) (முடிச்சுடன் இருக்கும் கயிற்றின் வளைவுகளைக் கவனித்துப் பார்த்தால் புரியும்) இப்படிச் சுற்றப்படும் போது உராய்வு ஏற்படுவதால் முடிச்சு அவிழ்வதில்லை. வளைவுகள் அதிகமாக ஆக ஆக சுற்றுக்களின் எண்ணிக்கையும் அதிகமாக "சுற்றுக்களின் கோணங்கள்" அதிகரிக்கிறது.

அதனால் முடிச்சு இறுகி, மேலும் கெட்டியாகி விடுகிறது.

அவிழ்க்க முடியாத அளவுக்குச் சிக்கலாகி, அவிழ்க்க முயன்றால் அறுந்து விடுகிறது. ஒரு வேளை அவிழ்க்க முடிந்தாலும் கயிறு பலவீனமாகி விடுகிறது. ஒன்று சாத்தானிடமிருந்து தப்பிக்க முடியாத அளவுக்கு நெருக்கத்தில் மாட்டுகிறோம், தப்பித்து வந்தாலும் பாதிப்புகள் தொடர்கிறது. (ஆவி, ஆத்மா, சரீரம் மூன்றிலும்)

விதைக்காமல் தரிசாகிப் போன விளை நிலங்கள்... காலங்கடந்து விதைப்பதால் நல்ல மகசூல் கொடுக்க முடியாத பாதிப்புகள்... நிலத்தைப் பண்படுத்தினாலும் அதன் ஆரம்ப வளமை திரும்பாத சோக நிலை. சரி, முடிந்ததை நினைத்து மூலையில் உட்காராமல் இனியாவது பிரயாசம் எடுத்தால் "உலர்ந்த எலும்புகள் உயிரடையும்" எலும்புக் கூடுகளின் மீது (இரட்சிக்கப்படாத ஆத்மாக்கள்) தோல், மாமிசம், எலும்பு, இரத்தம் உருவாகி அசைவு ஏற்படும். (எசே. 37:1-10) கிறிஸ்துவுக்காக மகா பெரிய சேனையாய் எழும்பி நிற்கும். இதில் ஏதாவது ஒரு வேலையைச் செய்ய நம் விதைப்பு பிரயோஜனமாகட்டுமே!

## இருள் சூழும் காலம் இனி வருதே...

இது கிருபையின் காலம் (யாரும் கிரியை செய்ய முடியாத இராக்காலம் இனி வருகிறது) (யோவான். 9:4) காலம்...இது அஞ்சல்காரனின்(**Postman**) ஓட்டம் போல, நெய்கிறவன் எறிகிற நாடாவைப் போல ஓட்டமாய் ஓடி மறைகிறது. (யோபு. 7:6)

சாய்வு நாற்கா-யில் (**Easy Chair**)-ல் சாய்ந்து கொண்டு, கைகளைக் கழுத்துக்குப் பின்னால் மடக்கி வைத்துக் கொண்டு, விட்டத்தில் கூடு கட்டிக் கொண்டிருக்கும் எட்டுக்கால் பூச்சியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க இது நேரமில்லை. (மாற்கு. 4:29)

ஒரு நிமிடம், ஏன் ஒரு வினாடி கூட நாம் அற்பமாக நினைக்கும் அளவில் இல்லை. அந்த நேரத்தில் கூட தேவ இராஜ்ஜிய கட்டுமான வேலையில் ஒரு செங்கலையாவது நம்மால் எடுத்துக் கொடுக்க முடியும்.

முற்காலங்களில் நிமிஷம் ஒரு பொருட்டாக நினைக்கப்படவில்லை. சூரிய வெளிச்சத்தில் தெரியும் நிழ-ன் நீளத்தை வைத்து "மணி"யை மட்டும் கணக்கிட்டனர். (உன். 2:17) பிறகு பழக்கத்திற்கு வந்த மணல் கடிகாரம், நீர்க்கடிகாரம், கைக்கடிகாரங்களில் நிமிஷத்தைக் குறிக்கும் தனிப்பிரிவு எதுவும் இல்லை.

நிமிஷ முள் 18ம் நூற்றாண்டின் துவக்கத்திலும், வினாடி முள் சுமார் 200 ஆண்டுகளுக்கும் முன்பாகத்தான் வழக்கத்தில் வந்தது.

ஆனால் ஒரு வினாடியில் 1/1000 (ஆயிரத்தில் ஒரு பங்கு) கூட முக்கியம் தான்! இந்த நேரத்தில் ஒரு சாதாரண புகைவண்டி (**Train**) 3 செ. மீட்டரும், ஒ- 33 செ. மீட்டரும், விமானம் 1 மீட்டரும், பூமி தன்னுடைய சுழல் வட்டப்பாதையில் 30 மீட்டரும், ஒளி 300 கி. மீட்டரும் நகர்ந்து போய்விடும்!

கொசு 1 வினாடியில் 500 - 600 முறை தன் இறக்கையை அடித்துக் கொள்கிறது. 1/1000 வினாடியில் இதனால் தன் இறக்கையை தூக்கவோ அல்லது இறக்கவோ முடியும். நாம் கண்ணிமைக்கும் நேரம் 400/1000 வினாடி. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது நாம் மறுரூபமடைய இவ்வளவு நேரம்தான் கொடுக்கப்படும்! (1 கொரி. 15:51) அல்லேலூயா!!

நவீன அறிவியல் முன்னேற்ற காலத்தில் 1/10,000 வினாடியைக் கூட

கணக்கிடக் கூடியதாக இருக்கிறது. ஆனால் இன்றோ, பௌதிகவியலாளர்களால் 10,000 கோடி/வினாடி. ஒரு பகுதியைக்கூட கணக்கிட முடியும்! "காலம்" என்பது நாம் நினைக்கும் அளவுக்கு அவ்வளவு எளிதான விஷயமல்ல. சாக்குப் போக்குச் சொல்லி, தட்டிக் கழித்து விட்டு ஓடி விட முடியாது. காலத்துடன் போட்டியிட்டு ஓட வேண்டிய அவசர நேரமிது. நம்மையும், நமக்குள்ள எல்லாவற்றையும் விரைவாக விதைக்க வேண்டிய கட்டாய காலகட்டத்திற்கு வந்திருக்கிறோம்.

பல பாடுகளைக் கடந்து "ரூத்"தைப் போல "அறுப்புக் காலத்தில்" வந்து சேர்ந்திருக்கிறோம். (ரூத். 1:22) நமது பங்கை நாம் சேகரிப்போம்.

"கண்கள் மேகங்களோடு உலாவச் சென்றிருந்தாலும், கைகள் என்னவோ ஜன்னல் கம்பிகளோடுதான்" என்பதான வெட்டிக் கவிதைகளை எழுதுவதற்காக ஜன்னலோரமாக நேரத்தை வீணடிக்க வேண்டாம். (சங். 31:6) "நிலா பார்த்து நாளாச்சி" என்ற தலைப்பில் புதிய கவிதைத் தொகுப்பு வெளியிட வேண்டுமென்று, சுற்றுக்கட்டில் நின்று கொண்டு, தென்னங்கீற்றின் இடைவெளியில் நிலாவைப் பேட்டியெடுக்க முயற்சிக்க வேண்டாம். அது 29 நாட்களுக்குள் பூமியைச் சுற்றி வந்தாக வேண்டும்... உங்களுடன் பேசிக் கொண்டிருக்க அதற்கு நேரமிருக்காது... தேவனின் செயல்திட்டப்படி, அவரது சொல் கேட்டு, சுமார் 6500 வருடங்களாக நிற்காமல் ஓடிக் கொண்டிருக்கும் அந்த நிலாவுக்குக் காலத்தின் அருமை நிச்சயமாய்த் தெரியும். ஆனால் நமக்கு? (சங். 119:113)

நேரத்தின் அருமையை உணர்ந்து கொண்டு இனிமேலாவது அதை தேவப்பணிக்கான ஆயுதமாக்குவோம். (2 கொரி. 4:17)

## இயேசுவின் கரங்களில் ஆயுதங்களைக் கொடுப்போம்...

ஜெபம் ... தன்னோடு பேச நம் பிதாவாகிய தேவன் ஒழுங்கு செய்து தந்திருக்கும் இந்தத் திட்டத்தில் நம் பரிசுத்தாவியானவராகிய தேவனும், நம் இரட்சகர் இயேசு கிறிஸ்துவும் அதிகப்படியான பங்கை எடுத்துக் கொள்கிறார்கள். தேவதூதர்கள் படிக்கட்டுகள் அமைக்கின்றனர்.

தேவனை அறியாத உலக மக்கள் கூட தேவனிடம் பேசவே செய்கின்றனர். அவர்களுக்கும் தேவன் ஒருவர் உண்டு என்பது தெரியும். நம் தேவனே எல்லோரையும், எல்லாவற்றையும் "உரு"வாக்கியவர். "உரு"வாக்கிக் கொண்டிருப்பவர். "உரு"வாக்கப் போகிறவர் என்பதால் தன்னைத் தேடும் உணர்வை ஒவ்வொரு மனிதனின் ஆவியிலும் விட்டு வைத்திருக்கிறார். அது யாராக இருந்தாலும் சரி. ஆனால் அவர்களுக்கு இயேசுவின் நற்செய்தி இன்னும் சென்றடையாததினால் (reach) ஆகாததினால், அல்லது அவர்கள் இன்னும் தேடிக் கண்டுபிடிக்காததினால் (search) பண்ணாததினால், அந்த தேவன்தான் "இயேசு" என்று அறியாமல், அவருடைய மகிமையை அவருடைய "கிரியை"களுக்கு (சூரியன், மரம், கல், பாம்பு, மனிதர்கள், தேவதூதர்கள்) கொடுத்து வருகிறார்கள். (எசேக். 3:6)

இவர்கள் ஜெபம் தேவனிடம் போய்ச் சேர்வதில்லை. ஏனென்றால் இவர்களின் வேண்டுகோள் மிகவும் வேடிக்கையாக இருப்பதால்.

தூத்துக்குடியில் இருக்கும் ஒருவர் சென்னையில் இருக்கும் தன் நண்பருடன் சில விஷயங்களைப் பேச நினைக்கிறார். "550" கி.மீ. நீளமுள்ள ஒரு குழாய் அமைத்து அதன் வழியாகப் பேசுகிறார். அந்த பக்கமிருந்து நண்பர் காதை வைத்துக் கேட்கத் தயாராகிறார். (நவீன தகவல் தொடர்பு சாதனங்களை, விசேஷமாக தொலைபேசிஇ மொபைல் போன் (Esp: Phone, Cell Phone)- களை, கொஞ்ச நேரம் ஓரம் கட்டுவோம்)

குறித்த நேரத்தில் ரெடி. ஒன்று இரண்டு மூன்று ஆரம்பம் (Ready! one, two, three, Start!) சொல்ல, பேச்சு ஆரம்பமாகிறது. தூத்துக்குடியில் இருந்து சென்னை வரைக்கும் நீண்டிருக்கும் அந்த குழாய் வழியாக சென்னை நண்பருக்கு சில வார்த்தைகளடங்கிய ஒரு கேள்வியைக் கேட்டு விட்டுப் பதிலுக்காக காத்திருக்கிறார். 5 ... 10 ... 15 ... 20 ... நிமிடங்களாகியும் பதில் வரவில்லை. குழாய்க்கு என்னவோ ஆகி விட்டது என்று யோசித்து, கவலைப்பட்டு,... திரும்பப் பேச ஆரம்பிக்கிறார். சார், அவசரப்படாதீங்க, உண்மையில் உங்கள் கேள்வி இன்னும் சென்னை சென்றடையவில்லை, அது பாதி வழியில்தான் நிற்கிறது. நண்பர் அதைக் கேட்க "35 நிமிட" நேரமும், பதில் அனுப்ப "35 நிமிட" நேரமும் ஆகும். (ஒலி 1/3 கி.மீ/வினாடி என்ற வேகத்தில் செல்கிறது.) என்று நீங்கள் சொல்ல ...

சார், சார், நிறுத்துங்க! நீங்க சொன்னபடியும் நடக்காது. உண்மையில் தூரம் செல்லச் செல்ல, ஒலி மங்கி விடுவதால் கடைசியில் சத்தமே இல்லாமல் போய் விடுகிறது. அதனால் குழாயின் மறுமுனையில் இருப்பவரால் எதையும் கேட்கவே முடியாது, இந்த முறையில் உரையாடல் நடத்தவே முடியாது.

தூரத்தில் உள்ள நபருடன் பேச தொலைபேசி போன்ற விரைவுத் தகவல் தொடர்பு சாதனங்கள் பெருகியிருக்கும் நவீன இந்தக் காலத்தில், (பணக்கார வீட்டு நாய் கூட மொபைல் போன் (Mobile Phone) வைத்திருக்கும் இந்தக் காலத்தில்!?) இப்படிப் பேச முயற்சிப்பவர்களைப் பார்த்தால் என்ன நினைக்கத் தோன்றும்? (மத்.15:9)

சகல ஜனங்களும் தன்னுடன் தொடர்பு கொள்ள தேவன் "இயேசு" என்ற நாமத்தை ஏற்படுத்தியிருக்க, ஜனங்களோ சாத்தானின் ஆலோசனையுடன் இப்படிப்பட்ட, நான் மேலே சொன்ன பிரகாரம் வேடிக்கையைச் செய்து காட்டி வருகிறார்கள். ஆனால் நம் தேவன் தன் குமாரன் இயேசு மூலமாக பல உன்னத வழிகளையும், தொலைபேசி போன்ற "விரைவுத் தகவல் தொடர்புகளையும்" எரேமியா. 33:3 போன்ற அவசரத் தொலைபேசி எண்களையும் கொடுத்திருக்கிறார்! என்றாலும் தேவன் தந்திருக்கும் தகவல் தொடர்புகளை நாம் போதுமான அளவுக்குப் பிரயோஜனப்படுத்தவில்லை என்பதே உண்மை. ஆண்டவருடைய பிள்ளைகள் என்று தங்களை பெருமையாக அழைத்துக் கொள்ளும் பெரும்பாலோனோர் "பணம் இல்லை" என்ற சோகக் கதையையே தங்கள் சொந்தக் கதையாக்கிக் கொண்டிருப்பதற்கு இதுதான் காரணம். இயேசுவை காட்சி அறையில் "Show Case"-ல் வைத்து வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். (1 கொரி. 15:14)

அப்படியானால் தகவல் தொடர்புகளை நாம் எப்படிப் பயன்படுத்துவது? (அப். 8:31) அதற்கும் ஒழுங்குகள் உண்டு. இயேசுவின் நாமத்தில் பிதாவிடம் ஜெபிக்க வேண்டும். (மத். 6:9)(யோ.15:16) (சில நேரங்களில் விதிவிலக்காக இயேசுவிடம் ஜெபிக்கலாம்.) (மாற்.10:47)(யோ.14:13,14) ஆவியானவரே, என்று அழைக்க வேண்டிய சந்தர்ப்பங்களுமுண்டு. (ஆராதனை நேரத்தில் மட்டும்) "ஆண்டவரே என்னை, என் குடும்பத்தை ஆசீர்வதியும்"-ஆமென். என்று ஜெபிக்காமல், "இயேசுவின் நாமத்தினாலே ஜெபிக்கிறேன் என் பிதாவே". என்று ஜெபிக்க வேண்டும். உடனே ஆசீர்வதித்து விடுவார் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தால் அது நடப்பதில்லை. ஆசீர்வாதம் வேண்டுமானால் முதலில், அவருடைய பிரமாணங்களுக்கு, கற்பனைகளுக்கு, வாக்குத்தத்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அடங்க வேண்டும் என்ற சத்தியத்தை ஆவியானவரின் நடத்துதலின் மூலமாக நமக்குள்ளே கொண்டு வந்து விதைக்கிறார்.

அது வளர, வளர நம் ஆவிக்குரிய கண்களிலும் தெளிவு வர, வேதத்தைத் தேடி, (எபே.1:19) ஆராய்ந்து வாசிக்க ஆரம்பிக்கிறோம். (யோவான் 5:39) விசுவாசமும் வளர ஆரம்பிக்கிறது. வசனங்களை சுதந்தரிக்கும் ஆற்றலும் பெருகுகிறது. முடிவில் ஆசீர்வாத வழிகள் ஆயத்தமாகி நம்மை முன்னேறிச் செல்லும்படி அழைத்து நெளிந்து வளைந்து நம் முன்னே செல்கின்றன. (உபா.30:16) நடந்தால்... (இது ஒரு தொலை தூரப் பயணம்) "வாக்குத்தத்த வாசல்கள்" என்ற கதவின் முன்பாக நம் கால்கள் நிற்பதை அறியமுடியும். "தள்ளு" என்ற வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தால் உள்ளே நுழையலாம். (ஆதி.24:31) உள்ளே போய்ப் பார்த்தால் ... "அலாவுதீனும் அற்புத விளக்கும்", "அலிபாபாவும், நாற்பது திருடர்களும்" கதைகளெல்லாம் இதன் வாசலில் கிடக்கும் தூசிக்கும் காணாது என்பதை அறியலாம்! (அந்த விளக்கை அலாவுதீனிடமே திரும்பக் கொடுத்து விடுங்கள், வைத்துக் கொள்ளட்டும். (நீங்கள் ஏன் திருடர்களாக வேண்டும்?) நமக்கு அதைவிட எண்ணில்லா மடங்கு மகத்தான அற்புதம் காத்திருப்பதை அங்கே பார்க்க முடியும். நமக்கு வேதமே விளக்கு, அதன் வார்த்தைகளே வெளிச்சம். (சங். 119:130)

## சிங்கக் கெர்ச்சிப்பிற்குப் பயப்படாதிருப்போம்... (1பேதுரு 5:8)

முகம் நசுக்கப்பட்ட, பல்லுடைந்த கிழச்சிங்கமும் கெர்ச்சிக்கத்தான் செய்யும். (1பேதுரு 5:8) ஆனால் அது குண்டில்லாத வெற்றுத் தோட்டாச் சத்தம் என்பதை அவனுக்கு விளங்க வைப்போம். கோதுமை மணிகளை அறுவடை செய்ய இந்தக் கடைசிக் காலத்தில் அவன் அதிக பட்சம் (Maximum) தன் கடைசிக் கட்ட முயற்சிகளை எடுத்து வருகிறான். ஒரு ஆத்துமா பாதாளத்தில் விழாமலிருக்க என்னென்ன முயற்சியெல்லாம் எடுக்கப் படுகிறதோ, அத்தனை முயற்சிகளுக்கும் இடையூறாக, தடி வெட்டிப் போடுவதே அவன் வேலை.

"உனக்கு ஆயிரத்தெட்டு செலவு இருக்கும் போது, நீ காணிக்கை எடுத்து வைத்தாயானால் இந்த மாத செலவுக்குப் பற்றாது, அவர் சொல்கிறார், இவர் சொல்கிறார் என்று கேட்காதே; உனக்கென்று சொந்தமாக அறிவு இல்லையா?" என்று காதோரம் கிசுகிசுப்பான். "தசம பாசம் கொடுத்த பிறகும் உன் பணப்பிரச்சனை தீரவில்லையே, இப்போதுதான் அதிகமாயிருக்கிறது கவனித்தாயா?" இத்தகைய சாத்தானின் கேள்விகள் எங்களின் அனுபவம். எனவே இப்படிப்பட்ட அவனுடைய சீறலின் குண்டுகளுக்குப் பயப்படாதிருப்போம். (மத்.13:28) நாம் விழித்திருந்து ஜெபிப்போமானால் அவன் களைகளை விதைக்க வரும் போது விழிப்பாகி விடுவோம்.

சாத்தான்... இவன் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே தோற்கடிக்கப்பட்ட வித்தியாசமான சத்துரு. இப்போது அவன் நடத்துவது வெறும் "கொரில்லா யுத்தம்" தான். "தலையில்லாதவன்" அதாவது தலை நசுக்கப்பட்டவன்.! துப்பாக்கிக் குண்டு, ஒலியை விட 3 மடங்கு வேகமாகச் செல்லக் கூடியவை (900மீ./வினாடி) குண்டின் வேகம் வினாடிக்கு வினாடி குறைகிறது. ஆனால் ஒலி சீராகச் செல்கிறது என்றாலும் குண்டு, ஒலியை விட வேகமாக செல்லும் பாதையைக் கடக்கிறது.

ஆகையால் சண்டை நடந்து கொண்டிருக்கும் போது, குண்டின் சத்தம் கேட்டால் பயப்பட வேண்டியதில்லை. காரணம் குண்டு குறி தவறி, ஏற்கனவே நம்மைத் தாண்டிச் சென்று விட்டது என்பதே உண்மை. (2 தீமோத். 4:17) (குண்டு தாண்டிச் சென்ற பிறகுதான் துப்பாக்கியின் ஒலிச்சத்தம் கேட்கும்) குறி தப்பாத குண்டு வெடிச்சத்தம் கேட்பதற்கு

முன்பாகவே, ஆளைத் தீர்த்து விடும்! (யோசியுங்கள்)

சாத்தானின் கெர்ச்சிப்பும் இப்படிப்பட்டதுதான். அவனுடைய முயற்சியையும் மீறி, தேவத் திட்டத்தில் நாம் ஜெயிக்கும் போது, பார்க்க சகிக்காத சாத்தானின் ஏமாற்ற எதிரொலிதான் அந்த கெர்ச்சிப்பு!

ஆவிக்குரியவர்களின் சகல காரியங்களின் மீதும் சாத்தானின் குறி இருந்தபோதிலும், முக்கியமாக இக்கடைசிக் காலங்களில் அவனுடைய துப்பாக்கிக்குறி (Gun aim) ஆவிக்குரிய வாற்கோதுமை வயல்களின் மீதுதான்! காற்றில் அசையும் அழகுக் கதிர்களை, பயத்தால் நடுங்க வைக்கிறான். ஆனால் தேவனுக்குக் கீழ்ப்படியாதவர்கள் மேல் அவன் வைக்கும் குறி தப்புவதில்லை. (1ராஜா. 20:36)

ஒரு சபையில் "தசம பாகத்துக்கு" எதிரான ஒரு போதனையைக் கொடுப்பதன் மூலம், "உலகளாவிய சபையின் ஆலய கட்டுமானப் பணி"யில் புகுந்து ஒரு செங்கலை உருவுகிறான். இப்படியாக சாத்தானின் செங்கல் உருவும் வேலை உலக தோற்ற முதலாகவே நடைபெற்று வருவதால், முக்கியமாக நம் காலத்தில் முழு வீச்சில் நடைபெறுவதால்... கட்டுமானப் பணி (Building) நிலை தடுமாறிச் சரிந்து விழுந்து, மீண்டும் எழும்பி, திரும்பவுமாகச் சரிந்து ... இப்படியாகத் தத்தளிக்கிறது. எழுப்புதல் பேச்சளவில் நின்று போனது. நமது காணிக்கை, ஒரு மகா பெரிய எழுப்புதலுக்கு வித்திடுகிறது என்பதை கட்டாயம் நினைவில் நிறுத்துவோம். (நெகே. 2:18) (உன். 8:9)

தரிசனம் பெற்றவர்கள் இணைந்தால், சாத்தானை குறி தவறச் செய்து அவன் தோட்டா குண்டை நிச்சயம் வீணடிக்கலாம். அவனுடைய கெர்ச்சிப்பிற்கு கடிவாளமிடுவோம்!

## உன்னதங்களில் உட்காருவோம்...

தாங்கள் உட்கார்ந்திருக்கும் இடம் எதுவென்றே தேவனுடைய பிள்ளைகளுக்குத் தெரியாமலிருக்கிறது. (எபே. 2:7) அதனால்தான் "பிரகாசமுள்ள மனக்கண்"களுக்காக பவுல் ஜெபிக்க வேண்டியதாயிருந்தது. (எபே. 1:19) உன்னதங்களில் இருக்கும் நமக்கு "இயேசுவின் பார்வைக் கோணம்" தேவை. (2 நாளா.16:9) அந்தப் பார்வை மலைகள், குன்றுகள், ஓடும் நதிகள், ஏன் கடலைக் கூட அலட்சியமாகப் பார்க்கிறது. நாம் பூமியில் நடந்து கொண்டிருந்தால் தானே இவைகளைக் கடப்பதில் பிரச்சனை? நாம் இருக்கும் இடமே வேறு, நம் கால்கள் தரையில் பதிவதில்லை. (ஆதி. 5:24) நாம் இந்த உலகத்திற்குரியவர்களே அல்ல, நம்மை இவ்வுலகத்திலிருந்து தூக்கியெடுத்தார். (யோ. 17:4) பிரயோஜனப்படுத்தாமல் இருக்கும் மான் கால்களும், கழுகின் சிறகுகளும் நமக்குண்டு. சிலருக்கு அது மறைக்கப்பட்டு மங்கலாக... சிலருக்குக் குருடாக இருக்கிறது. (2 கொரி. 4:4)

"அத்தி மரம் துளிர் விடாமல் போனாலும்..." (ஆப. 3:17) வசனம் நம்மை பரிசோதிக்கவே வருகிறது. (1 கொரி. 10:13) வாக்குத்தத்தங்கள் நிறைவேறாததைப் போலத் தோன்ற வைக்கிறது. (Exam- Pass) பரீட்சையில் பாஸ் பண்ணுவோமா? தேவன் கவனித்துக் கொண்டிருக்கிறார். நாம் விரக்தியடையும் அளவுக்கு நமது "பொருளாதாரம்" தாக்கத்திற்குள்ளாகும் போது, அதை உன்னதங்களில் இருந்து வரும் பெலனால் சமாளிக்க முயல வேண்டும். (மாற்கு 9:23)

பூமியின் மேல் நின்று கொண்டு, சுய முயற்சி செய்தால், பிரச்சனை "துப்பாக்கிக் குண்டை"ப் போல துளைத்துக் கொண்டுப் போய் விடும்!

இயேசுவுடன் உன்னதங்களில் இருந்தால் துளைக்காதா?

உன்னதங்களுக்குப் போகுமுன்; ஒரு சாதாரண விமானத்தில் பயணம் செய்த ஒரு விமானியின் அனுபவத்தைப் பார்ப்போம்.

## முதலாம் உலகப் போரின் போது நடந்த ஒரு உண்மைச் சம்பவம்:

பிரான்சு (France) தேசத்தைச் சேர்ந்த ஒரு விமானி வானில் 2 கி.மீ. உயரத்தில் பறந்து கொண்டிருக்கும் போது, முகத்தினருகே ஒரு "ஈ"யைப் போல எதையோ பார்த்துக் கையில் பிடித்திருக்கிறார். பார்த்தால்... அது ஒரு ஜெர்மன் வெடி குண்டு! இது நம்ப முடியாதது போலத் தோன்றினாலும், உண்மையில் இதில் நம்ப முடியாதது எதுவுமில்லை. 800-900 மீ/வினாடி(Sec.) துவக்க வேகமுள்ள துப்பாக்கி குண்டு, காற்றின் தடையின் காரணமாக படிப்படியாக வேகம் குறைந்து முடிவில் 40 மீ/வினாடி (Sec.)-க்கு வருகிறது. முதல் உலகப் போரின் போது விமானங்கள் இந்த வேகத்தில் தான் பறந்தன! விமானமும் குண்டும் ஒரே வேகத்தில் சென்றதால், அதாவது மிகக் குறைந்த (சொல்லப் போனால் அசைவற்ற) வேகத்தில் இருந்ததால் அதைச் சுலபமாகப் பிடித்திருக்க முடியும். இப்படியிருக்க இயேசுவுடன் உன்னதங்களில் இருக்கும் நம்மை சாத்தான் ஒன்றும் செய்ய முடியாது.

உன்னதங்களில் உட்கார்ந்திருக்கும் போது "திராட்சைச் செடிகளில் பழங்கள் உண்டாகாமல் போனாலும்" என்ற வசனம் கேள்வியாக "Question" ஆக வரும்போது, சரியானபடி பதில் எழுதி விட முடியும். பிரச்சனை நம்மைத் துளைக்காது.

தசம பாகம் கொடுத்தும், அதிகமாகக் கொடுத்தும், ஒரு நண்பரின் ஆலோசனைப்படி 15% கொடுத்தும் எதிர்பார்த்திருந்த ஆசீர்வாதம் இல்லையே ... இதனால் தேவ ஜனங்கள் அவநம்பிக்கைக்குள்ளாகி, விதைப்பதையே நிறுத்தி விடுகிறார்கள். (ரோமர்.3:3) அபாயக் கட்டத்தில் இவ்விதமாக மதியீனமாக செயல்படுவதால் சூழ்நிலை இன்னும் மோசமாகி விடுகிறது. (நீதி.24:10) "ஒலிவ மரத்தின் பலன் அற்றுப் போனாலும்" விதையுங்கள். மிகக் கஷ்டம்தான், என்றாலும் சவாலாக எடுத்துக் கொள்வோம்.

மேலே சொன்னபடி, குண்டைக் கையில் பிடித்த விமானியை நிதானியுங்கள். உன்னதங்களில் எதுவும் சாத்தியமே! நம் விசுவாசம், ஆவிக்குரிய குணாதிசயங்கள், கனிகள், ஆசீர்வாதத்தைக் கைப்பற்றும் முயற்சிகள் எல்லாமே கிறிஸ்துவுடன் உன்னதங்களில் இருக்கும் போது அதிகமாக உருப்பெருக்கம் அடைவதால் அதிக பலனுள்ளதாய் Powerful ஆக மாறி தாக்குதலை எதிர் கொள்கிறது. "வயல்கள் தானியத்தை விளைவியாமற் போனாலும்" நாம் பயப்பட மாட்டோம். (சங்.112:7) அது பரீட்சை (Test) என்று நமக்குத் தெரிந்திருப்பதால். "கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப் போனாலும்" நம் சந்தோஷத்தைச் சாத்தானால் பறித்துக் கொண்டு ஓட முடியாது. விசுவாசம் வாக்குத்தத்தக் கதவுகளைத் திறந்து விடும். "தொழுவத்தில் மாடு இல்லாமற் போனாலும்" தொடரும் நம் விசுவாசக் கிரியைகள் வாக்குத்தத்தக் கதவினூடாகச் சென்று, நம் நீதியின் விளைச்சலை வெளியே இழுத்துக் கொண்டு வரும். (2 கொரி. 9:10) நம் விடைத்தாள்களைப் (Answer Paper) பார்த்து இயேசு விடைத்தாளைத் திருத்தி, (Tick-✓) நல்லது 'Very Good' என்று எழுதுவார்!

ஆனால் இப்படிப்பட்ட சிக்கலான நேரங்களில் உன்னதங்களில் இருந்து இறங்கி தரையில் நின்று கொண்டு பிரச்சனையைச் சமாளிக்க முயற்சித்தால் என்ன நடக்கும் என்பதையும் பார்ப்போம். தள்ளாடிப் போய் விடுவோம். உடைந்து சுக்குநூறாகி விடுவோம்! மணிக்கு 12 கி.மீ. வேகத்தில் செல்லும்

ஒரு காரின் முன்பாக நின்று ஒரு 1/4 கிலோ எடையுள்ள ஒரு ஆப்பிள் பழத்தை எறிந்தாலும், அது ஜன்னலை உடைத்து, ஓட்டுனரைச் சேதப்படுத்தி விடும் அபாயமுள்ளதாக மாறிவிடும். இந்தப் பழத்திற்கு 3 கிராம் எடையுள்ள துப்பாக்கிக் குண்டின் ஆற்றல் வந்து விடுகிறது! இயேசு இல்லாத செயல்பாடுகள் இப்படிப்பட்ட ஆபத்தையே சந்திக்கின்றன. பிரச்சனையை சமாளிக்க 'Credit Card', கடன், வட்டி, கொஞ்சம் லஞ்சம், மறைமுகமாக (Indirect) ஒரு திருட்டு, போன்றவை நம்மைத் துளைத்தெடுத்து விடுவதுடன், தேவப் பணிக்காக வித்திட முடியாத "பதர் விதை"யாக மாறுகின்றன. (யோபு.4:8). நம் ஆசீர்வாதம், விசுவாசம் உடைக்கப்பட்டுத் தூளாகிப் போகின்றன, கண்ணாடிச் சில்லுகள்தான் மிச்சம்.

இங்கே கவனிக்க வேண்டிய இன்னொரு சத்தியமும் இருக்கிறது. இரு பொருள்கள் ஒரே திசையில், ஒரே வேகத்தில் செயல்படும் போது பிரச்சனை இல்லை. (ஏசா.35:8) மோதிக் கொண்டாலும் ஆபத்து பெருமளவில் இருக்காது. எதிரான திசைகளில் இருந்து வெவ்வேறான வேகத்துடன் வரும் இரு வேறு பொருள்கள் புறப்பட்டு வரும் போதுதான் ஆபத்து எல்லையை மிஞ்சுகிறது.

இயேசுவோடு கை கோர்த்து அவர் செல்லும் பாதையில் சென்றால்; "ஜெர்மன் குண்டையும் வெறுங்கையால் பிடிக்கலாம்". அவர் வடக்கே இருந்து புறப்பட, நாம் தெற்கே செயல்பட்டால் "ஆப்பிள் கூட ஆபத்தாகலாம்". ஆசீர்வாத யுத்தத்தை நடத்தும் போது, நம் விசுவாசக் களத்தில் கவனிக்க வேண்டிய முக்கிய யுத்த ஆலோசனைகளே இவை. (நியா.9:45)

## நல்ல நிலங்களைத் தேடிச் செல்லும் "நல்ல விதைகள்"

"தசம பாகம்" என்றவுடன், கேள்வி தேங்கிய கண்களுடன் பார்ப்பவர்கள், பிரசங்கங்களைக் கேட்டுத் தூங்கி விழுபவர்கள், நன்கொடைச் சீட்டுகளைப் பார்த்ததும் "திருதிரு" வென்று முழிப்பவர்கள், ஜோல்னாப் பை பிரசங்கியார்களைப் பார்த்தவுடன், நைசாக கதவைச் சாத்துபவர்கள். (2 கொரி. 9:7) எல்லோரும் இனிமேல் தைரியமாக விதைக்கலாம். (சங்.72:3) அப்படிப்பட்டவர்களுக்கான ஆலோசனைகள்:

"மனுஷன் எதை விதைக்கிறானோ..."(கலா.7:6) என்ற வசனத்தின்படி, பயம், சந்தேகம், அவிசுவாசம் ஆகியவற்றைக் கலந்து விதைத்தால் பிறகு அதையும் சேர்த்துதான் அறுக்க வேண்டியது வரும். (யோபு. 4:8) நம் விதைகளை நல்ல நிலங்களில் விழ வைத்து, நீதியின் விளைச்சலைத் தர, நம் தேவன் வல்லவர் என்பதை முன்னமே பார்த்தோம்.

டாண்டீலியன், பருத்தி, ஆட்டுத்தாடி போன்ற செடிகளின் விதைகளில் "பாரசூட்" போன்ற பகுதியோ, மெல்லிசான முடி போன்ற அமைப்புகளோ காணப்படும். கோனிபர், எல்ம், வெள்ளை பெர்ச், லிண்டன், மேப்பிள் போன்ற மர விதைகளில் "இறக்கை அமைப்புகள்" இருக்கும். "Hernar Van Marillavam" என்ற தாவரவியல் ஆராய்ச்சியாளர் எழுதிய "தாவர வாழ்க்கை" என்ற பிரபல நூலில் சில காரியங்களைக் கவனிக்க முடிந்தது.

காற்று அடிக்காத வெயில் நாட்களில் இந்த விதைகள் "செங்குத்து காற்றோட்டங்களால்" உயர எடுத்துச் செல்லப்படுகின்றன. பெரும்பாலும் இருட்டிய பின் கீழே இறங்கி விடுகின்றன. செங்குத்தான பாறையிடுக்கிலும், சில தங்கி விடுகின்றன. பிறகு, கிடைமட்டக் காற்றினால் அவை அதிக தொலைவுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

"குடைக்குஞ்ச விதைகள்" பறக்கும் போது ஏதாவது தடை வருமானால்

குஞ்சத்தைக் கழட்டி விட்டு விட்டு, தரையிறங்கிவிடும்! (வேலியருகில் நெருஞ்சிச் செடிகள் காணப்படுவதற்கு இதுதான் காரணம்) “இந்திய மல்லிகை விதைகள்” தற்செயலாகக் குப்புறத் திரும்பி விட்டால் ஆரம்ப நிலைக்குத் தானாக வந்து விடும்! பறக்கும் போது தடை வந்தாலும் தடுமாறாமல் பறந்தே வந்து கீழே இறங்கும்!!

எப்படியோ தேவன் நல்ல விதைகளை நல்ல நிலத்தில் விழவைத்து முளைக்கவும் வைக்கிறார். ஆவிக்குரிய சுவிசேஷ வயல்களில் தேவன் கையாள்வதும் இதே (Formula) முறையைத்தான். அவரை மட்டும் நம்பி விதைக்கும் போது, விளைச்சலை அவர் பொறுப்பெடுக்கிறார். ஊழியங்களையும், ஊழியக்காரர்களையும், உபதேசங்களையும் விர்சனம் (Criticize) செய்து கொண்டிருப்போமானால், நேரமும், ஊழியமும், ஆத்துமாக்களும், தரிசனங்களும் எல்லாவற்றிற்கும் மேலாக தேவன் நமக்குத் தந்திருக்கும் கிருபை வரங்களும் விரயமாவதும்தான் மிச்சம். (பிர.11:4)

நம்மூர் உள் சபையில் போடப்படும் காணிக்கைகள் நல்ல நிலத்தில் விழப் போவதில்லை என்பதைத் தேவன் கண்டால், உடனடியாக ஒரு சுவிசேஷகர் மூலமாக அடுத்த மாவட்டத்திற்கு கடத்தி விடுவார். (உதாரணம்: பருத்தி விதை) அல்லது ஒரு கன்வென்ஷன் பிரசங்கியார் வழியாக அடுத்த மாநிலத்திற்கு அனுப்பி விடுவார், (உதாரணம்: கோனிபர் விதை) வெளி தேசங்களுக்கும் கூட அனுப்பி விடப்படலாம் சில வேளைகளில். (உதாரணம்: இந்திய மல்லிகை விதை)

இப்படியாக நல்ல நிலத்தில் விழ வைக்கப்படும் விதைகளின் நீதியின் விளைச்சல், பரலோக சேம நிதியில் இருந்து கண்டிப்பாக நம் எல்லைகளில் வந்திறங்கும், சந்தேகமே தேவையில்லை. (மல். 3:10)

## ஒளி (வழி ) விலகும் வசனங்கள்:

நாம் வேதத்தின் சத்தியங்களை வாசித்து நிதானிக்கும் போது, அதை எந்த அளவுக்குப் புரிந்து, உணர்ந்து, வாசிக்கிறோம், என்பதையும், எந்த அளவுக்கு அந்த சத்தியங்கள் நம்மை வந்தடைகிறது என்பதையும், எவ்விதத்தில் அது நம் ஆவி, ஆத்மா, சரீரத்தை ஊடுருவிச் செல்கிறது என்பதையும் பொறுத்துதான் நம் கிரியைகளும் இருக்கும். (சங்.119:18)

காற்றிலிருந்து நீருக்குள் செல்லும்போது, விலகு விகித எண் 4/3. நீரை விட காற்றில் ஒளி 1.3 மடங்கு விரைவாகச் செல்கிறது. (“குறைந்த பட்ச நேர விதி”) ஒளி எப்போதும் விரைவான பாதையிலேயே செல்கிறது. (Fermat Principle) விண் கோள்களில் இருந்து வரும் ஒளி, பூமியின் வளி மண்டலத்தினூடே வரும் போது, அதன் பாதையில் சிறிது வளைவு ஏற்படுகிறது. (வளி மண்டல ஒளி விலகல்) வளைவின் உள்பகுதி பூமியை நோக்கி இருக்கிறது. தடையில்லாத மேலடுக்கில் அதிக நேரமும், தடைகள் உள்ள கீழடுக்கில் குறைந்த நேரமும் செலவிட்டு, நேர் கோட்டுப் பாதையில் வருவதை விடச் சீக்கிரமாகவே பூமியை வந்தடைகிறது.

இப்படியாக வேத வசனங்களைத் தியானிக்கும் போது, அதன் வெளிச்சம் விரைவாக நம் சரீர கண்களை நோக்கி வருகிறது. இரட்சிப்பின் அனுபவம் உள்ளவர்களுக்கு அது குறைந்த வேகத்துடன் ஆத்துமாவிற்குள் வருகிறது. மறுரூப இருதயம் உள்ளவர்களுக்கு அவர்களின் அபிஷேகம், வேகத்தை இன்னும் குறைத்து ஆத்துமாவிற்குள் கொண்டு வந்து தரிசனம் பெற்றுத் தருகிறது.

பெயர்க்கிறிஸ்தவர்களுக்கு வசனம் “வெறும் எழுத்துக் கோர்வைதான்.” மனம் திரும்பியவன் “சிந்தனை செய்கிறான்.” அபிஷேகம் “கிரியை” செய்ய

வைக்கிறது. எப்படியோ பரிசுத்தாவியானவரின் வேலைப்பாடுகள் மூலமாக வசனம் சீக்கிரமாகவே இலக்கை வந்தடைகிறது. (ரோமர். 11:33)

இவ்வளவு விரைவாகப் பரிசுத்தாவியானவர் செயல்பட்டாலும் ஏற்றுக் கொண்டு விசுவாசிக்கவோ, செயல்படவோ திராணியில்லாமல் போனதால்தான் ஆசீர்வாதத் தடைகள்... இந்த புத்தகத்தின் மூலக்கருவான "விதை" என்ற வார்த்தையை வாசித்ததும் ஒரு "அவரை விதை" தான் கண்முன் தோன்றும் பெயர்க்கிறிஸ்தவர்களுக்கு! (யோவான். 6:63) அடுத்ததாக, கிறிஸ்துவுக்குள் வளர்ந்து கொண்டிருப்பவர்கள் சிந்திப்பார்கள். நல்ல சத்தியம்தான் என்பதை ஒத்துக் கொள்வார்கள், ஆனால் தன் வாழ்க்கையில் அவற்றை நடைமுறைப்படுத்த மனசு வராது. (யாக். 1:6,7) இன்னும் கொஞ்சம் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் விதைப்பார்கள், என்றாலும் மனசுக்குள் "இந்த சத்தியம் நிஜம்தானா? அல்லது தவறான போதனையை நம்பி ஏமாந்து கொண்டிருக்கிறோமா?" என்ற சிறிய சலனம் மனசுக்குள் தோன்றி வட்ட, வட்டமாக அலையடிக்க வைக்கும்! (எரே. 4:3)

துளி கூட சந்தேகம் வராத முதிர் நிலைக்கு வருவோம். இலையுதிர் காலம் கடந்து, வசந்த காலத்திற்குள்ளாக அடியெடுத்து வைக்க முயற்சிப்போம். (ஏசாயா. 28:23-26)

## இது வாற்கோதுமை அறுப்பின் காலம்... (ரூத். 1:22)

அறுவடை நேரத்தின் துவக்கக் காலத்தில் ரூத் வந்தாள். நாமோ, முடிவின் காலத்தில் வந்து சேர்ந்திருக்கிறோம். போவாசின் வயல்களுக்குக் குறைவில்லை, கடந்து சென்றோமானால் இயேசு ஊழியம் தருவார், வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டிருப்போமானால் விட்டத்திலிருக்கும் உத்திரம்தான் கதை பேசும். வெட்டியாக நேரத்தை கடத்துவது என்பது ஒரு கிறிஸ்தவனின் அகராதியில் இருக்கவே கூடாது.

கிராமத்து வயல் வெளிகளில் எப்போதுமே வேலையிருக்கும். வரப்பு கட்டுதல், களை பிடுங்குதல், உரம் சுமந்து செல்லுதல், நீர்ப்பாய்ச்சுதல், பாத்தி பிடித்தல், வேலியமைத்தல், காவல் காப்பது, ... நாற்றங்காலில் இருந்து நாற்றுகளை எடுத்துப் பிரித்து நடுதல், மருந்துகள் தெளித்தல், ... அறுவடை செய்தல், அரிக்கட்டுகளாக மாற்றுதல், போரடித்தல், சிந்திய கோதுமை மணிகளைச் சேகரிப்பது, சுமந்து கொண்டு வீடு வருவது ... சுத்திகரிப்பது, அளத்தல், வீட்டுக்குக் கொண்டு வந்து சேகரிப்புக் கிடங்குகளில் வைப்பது ... மாவாக மாற்றுவது, அப்பங்கள் தயாரிப்பது ...

அப்பாடி போதுமா? வேலையில்லை என்று வீட்டில் வெறுமனே உட்கார்ந்திருப்பவர்களைத் தேடி வந்து யாரும் வேலை தருவதில்லை. நாமாகத் தேடிப் போனால் வேலை கிடைக்கும், சாயங்காலத்தில் கூலியும் கிடைக்கும்.

சுவிசேஷ வேலைக்கு அழைப்புத் தேவையில்லை. கால விரயமும், ஆத்தும விரயமும் நம்மால் ஏற்படாதபடி பார்த்துக் கொள்வோம். சுவிசேஷப் பணி பூரணமாக முடுக்கி விடப்படாததால் இயேசுவின் வருகை தாமதமாகலாம். இதனால் வேதனைகள் பெருகியுள்ள இந்தக் கடைசிக் காலத்தில் மக்கள் இன்னும் மோசமான பாவிகளாக மாற்றப்படுவதற்கான சாத்தியக்கூறுகளே அதிகம்.

ஒரு பத்து ரூபாயில் 100 சுவிசேஷ துண்டுப்பிரதிகள் (Tracts) வாங்க முடியும். 100 பேருக்குக் கொடுக்கும் போது 2 பேர் அங்கேயே விட்டெறிந்து விட்டு சென்று விடலாம். அதனாலென்ன மீதி 98 பேர் அவ்விதம் செய்வதில்லை. ஒரு பத்துப் பேர் அவற்றைக் காரின் பின் இருக்கையிலோ,

கைப்பையிலோ அப்படியே விட்டு விட்டுப் போய் விடுகின்றனர். பத்துப் பேர் மேஜையின் மீது கொண்டு வைக்கின்றனர், இன்னும் 10 பேருக்கு அது அடையாளம் வைக்கப் "Book Mark" ஆக அது மாறி விடுகிறது! மேஜையிலிருந்து மின்விசிறியின் (Fan) காற்றில் பறந்து போக, சின்னப் பையன் "காகிதப் படகு" செய்ய எடுத்துக் கொண்டு ஓட... சரி. அவனை விட்டு விடுவோம். இனிமேல் என்ன நடக்கிறது?

ஏழெட்டுப் பேர் நேரம் போகாத நேரத்தில் எடுத்து "நுனிப்புல்" மேய்ச்சல் கண்களுக்குக் காட்டி விட்டு மடித்து வைப்பார்கள். ஐந்தாறு பேர் முழுவதும் வாசிப்பார்கள் (என்ன புரிந்தது என்று கேட்டால் உதட்டைப் பிதுக்குவார்கள்), இரண்டு மூன்று பேர் வாசித்துப் புரிந்து கொள்ளுவார்கள், அதில் "ஒரே ஒரு ஆத்துமா" "அத்தி பூத்தாற் போல" மனம் திரும்பும்! அல்லேலூயா!!

ஒரே ஒரு ஆத்துமாவிற்காக இந்தப் பாடா? ஏன் கூடாது? அப்படி மனம் திரும்புகிற ஒரு ஆத்துமாவினிமித்தம் பரலோகமே மகிழ்ந்து பண்டிகை கொண்டாடுமானால், அந்த மகிழ்ச்சியை பரலோகவாசிகள் (Heavenly Beings) பெற்றுக் கொள்ளச் செய்வது நம் பாக்கியம்தானே? விதைகளின் எண்ணிக்கை அதிகமாக ஆக ஆக, மனம் திரும்பும் ஆத்துமாக்களின் எண்ணிக்கையும் அதிகமாகி, பரலோகக் கொண்டாட்டங்களும் அதிகரிக்கும். பரலோகத் தாக்கம் பூமியின் மீது எப்போதுமே இருந்து கொண்டிருப்பதால், பிதாவானவர் அகமகிழ்ந்து அதிக நன்மைகளை இவ்வுலகத்திற்குச் செய்வார். அவரது கோபாக்கினையின் நெருப்பும், அணையும் வாய்ப்புண்டு.

ரூத் "தற்செயலாகத்தான்" போவாசின் வயலுக்கு வருகிறாள். இன்றோ எங்கும் எங்கெங்கும் போவாசின் வயல்களில் கதிர்கள் அசைந்தாடுகின்றன. அறுவடைக்குத்தான் ஆளில்லை. "தற்செயல்" என்பது இக்காலத்திற்கு பொருந்தாது.

"கூவத் தெரிந்த குயில்கள் மட்டும்தான் கூவ வேண்டும் என்றால்,

காடே நிசப்தமாகிவிடும்".

எல்லோரும் வாருங்கள் சுவிசேஷம் அறிவிக்க!" ("அறை கூவல்" மாதாந்திர பத்திரிக்கை)

தன்னுடைய வயல்களில் வேலை செய்பவர்களை இயேசு விசாரிக்கிறார், பொறுப்பெடுக்கிறார். ஆனால், வேறு விளை நிலங்களுக்குப் போகவேண்டாம் என்ற உத்தரவுடன்! (அவைகள் சாத்தானுடையதாக இருக்கும் என்பதால்.) வாழ்க்கையின் தேவைகளைச் சந்திக்கிறார், பாதுகாப்புத் தருகிறார், போதாதா? வேறென்ன வேண்டும் நமக்கு?

ஊழியக்காரனின் கடந்த காலம் (Past), நிகழ்காலம் (Present) ஆராய்ந்து வருங்காலததில் (Future)-ல் மணவாட்டியாக உயர்த்த ஆயத்தப்படுத்துகிறார்...

## விதைப்பின் பலன் கிடைக்காமற் போவதற்கான இன்னொரு காரணம்:

"தேவ கோபம்" தான்! ஏசாயா 1-ஆம் அதிகாரத்தைத் தியானித்துப் பார்த்தோமானால் இது புரியும். தேவ ஜனங்கள் செலுத்தும் காணிக்கைகளை உதறித் தள்ளும் அளவுக்கு, தனனுடைய ஜனங்களின் எல்லைகளில் தேவனுடைய கோபம் கொப்பளிக்கக் காரணம் தான் என்னவென்பதை ஒன்றிரண்டு பக்கங்களில் ஆராய்வோம்.

தேவ ஜனங்களுக்கு என்னவாயிற்று? "ஆவி-ஆத்மா-சரீரத்தில்" வியாதிப்பட்டு சுகமாக்கப்படாமல் வாழ்கிறார்கள். வியாதிகளுடன் நடமாடும்

உள்ளான மனிதர்கள்! இவர்கள் மருத்துவமனைக்குப் **(Hospital)** போவதுமில்லை, மருந்து எடுத்துக் கொள்வதுமில்லை, சுகமாக வேண்டுமே என்ற எண்ணம் கூட இல்லை! ஒரு சாதாரண இருமலுக்குக் கூட டாக்டரிடம் போகும் கிறிஸ்தவர்கள், உள்ளான மனிதனுக்குப் புற்றுநோய் **(Cancer)** வந்தாலும் அதைப்பற்றி கவலைப்படுவதில்லை! (ஏசாயா 1:2-7)

இங்கே "வியாதி" என்பது பாவம், தேவனைப் பற்றிய அறிவு இல்லாமை, உணர்வில்லாத இருதயம், அக்கிரமம், பொல்லாப்பு, கேடுகள், பின்வாங்கிப் போவது ஆகியவற்றைக் குறிக்கிறது. இதனால் தேவனுடன் இருக்கும் உறவில் கத்தரிக்கோல் வைக்கப்படுகிறது. (ஜெபம் கேட்கப்படுவதில்லை) அதனால் நம் பலிகளின் மேல் (காணிக்கை) தேவனுடைய கரம் கோபத்துடன் கடந்து செல்கிறது. (ஏசாயா 1:11-14)

வேகமாக ஓடிக் கொண்டிருக்கும் இரயில் **(Train)** வேகத்தைக் குறைத்து நடைமேடையில் **(Platform)** நிற்கப் போகும் போது, மிகக் குறைந்த வேகத்துடன் செல்வது போல தோன்றும். இதனால் வண்டி நிற்பதற்கு முன்பாகவே, அதிலிருந்து குதித்து முதுகெலும்பு, மூட்டு எலும்புகளை உடைத்துக் கொள்பவர்கள் உண்டு. தேவனைக் குறித்து அறிவில்லாமல் இருப்பவர்களின் நடவடிக்கைகள் இப்படி இருப்பதால் விபத்தில் மாட்டிக் கொள்கிறார்கள். ஆனால் அவரிடமிருந்து ஆசீர்வாதத்தை மட்டும் சுரண்ட முயற்சிப்பார்கள், முயற்சி பலிக்காது. அவர்களுடைய காணிக்கையைத் தேவன் அங்கீகரிக்காதது மட்டுமல்ல, அருவெறுக்கவும் செய்கிறார், பிறகு எப்படி விதைகள் முளைக்கும்? வயல் வெளிகள் வெறிச்சோடிப் போகின்றன.

ஆனால் இப்படி ஓடும் இரயிலில் இருந்து (ஆட்டோ **Auto**, கார் **Car**, பஸ் **Bus** போன்ற எந்த வாகனத்திற்கும் இது பொருந்தும்) குதிப்பது ஆபத்துதான் என்றாலும், ஆபத்து ஏற்படும் சில சந்தர்ப்பங்களில், குதித்துதான் ஆக வேண்டும். நெருப்பு பற்றிக் கொள்ளும் போது, முகமூடிக் கொள்ளைக்காரர்கள் வழிமறிக்கும் போது, பாலம் உடைந்து கிடக்கும் போது, கடத்தப்படும் போது ... இப்படிப்பட்டச் சந்தர்ப்பங்களில் குதிக்காமல் இருக்க முடியாதே. குதிக்கப் பயந்து உள்ளேயே இருந்தாலும் நிலைமை இன்னும் மோசமாகி விடும். இப்படிக் கவனக்குறைவாக இருப்பவர்களை தேவன் நம்புவதில்லை, இவர்களுடைய பலிகளையும் "வீண்" என்று ஒதுக்கி விடுகிறார். "உங்களிடம் நான் கேட்டேனோ" என்று சொல்லி புறக்கணித்து விடுகிறார். ஆனால் இங்கேயும் ஆண்டவருடைய ஆலோசனை தேவையாயிருக்கிறது.

இரயில் நிற்கப்போகும் நேரத்தில் எப்படிக் குதிப்பது? விதிமுறைகள் என்னென்ன? கொஞ்சமும் யோசிக்காமல் கண்ணை மூடிக் கொண்டு குதிப்பது. அதனால் ஏற்படும் காயங்கள். குதிக்காமலேயே இருந்திருக்கலாம் என்று நினைக்க வைக்கும். ஏனென்றால் குதிக்கும் போது, நம் பாதங்கள் தரையைத் தொடும் முன்னதாக, நம் உடல் நகர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அதனால் குதிப்பது யாராக இருந்தாலும் ஆபத்து இருக்கத்தான் செய்கிறது.

என்றாலும் முன்னோக்கிக் குதிப்பது (→) அதிக பத்திரமானது. ஏனென்றால் "இயக்கவியலின்படி" குதிக்கும் போது நாம் நம்மை அறியாமலேயே முன்நோக்கி சில அடிகள் எடுத்து வைக்கிறோம் அல்லது ஓடுகிறோம். விழுந்து விடாதபடி நம்மைத் திடப்படுத்திக் கொள்ள இதற்கு உதவுகிறது. அப்படியே விழுந்தாலும் கைகளை ஊன்றி தாக்குதலின் தீவிரத்தைக் குறைத்துக் கொள்ள முடியும். பின்புறமாகக் குதித்தால், (←) நம்மை நிலைநிறுத்திக் கொள்ள முடியாமல் போவதால், மல்லாந்து

விழும்படி நேருகிறது.

இப்படியாக இயற்கையின் விதிகளையொட்டி நம் செயல்பாடுகள் இருக்கும் போது நம் வாழ்க்கை காப்பாற்றப்படுகிறது. நாம் விதைத்தும் விதைகள் முளைக்கவில்லை, ஆசீர்வாதம் இல்லை என்றால் உடனடியாக தேவனுடைய வார்த்தைகளுக்குள்ளாக நுழைந்து, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து கிரியைகள் நடப்பித்து, நம் ஆத்துமாவைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அப்படிச் செய்யும் போது, நம் விதைகள் தேவனால் அங்கீகாரம் பெறுகிறது.

"நன்மை செய்ய வேண்டும்" (இதற்குப் பயிற்சி அவசியம்.) (வ.17) (அப்.10:38) (ரோமர்.2:10) (கலா.6:9)

முக்கியமாக ஏழைகள் மீது கவனம் செலுத்தும் காரியம் (நன்மை) வேதம் முழுவதுமாகவே பரிசுத்தாவியானவரால் அநேகந்தரம் எழுதப்பட்டு, (Red Ink-னால் அடிக்கோடிடப்படுகிறது) (வச.17) (உபா.15:9)

## தேவனோடு வழக்காட வேண்டும்.

தேவனுக்கு எதிர்த்து நின்றால்? "பூமியும் ஆப்பிளும்" மோதிக்கொள்ளும் கதைதான். ஒரு செடியில் இருந்து ஆப்பிள் ஒன்று கீழே விழும் போது, பூமி அதைக் கவர்ந்திழுக்கிறது. அதே நேரத்தில் ஆப்பிளும் பூமியை கவர்ந்திழுக்கத்தான் செய்கிறது! என்றாலும் பூமியுடன் ஒப்பிடும் போது, நாம் கற்பனை (Imagine) பண்ண முடியாத அளவுக்கு ஆப்பிள் சிறியது என்பதால், அதன் ஈர்ப்பு சக்தி "புறக்கணிக்கப்படும்" அளவில்தான் இருக்கிறது. தேவனிடம் கோபப்பட்டுக் கொண்டு குட்டிச் சுவற்றின் மீது முட்டிக் கொண்டால் யாருக்கு நஷ்டம்? (கடவுள் ஒருவர் இருக்கிறாரா? அவருக்கு கண்ணே இல்லையா? என்பது போன்ற தேவபயமற்ற வார்த்தைகளை வெளியிடும் வாயை உடனடியாக இழுத்து மூடுவோம்.)

## தேவன் இதற்கு என்ன முயற்சி எடுக்கிறார்?

நம் எல்லைகளில் நீதியைச் சரிக்கட்டுகிறார். வெள்ளியைப் புடமிடுவது போல நம்மை அக்கினிக்குள்ளாகத் தள்ளி, களிம்பை நீக்குகிறார். என்றாலும் பயப்பட வேண்டியதில்லை, நம் முடி கருகிப் போகாதபடி, அக்கினியின் வாசம் கூட நம்மேல் வீசாத அளவுக்கு நம்மை வெளியே கொண்டு வருகிறார்.

பிறகு? வெற்றியின் வாசத்தை வயல் வெளிகளின் மீது வீசச் செய்கிறார். அல்லேலூயா!

## தற்கால "வயல் வெளிகளின்" நிலவரம்:

"ஒரு நாட்டின் முதுகெலும்பு" என்று போற்றப்படுபவன் ஏழை விவசாயி. ஒரு கோடீஸ்வரன் வீட்டு சாப்பாட்டு மேஜையில் (Dining Table)-ல் வைக்கப்படும் பாஸ்மதி அரிசி, பணக்காரனின் 25 ரூ. பொன்னி அரிசி, நடுத்தர வர்க்கத்தினரின் 13 ரூ. I.R.8-20, நாமக்கல் கோழிகளுக்காகக் கடத்தப்படும் 2 ரூ. ரேஷன் அரிசி வரை எல்லாமே ஏழை விவசாயிகளின் மத்தியான வியர்வையில் குளித்து வந்தவை என்பதை மறந்து போகக் கூடாது. விவசாயிகளின் வயல்வெளி வியர்வையும், அதன் விளைச்சலின் மகிமையில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் (Particular %) பிடிக்கிறது என்று சொன்னால் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். இக்கால விவசாயிகளின் நிலைமை என்ன? நல்ல மழை, நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் விளைச்சல் அமோகம் தான் என்றாலும், அறுவடைக்கு ஆள் தேடி குதிரைக் கொம்பைப் பிடிக்க வேண்டியதாகி விட்டது.

"வரவும் செலவும் சரி" என்ற நிலையில் இருப்பதாக விவசாயிகள் சொல்கிறார்கள். தரிசு நிலத்தைப் பார்க்க சகிக்காத, விவசாயிகளின் வேகமான இதயத் துடிப்பால்தான் விவசாயம் மூச்சைப் பிடித்துக் கொண்டு நிற்கிறது. "ஆட்கள் தேவை" என்ற "அறை கூவல்கள்" "எதிரொலிகளாக" திரும்ப வந்தன.

ஒரு ஏக்கர் நிலத்தில் (12 $^{1}/_{2}$ மரக்கால் அல்லது ஒரு குருணி) பயிர் செய்ய 14 கிலோ நெல் தேவைப்படுகிறது. (1 குருணி - 8 சென்ட்) விதைத்து 35 நாட்கள் கழித்து அதை ஒரு ஏக்கர் நிலத்தில் நட 14 பெண்கள் தேவை. வரப்பு வெட்ட 2 ஆண்கள் தேவை. (கூலி 14 **X** 50 + 2 **X** 80 = 860 ரூ) மாடு அல்லது டிராக்டர் **(Tractor)** மூலம் நெல் அறுவடை செய்ய கூலி 900 ரூ. 1 மூடை ஊட்டச் சத்து உரம், 1 மூடை தழைச் சத்து உரம் (செலவு 500 ரூ.) (25 நாட்களுக்குப் பிறகு 2 மூடை உரம் போட வேண்டும்) பூச்சி மருந்து, மருந்தடிக்கும் செலவு, 22 நாட்களுக்குப் பிறகு களை எடுக்க, 35 நாட்களுக்குப் பிறகு இரண்டாவது களை எடுக்க, 50 நாட்களுக்குப் பிறகு மூன்றாவது களையெடுக்க (ஏறக்குறைய 1000/- ரூ. செலவாகும்.)

இவ்வளவு வேலையும் செய்து ஒரு திறமையான விவசாயி தன் வயலில் $1^{1}/_{2}$ மேனி (37 $^{1}/_{2}$ மூடை) நெல்லைப் பெறுகிறான்.

இயந்திர அறுவடையில், நெல்லை மூடைகளில் பிடிக்க 2 பேர் (கூலி 200 ரூ.) வண்டியில் நெல்லை வீட்டுக்குக் கொண்டு போக (37 $^{1}/_{2}$ **X** 20 = 750 ரூ.) இந்த $1^{1}/_{2}$ மேனிக்கும் குறைவாகக் கிடைத்தால் லாபம் எட்டாக்கனியாகி விடுகிறது.

சிறந்த விவசாயி என்று தமிழ்நாடு அரசு **(Tamilnadu Government)** தெரிந்தெடுத்த, டெல்லி சென்று வந்த ஒரு விவசாயியை பேட்டி எடுத்த போது அவர் சொன்னது:

"விவசாயத்தில் அதிக லாபம் கிடைக்காமல் போனதால், வயல் நிலங்கள் வீடு கட்ட பிளாட் போட்டு விற்கப்படுகிறது. இந்தப் பரிதாப நிலைமைக்குக் காரணம், வேலைக்கு ஆட்கள் கிடைக்காததுதான். எல்லா வேலைகளும் இயந்திரங்களின் மூலமாகச் செய்யப்பட்டாலும், நாற்று நட ஆட்கள்தான் தேவையாயிருக்கிறது."

வண்டிகளில் நெல்லை ஏற்றி, அரசு கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டுச் செல்ல அதிக செலவு ஆகிறது. இதனால் ஒரு குறிப்பிட்ட சதவீதம் (%) லாபம் இடைத் தரகர்களுக்குப் போய் விடுகிறது. அதனால் அரசு அதிகாரிகளே வயல் நிலங்களைத் தேடி வந்து நெல்லை எடுத்துச் சென்றால் விவசாயிக்குச் செலவு மிச்சமாகும் என்று அந்த விவசாயி கூறினார்.

"வாய்க்காக, வயிற்றுக்காக" ஒரு விவசாயி படும் பாட்டைப் பார்த்தோம். மனதில் சிறிய வேதனையுடன் அதை ஏற்றும் கொண்டோம். ஆனால் ஒரு வட இந்திய மிஷனரி தன் ஊழிய அனுபவங்கள், சாட்சிகளைக் கூறும் போது அதற்கான செலவுகளை எடுத்துச் சொன்னால் "காணிக்கைக்காக வந்து விட்டார்கள்" என்று கூசாமல் நினைத்துக் கொள்கிறோம். (எபி.5:1, 8:3, 11:4)

தரிசனம் பெற்ற ஒரு சிலரின் வைராக்கியத்தால் சுவிசேஷ வயல்கள் காப்பாற்றப்பட்டாலும், (எஸ்தர். 7:16) எல்லோரும் ஒரு மனதுடன் எழும்பாத காரணத்தினால் நிலங்கள் மண்மூடி, வெள்ளெருக்கு பூத்துப் போனது! (1 கொரி. 11:18)

தசம பாகம் “விதை” வாங்க மாத்திரம்தான். இன்னும் செலவுகள் நிறைய இருக்கிறது. சுவிசேஷகர்களுக்கான சம்பளம், அச்சுக்கூ-, மொழிபெயர்ப்புச் (Printing, Translation) செலவுகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், செயற்கைக் கோள் கட்டணம் (T.V., Satellite) என்று கோடிக் கணக்கில் பணம் வாரியிறைக்கப்படுகிறது. (மத். 20:2,4,7,8, லூக். 10:7, 1 கொரி. 3:8,14, 1 தீமோத். 5:18, யாக். 5:4)

ஆலயங்கள் (Churches) கட்டுவதற்கு, எழுப்புதல் கூட்டங்கள் (Rivival Meetings) ஒழுங்கு செய்ய, சபையில் உள்ள ஏழை விசுவாசிகள், விதவைகளுக்கு உதவி செய்ய ... இப்படிப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. (ரோமர் 16:23, 1கொரி. 16:1, 2 கொரி. 8:19,11:8) ஆட்கள் பஞ்சத்தாலும், பணப்பஞ்சத்தாலும் சுவிசேஷகர்கள் தங்கள் தனியுலகக் காட்டுக்குள் புகுந்து காணாமல் போய் விட்டார்கள். சுய நலம் தலை விரித்தாட, பண ஆசை, கூந்தலைக் கோதிக் கொண்டு நிற்கிறது! (1கொரி. 11:22, நீதி.1:12, 1 தீமோத். 6:10)

சுவிசேஷ வயல்கள் மீது வீடுகள்! ஆ, என் தேவனே! (Oh! my god!) அவைகளுக்கு அஸ்திபாரமும் இல்லை, மணலின் மேல் கட்டப்படுகிறது. புயல்காற்று வீசும் போது? தானியேலின் நாட்களில் நடந்தது போல அரசாங்கத்தின் கவனம் இந்த சுவிசேஷ வயல்களின் மீது திரும்ப வேண்டும். அப்போதுதான் விமோசனம் கிடைக்கும். அதற்கு என்ன செய்யலாம்? அந்த 3 எபிரேய வாலிபர்களின் வைராக்கிய வாஞ்சை நமக்கும் வேண்டும். யார் அந்த வாலிபர்கள்? அதை அடுத்ததாகப் பார்ப்போம்.

## எபிரேய வாலிபர்கள் என்ன செய்தார்கள் ?

ராஜாவின் பல விதமான சாப்பாடு மூக்கைத் துளைத்த போதும் “பிசி பேளா பாத்”(பருப்பு & காய்கறி) மட்டும் போதும் என்று வேலைக்காரனிடம் சொல்லி விட்டார்கள். இந்த உணவுக் கட்டுப்பாடும் பின்னால் வரும் இவர்களுடைய சாதனைக்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம் என்றே தோன்றுகிறது. மிகத்திறமையானவர்கள், அறிவாளிகள் (Intelligent) என்று பெயரெடுத்தார்கள்.

“விடுவிக்காமல் போனாலும்” என்பது அவிசுவாச வார்த்தைகள் அல்ல. அவர்கள் இங்கே தேவனின் வல்லமையையும், தங்கள் விசுவாசத்தையும் பற்றிப் பேசவில்லை. கண்டிப்பாகச் சிலையை வணங்க மாட்டோம் என்று மறுப்புக் கூறி, தேவன் மேலிருக்கும் பக்தி வைராக்கியத்தைக் காண்பித்தார்கள். அவர்கள் சாத்தானுக்கு மகிமையைச் செலுத்த மறுத்த போது, தேவனுடைய வல்லமை வெளிப்பட்டது.

(அது வரை வல்லமை இருக்கத்தான் செய்தது, ஆனால் வெளிப்படவில்லை)

“தேவன் என்னை ஆசீர்வதிக்காமல் போனாலும், நீ தரும் ஆசீர்வாதம் எனக்குத் தேவையில்லை” என்று சாத்தானிடம் தைரியமாகச் சவால் விடலாம். அது அவிசுவாசம் அல்ல. உலக ஐசுவரியத்தை நாம் புறக்கணித்தாலே போதும், வாக்குத்தத்தக் கட்டளைகள் தன் கட்டுகளை அவிழ்த்துக் கொள்ளும். கோபத்தினால் சாத்தான் நம் பிரச்சனையை ஏழு மடங்காக்கினாலும், அந்த மூன்று பேரைப் போல பரீட்சையில் தோற்றுப் போகாதவன் பாக்கியவான்! அந்த இளைஞர்களின் சாட்சியுள்ள வாழ்க்கை எதிரியின் வல்லமையைப் பொசுக்கி, பலசாலியான இராணுவ வீரர்களைச் சாம்பலாக்கியது.

(Examination Hall)-தேர்வு அறைக்குள் இயேசுவை வரவழைத்த அற்புதம் இங்கே நடக்கிறது! அவரைப் பார்த்தவுடன் சாத்தானின் வெறியும்

அடங்குகிறது! அந்த "எபிரேய முத்துக்களின்" உண்மையைப் பார்த்துக் கொண்டிருந்த புறஜாதி தேசாதிபதியையே மனம் திரும்ப வைத்தது, "இயேசுவே ஆண்டவர்" என்று அறிக்கையிட வைத்தது.

இயேசுவை ஏற்றுக்கொண்ட ராஜா வசனித்துச் சொன்னதைப் பாருங்கள்:

"ஷாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு
ஸ்தோத்திரம், அவர்கள் தங்களுடைய தேவனைத்தவிர,
வேறொரு தேவனையும் சேவித்துப் பணியாமல்,
அவரையே நம்பி, ராஜாவின் கட்டளையைத் தள்ளி,
தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்ததினால்,
அவர் தமது தூதனை அனுப்பி,
தம்முடைய தாசரை விடுவித்தார்."

என்று அவர்களைக் குறித்துச் சாட்சி படிக்கட்டுகளைத் தானே கட்டி, அதன் வழியாக இறங்கி வருகிறான்! இதை விட வேறென்ன வேண்டும்!

இனிமேல்தான் முக்கிய விஷயமே இருக்கிறது! இராஜாவே, சுவிசேஷ வேலையை ஆரம்பித்து வைக்கிறார், "இயேசுவுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தை பேசுகிற எவருடைய உயிருக்கும் ஆபத்து"என்று. (வச.29) அப்படியானால்? "இயேசுவை அறிவியுங்கள்" என்று தான் அர்த்தமாகிறது. சொன்னவன் விதைகளையும் தராமலா இருந்திருப்பான்? (வச. 30)

நம் இந்திய தேசத் தலைவர்களின் இருதயங்களும் நேபுகாத்நேச்சாரைப் போல இறங்கி வர, சபைக்குள் இருக்கும் இளைய சமுதாயத்தினர் படிகளைக் (Steps) கட்ட இப்போதே முயற்சி (Steps) எடுப்போம்!

## பொய் பேசுகிறவன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள மாட்டான்! (நீதி.28:2)

ஆசீர்வாதத்திற்கும் உண்மைக்கும் சம்பந்தமிருப்பதைப் போல, உண்மைக்கும், "விதை"க்கும் கூட சம்பந்தமிருக்கிறது. (லூக்.8:15)

உலக வேலையில் உண்மையாக இருந்த அந்த மூன்று வா-பர்களும் உயர்த்தப் பட்டதைப் பார்த்தோம். உலக வேலையில் பொய்க்கணக்கு எழுதும் ஒருவனை ஊழிய ஸ்தாபனத்தில் வேலைக்கு வைத்தால், அங்கேயும் அதே கதைதான் தொடரும். (மத். 51:21). ஆயிரம் ரூபாயின் மீது, நம் நிர்வாகம் எப்படியிருக்கிறதோ, அப்படியேதான் ஒரு கோடி ரூபாய் வந்தாலும் இருக்கும்.

தேவனுக்கு உண்மையாக இருப்பதென்பது, அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதாகும். "விதைப்பு" என்பதும் நாம் கீழ்ப்படிய வேண்டிய வேதப் பிரமாணங்களில் ஒன்று. உண்மையில்லாததினால் ஊழியத்தைக் கை நழுவ விட்டவர்களும், தரிசனத்தைத் திசை மாறிப் போக விட்டவர்களும் எத்தனையோ பேர். (லூக். 16:12)

உண்மையில்லாவிட்டால்? பொய் சொல்பவன் என்றாகிறது. பொய் ஏன் சொல்கிறோம்? தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாததினால்தான். கீழ்ப்படியாமல் போகும் போது பாவம் செய்கிறோம். அதை மறைக்க ஒரு பொய், பிறகு அதை மறைக்க 2, 4, 8, 16, 32 என்று Virus basis-ல் பொய்கள் பெருகுகிறது. "பொய்யர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பதில்லை" என்ற வேத வசனம் இடி போல தலைமேல் வந்து இறங்கினாலும் உணர்வு வருவதில்லை.

பரலோகம் போவதையே தடை செய்யும் இந்தப் பொல்லாத குணாதிசயத்தை இனியும் பத்திரப்படுத்தாமல் தொலைத்துக்கட்டுவோம். பொய்யர்களின் எல்லைகளில் விதைகள் முளைவிட, அப்படியே முளை விட்டாலும் துளிர் விடத் தயங்குகின்றன, மறுக்கின்றன. ஏனென்றால் அவைகள் தேவனின் வசனத்திற்கு நடுங்குவதால்!

ஜெப வேளையில் கதை விடுபவர்களும் உண்டு. (யோவான். 4:24) இருதயத்தின் நினைவுகளை செதுக்கி **(Slice** பண்ணி) நுண்ணோக்கியில் **(Microscope)**-ல் வைத்துப் பார்க்கும் தேவனுக்கு நம் மாய்மாலமா தெரியாது. தேவனே என் காணிக்கையை ஆசீர்வதியும் என்று ஜெபித்தால் காதைப் பொத்திக் கொள்ளத்தான் செய்வார்.

அடுத்ததாக, நம் சாட்சியும் உண்மையாக இருக்க வேண்டும். சாட்சியைக் கேட்பவர்கள் தூங்கி விடாமல் இருக்க வேண்டும் என்பதற்காக "கனவுக் காட்சி"யையும் கலந்து விடுவதுண்டு! தேவையில்லை, இல்லாததையெல்லாம் கூட்டிச் சொல்லி, அவருக்கு மகிமையைக் கூட்டிக் கொடுக்க வேண்டிய பரிதாப நிலையில் அவர் இல்லை. (யோவான். 8:14) இந்த தேவையில்லாத "உருப்பெருக்கி" வேலையால் அவருடைய ஆசீர்வாதம் தடைபடுகிறது.

நம்மால் விசுவாசிக்க முடியவில்லையென்பதால், தெய்வத்துவத்தின் உண்மையான உருவகத்தை **(Shape)**-ஐ மாற்ற முயற்சித்தால், அது நடக்காது. (ரோமர். 3:3)

தேவனிடமிருந்து தரிசனத்தைப் பெற்றுக் கொள்ளும் போது இரகசியங்களையும் பெற்றுக்கொள்கிறோம். இரகசியங்களைப் பெற்றுக் கொண்டவன்(ள்) உண்மையாயிருக்க வேண்டியது கண்டிப்பாக அவசியமாகிறது. இல்லாவிட்டால் அவன் பாதையில் பொய்யும் புரட்டும்தான் மீதமிருக்கும். தரிசனம் நிதரிசனமாக, தேவ திட்டமும் தவிடு பொடியாகிவிடும்.

பெரிய்ய்ய்ய.... இரகசியத்தைப் பெற்று விட்டோம் என்ற பெருமையில், சிறிய பொய்கள்தானே என்று தேவனைச் சமாளித்துச் செல்ல முடியாது. அப்படி முயற்சி செய்தால், ஒரு **L.K.G.** பையன் நம்மை முந்திக் கொண்டு போய் விடுவான். (1 கொரி. 4:2) பொய் பேசுபவர்கள் தங்களைத் தேவனுடைய ஊழியக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்பட வேண்டும். (1 கொரி. 4:17)

அதிக புளிப்பு, முழு இட்டிலி மாவையும் கெடுப்பது போல, பொய் என்ற புளிப்பு தேவாசீர்வாதத்தையே கெடுத்து விடும். (1 கொரி. 5:8). உண்மையாக இருந்தால் தன்னுடைய சொந்த அபிப்பிராயங்களைச் சொல்வதற்குக் கூட தேவன் அனுமதி **(Permission)** தருகிறார். (1 கொரி. 7:25) கேட்பவர்களுக்கும் அது பிரயோஜனமாக இருக்கும்.

இந்த புஸ்தகத்தை வாசிக்க ஆவியானவரின் வெளிச்சம் தேவை. (எந்தவொரு ஆவிக்குரிய புத்தகத்தையும் பரிசுத்தாவியானவரின் வெளிச்சம் இல்லாமல் விளங்கிக் கொள்ள முடியாது.) புரியாவிட்டால் மேற்கொண்டு படிக்காமல் நிறுத்தி விடுவது நல்லது. ஒரு விஷயத்தைத் தவறாக புரிந்து கொள்வதை விட, அதைப் பற்றி எதுவுமே தெரிந்து கொள்ளாமல் இருப்பதே நல்லது.

பொய்களை நம்ப வைக்க எழுதப்படும் கதைகளில் சாத்தானுக்கு முதல்பரிசு **(First Prize)** கொடுக்கலாம். நம் உண்மையிலிருந்து, நம்மை விலக வைக்க அவன் வரும் போது; அவனை உள்ளே விடாமல், கதவை அவன் முகத்தின் மீது அறைந்து மூடுவோம். (2 கொரி. 11:3)

நம் கற்பனையில் வரும் கனவுக் கோட்டைகள் கூட உண்மையான தாயிருக்கட்டும். (பிலி. 4:8). நம்மை நம்பின இயேசுவை நம் பொய்களினால் ஏமாற்றாதிருப்போம். (1 தீமோத். 1:12). மோசேயைப் போல சுவிசேஷ எல்லையெங்கும், உண்மையாய் விதைப்போம். (எபி.3:2). வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராய் இருப்பதால்தான் நாம் விசுவாசத்துடன் அறுவடையை எதிர்நோக்கியிருக்கிறோம். இல்லாவிட்டால்? விதைகளின் மீது பூஞ்சை **(Fungus)** முளைத்திருக்கும். (எபி. 10:23)

உண்மையில்லாத உள்ளத்தில் எழுப்புதல் இருக்காது. (எருமை மாட்டின் மீது மழை பெய்த கதை தெரியுமா?) (2 பேதுரு 3:2). இயேசுவின் உண்மைதான் நம் பாவத்தை மன்னித்து, இரட்சித்து, பரலோகத்திற்கு அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது. “ஜிகு ஜிகு இரயில் வண்டி, பரலோகம் போகும் இரயில் வண்டி” என்று ஜா-யாகப் பாடிக் கொண்டு சென்று கொண்டிருக்கிறோம். அவரது உண்மையில் பிரச்சனை வந்திருந்தால், “அபாயச் சங்கிலி”யைப் பிடித்து இழுத்திருந்திருக்க வேண்டிய சூழ்நிலை வந்திருக்கும். “பாதாளம் போகுதே இரயில் வண்டி” என்ற ஒப்பாரிப் பாடலைத்தான் கேட்டிருந்திருக்க முடியும்! பொய்யின் பயங்கரத்தைப் புரிந்து கொள்ள முயற்சிப்போமாக. (1 யோவான்.1:9)

“அன்பு” என்பது ஆவிக்குரிய முதல்கனி (**Title Fruit**) உண்மையாய் இல்லாவிட்டால் அந்த கனி உதிர்ந்து விடும்! தொடர்ச்சியாக “தொப்” “தொப்” “தொப்” “தொப்” “தொப்” “தொப்” “தொப்” “தொப்” “தொப்”!! (1 யோவான். 3:18) ஆசீர்வாதமும் தானிருந்த இடத்தை வெற்றிடமாக்கிச் செல்லும்!

உண்மை ஆசீர்வாதத்தை மாத்திரமல்ல, பரலோக ஜீவ கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளவும் நம்மை இழுத்துச் செல்கிறது. (வெளி. 2:10) வேதத்தில் உள்ள ஒரு உண்மையான கோட்பாடு **(Concept)** தான் “விதை”. அதனால் அதை எழுதுவதற்கு எனக்கு எந்த தயக்கமும் இல்லை. (வெளி. 21:5)

உண்மையாயிருப்போம்... வயல் வெளியில் தானியம் நிறைந்திருக்கும். விளையச் செய்ய தேவனுக்கு நேரம் கொடுக்காதவனுடைய எல்லைகளில் தேவனின் கோபம்! (நீதி. 28:20)

தேவன் தான் ஆசீர்வதிப்பதற்காக உண்மையுள்ளவர்களைத் தேடுவதற்குக் காரணமே, அவர்களிடம் பணஆசை இருக்காது என்பதால் தான். (யாத். 18:21). பணஆசை மனிதனை விதையை எடுத்துக் கொண்டு சாத்தானின் வயல்களைத் தேடிப் போகும்படி செய்கிறது.

வேலை செய்கிற கூலியாட்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்காக, கைகளில் பணத்தை வைத்திருக்கும் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள், தன்னுடைய மேலதிகாரிகள் தங்களிடம் கணக்குக் கேட்காத அளவுக்கு உண்மையுள்ளவர்களாக நடக்க வேண்டுமாம். 2 இரா. 12:15, 22:7 ல் மிகக் தெளிவாக இந்தக் காரியங்களைப் பற்றி இருக்கிறது.

தசம பாகம் கொடுக்கும் போது நம் உண்மை தேவனுக்கு முன்பாக வெளிப்படுகிறது. கொடுக்காமல் கையை முதுகுக்குப் பின்னாக மடக்கும் போது நம் பொய் வெளிப்படுகிறது. (2 நாளா. 31:12)

இந்தத் தரிசனத்தைப் பெற்றவர்கள்; அதை சபைக்குச் சொல்லாமல் மறைக்கக் கூடாது. கேட்பவர்களின் இருதயங்கள் மறுரூபமடைய வாய்ப்புண்டாகும், வித்திடும் உள்ளங்களும் எழும்பும். (சங். 40:10, 89:5)

இந்திய தேசத் தலைவர்கள் ஏழைகளை உண்மையாக விசாரித்திருப்பார்களானால், இந்தியாவிற்கு “ஏழை நாடு” என்ற அவமானப்

பெயரே வந்திருக்காது. ஏழைகளுக்குச் செய்யப்படும் நன்மைகள் ஆசீர்வாதத்தின் விதையாக செயல்படுவதால் செல்வச் செழிப்பு இருந்திருக்கும். அரசியல் தலைவர்களுக்கு இருக்கும் அவமானமான பெயர்கள் மறைந்திருக்கும், அரசியல் சாக்கடையாகாமல் இருந்திருக்கும். (நீதி. 29:14)

"இந்தியா

ஒரு பக்கம் நிலப்பரப்பாலும்,

மூன்று பக்கங்கள் கடனா(லா)லும் சூழப்பட்ட தீபகற்ப நாடு"

என்று புதுக்கவிதை எழுத வேண்டிய சூழ்நிலை வந்திருக்காது.

ஏழைகளைப் பராமரிக்காமல், ரோட்டோரமாகச் செத்து மடிய விட்ட சாபம் தேவ கோபமாக மாறி, சபையில் உலவி வரும் இக்கடைசிக்காலத்திலாவது தொலை தூரக்காட்சியாகிப் போன இந்தத் தரிசனக் கருவை எல்லோரும் உற்றுப்பார்த்து "Zoom" பண்ணுவோம்.

## ஏழைகளுக்காகக் கடன் வாங்கும் இயேசு!

(அவருக்கு நாம் கடன்பட்டிருக்கிறோம்.)

"ஏழைகளுக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான்" (நீதி.19:17) என்ற வசனத்தை மனதில் (Realise) உணர்ந்து கொண்டபோது... இருதயம் சிதறலுக்குள்ளானது!

இலவசமாகப் பெற்றுக் கொள்ளும் எதையும் திரும்பச் செலுத்த வேண்டியதில்லை. ஆனால் கடனாகப் பெற்றுக் கொள்ளும் எதையும் (i.e., பணம்) திரும்பச் செலுத்தியே ஆகவேண்டும். இது நடைமுறை விதி. ஏழைகளுக்குக் கொடுக்கும் எதையும் அவர்கள் திருப்பித் தர முடியாது; அதனால்தான் அவர்கள் ஏழைகள் என்றழைக்கப்படுகிறார்கள்.

ஆனால் நாம் திரும்பப் பெற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும் என்பது தேவனின் விருப்பம். அதனால் ஏழைகளுக்குக் கொடுக்கும் உதவிகளைத் தன் கணக்கில் வரவு வைத்துக் கொள்கிறார். தரித்திரருக்குக் கைநீட்டிக் கொடுக்கும் ஒவ்வொரு காசையும் இடையில் வரும் இயேசுவின் (கண்ணுக்குத் தெரியாத) கை நீட்டி, பெற்றுக் கொள்கிறது.

தேவனுடைய கை குறுகவில்லை. அவருடைய பரலோக நிதியில் ஏராளமாக இருப்பதால் நமக்கு அதிகமாகத் திரும்பத் தருவதே அவருக்கு எளிதாக இருக்கிறது. ஓடிக் கொண்டிருக்கும் நதியிலிருந்து ஒரு சிறிய கரண்டியால் (Teaspoon)-ல் தண்ணீரை எடுப்பதை விட, குடத்தில் எடுப்பதுதான் எளிதானது என்பது கிராமப்புறப் பெண்களுக்கு நன்கு (Practical) ஆகத் தெரியும். இங்கே ஏழைகள் நூறு மடங்கு பலன் தரும் நல்ல நிலங்களாக செயல்படுகிறார்கள்.

ஏழைகளுக்கு இயேசுவிடம் அநேகமாயிரம் ஃசாப்ட் கார்னர்ஸ் (soft corners) உண்டு. (சங். 10:14) சிலுவையில் கூட அவர்களுக்காகச் செய்ய வேண்டிய காரியத்திலேயே அவருடைய குறி இருந்தது. ஏழைகளைப் பராமரிக்க, தேவன் நம் கைகளைத்தான் எதிர்பார்க்கிறார். (சங். 68:10) அவர் மீதி வைத்த வேலையைச் செய்து முடிக்க வேண்டிய மிக முக்கியப் பொறுப்பு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தேவ ஜனங்களின் மீது தரித்திரம் என்னும் எலும்புருக்கி நோய் வராமல் தடுப்போம். ஏழைகளுக்குக் கொடுப்பதில் தந்திரமாக (Cunning) செயல்படக் கூடாது. (உபா. 15:19) நரித்தனம் நம் ஆசீர்வாதத்தின் மேல்தான் கை வைக்கும்.

இக்காலங்களில் விவசாயிக்கு நல்ல நெல் விதைகளை எப்படி தயார் (Prepare) பண்ணுவது? எப்படி பாதுகாப்பது (Safe பண்ணுவது) என்பதைப் பற்றி பயிற்சி வகுப்புகள் (Trainings) கொடுக்கப்படுகிறது. பாமர விவசாயிகள், அதைக் கேட்டு அதன்படி செய்து பயன்பெறுகிறார்கள். ஆவிக்குரிய விவசாயிகளாகிய நாமோ, நல்ல நிலங்களை வேகமாகக் கடந்து போய் விடுகிறோம். வேகத் தடைகளைக் கூடக் கவனிப்பதில்லை! (உபா 15:19, 24:14)

அவர்கள் தங்கள் சோம்பேறித்தனத்தால், சேமிப்பு செய்யாததினால், உழைக்காததினால், ஞானமாக நடக்காததினால், விதைக்காததினால் ஏழையானார்கள் என்பது உண்மைதான். (நீதி. 10:4) என்றாலும் கலங்கி நிற்கும் அவர்களுக்கு இரங்குவோம். (நீதி. 10:15) உதவி கேட்டு நிற்கும் ஏழைக்கு நாம் என்ன பதில் சொல்கிறோமோ, அதுதான் நம் ஜெபத்திற்குப் பதிலாக தேவனிடத்திலிருந்து வரும். இங்கே இல்லை (No) சொன்னால் அங்கேயும் இல்லை (No) தான்! நம் ஜெபம் கேட்கப்படாமல் போகும் போது; தேவனுடனான தொடர்பு அறுந்து போவதால் "விதை" பராமரிப்பின்றிஞ்; போகும். நீதியின் விளைச்சலை எதிர்பார்த்திருக்கும் இடத்தில் ஏன்? ஏன்? என்ற கேள்விக் குறிகள் நிறைந்திருக்கும். (நீதி. 21:13) ஏழைகளுக்குக் கொடுப்பதனால் குறையாது. ரூ.100-10=1000 என்ற புதிய கணக்கைத் தேவன் நமக்குத் தருவார். (நீதி. 28:27)

அது மட்டுமல்லாமல் அவர்களது ஏழ்மையை நிரந்தரமாக நீக்க, அவர்களுக்கும் விதைப்பைப் பற்றிக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஏழைகளிடம் ஞானம் இருந்தும்; அவர்களின் தரித்திரம் அதை அழுத்தி, மண்ணோடு மண்ணாகப் புதைக்கிறது (பிர. 9:15). தேவன் ஆசீர்வதிக்கும் போது தான் ஞானம் பிரகாசிக்க ஆரம்பிக்கிறது.

ஒரு தொலைக்காட்சி ஊழியத்திற்காக (T.V. Ministry)- க்காக ஐசுவரியவான்களாக இருந்த விசுவாச குடும்பத்தினரிடம் மட்டும் காணிக்கை சேகரித்து வந்த ஒரு ஊழியரிடம் ஒரு சகோதரி சொன்னது நினைவிற்கு வந்தது. ஏழைகளிடமும் காணிக்கை வாங்குங்கள். அவர்கள் தரும் 10, 20 ரூபாய்கள்தான் உதாரத்துவமாக இருக்கும், அதிக பிரயோஜனமாகவும் இருக்கும் என்று! இது எவ்வளவு உண்மை! இயேசு சும்மா சொல்லவில்லை, ஏழை விதவை "அதிகம் போட்டாள்" என்று! (மாற்கு. 12:43)

## ஒரு சின்ன கதை...

முடித்து விட்டுக் கடந்து செல்லுவோம். சாயங்காலத்தின் மீது, இரவு கருப்பு சாயம் பூச ஆரம்பித்திருந்தது ... இராத்திரியை சோடியம் பல்புகள் (Sodium bulbs) துரத்தியடித்துக் கொண்டிருந்தன. சீரியல் பல்புகளின் (Serial bulbs)-ன் மின்னலில் ஜொலித்துக் கொண்டிருந்தது அந்த தேவாலயம். 'Mr.Y'-ன் கால்கள் ஆலயத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. "அசனம்" (அன்பின் விருந்து என்றும் அழைப்பார்கள்!). அதுதான் அங்கு நடந்து கொண்டிருந்தது. மரத்தில் படர்ந்திருந்த சீரியல் பல்புகளின் கண்களில் ஒரு புரியாத சோகத்தைப் பார்க்க முடிந்தது! 'Mr.Y'-க்குக் காரணம் புரியவில்லை. ஏன்? என்னவாச்சி? அது அப்படி என்னத்தைத்தான் பார்த்தது?

உள்ளே போய்த்தான் பார்ப்போமே! ஆராதனை முடிந்து பந்தி ஆரம்பித்திருந்தது. முதலில் தலைமை ஊழியர்களுக்கு, இரண்டாவது பந்தி "மற்ற சபைகளில் இருந்து வந்திருந்த ஜனங்களுக்கு", முக்கியஸ்தர்களுக்கு ஸ்பெஷல் சேர்களும் மேஜைகளும் போடப்பட்டிருந்தது. மூன்றாவதாக, அந்த ஆலயத்திற்கு ஆராதனைக்கு

வரும் விசுவாசிகளுக்கு. 4-ஆவதும், 5-ஆவதும் அப்படியே. ஆறாவதாக ... ம் ... 'Mr.Y' யாருக்கும் தெரியாமல் மெதுவாக எட்டிப் பார்த்தார்! சாப்பாடு தீர்ந்து போக, பாத்திரங்கள் வெறுமையுடன் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தன. கிள்ளிய தன் வயிற்றுக்கு "பசிக்காதே" என்று இரகசியமாக எச்சரிப்புக் கொடுத்து விட்டு வெளியே வந்தார்.

எச்சிலைகளுக்காகக் காத்திருந்த தெரு நாய்களின் சலசலப்புகள் ... பக்கத்தில் கைகளில் பாத்திரங்களோடு... கண்களில் பசி மயக்கங்களோடு... காத்திருந்த சில ஏழை ஜனங்கள்... மங்கலான வெளிச்சத்தில் இரண்டுக்கும் வித்தியாசம் தெரியாமல் தடுமாறிய 'Mr.Y' வேகமாக சட்டைப் பாக்கெட்டி-ருந்த மூக்குக் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டார்! வேகமாக நடக்க ஆரம்பித்தார். வருஷங்கள் உருண்டோடின. அந்த Serial bulbs-ன் சோகக் கண் சிமிட்டல்களை 'Mr.Y' அதன்பிறகு பார்க்கவேயில்லை!

இந்தக் கதையில் வரும் 'Mr.Y' என்ற கதாபாத்திரம் (Character) மட்டும் ஆசிரியரின் கற்பனை!) (யாக்கோபு. 2:2-8)

இயேசு கிறிஸ்துவைத் தொலைத்து விட்டு, ரோட்டுக்கு ரோடு வானளாவ வளர்ந்து வரும் சபைகளே, உங்களுக்கு கோபுரங்கள் எதற்கு? அது மணிக்கூண்டு மாட்டுவதற்கேயன்றி வேறொன்றுக்கும் பயன்படாது! அன்பில்லாவிட்டால் நாம் வெறும் பூஜ்யம் (absolutely zero) என்பது தெரியுமா? நியாயத்தீர்ப்பின் நாளன்று தேவன் இந்தப் பிரச்சனையை மட்டும் தான் முக்கியமாகக் கொண்டு வருகிறார் என்பதைக் கவனத்தில் நிறுத்துவோம்.

**கண்டிப்பாக முடிவு உண்டு,**

**நம் நம்பிக்கை வீண் போகாது.** (எபி. 6:12,1கொரி. 9:10)

ஹெரோன் (Heron) என்ற கணித மேதையின் 2000 வருஷத்திற்கு முற்பட்ட பழைய கணக்கு ஒன்று உண்டு. அது "நீர் உள்ளே வருவதற்கு ஒரு குழாயும், வெளியேறுவதற்கு ஒரு குழாயும் உள்ள ஒரு தொட்டி... முதல் குழாய் வழியாக தொட்டியில் தண்ணீர் நிரம்ப ஐந்து மணி நேரமும், இரண்டாம் குழாய் வழியாக தண்ணீரை வெளியேற்ற 10 மணி நேரமும் தேவைப்படுகிறது. இரண்டு குழாய்களையும் ஒரே நேரத்தில் திறந்து விட்டால், தொட்டி நிரம்ப எவ்வளவு நேரமாகும்?"

சிண்டைப் பிய்த்துக் கொள்ள வைக்கும் கணக்குக்கான விடையை தெரிந்து கொள்ள முயற்சி (Try) பண்ணுவோம். முதல் ஒரு மணி நேரத்தில் முதல் குழாய் வழியாக நீர் தொட்டியின் $^1/_5$ ஐ நிரப்புகிறது. அதே ஒரு மணி நேரத்தில் இரண்டாம் குழாய் $^1/_2$ தண்ணீரை காலி செய்கிறது. இரண்டும் திறந்திருக்கும்போது, ஒவ்வொரு மணி நேரத்திலும் தொட்டியில் $^1/_5 - ^1/_{10} = ^1/_{10}$ பகுதி நிரம்ப வேண்டும். நிரம்ப 10 மணி நேரமாகும் என்று மிக எளிதாகச் சொல்லிவிட முடியாது. எண் கணிதவியலின்படி சரியான விடையைக் கொடுக்க முடியாது. நீரின் மட்டம் செலுத்துகிற அழுத்தம் மாறிக் கொண்டேயிருப்பதால்... இதுபற்றி இன்னும் விரிவாக ஆராய வேண்டியதிருக்கும். [$\sqrt{v = gh}$] -Dorry Selvi (கலிலியோவின் மாணவர்).

ஆராய வேண்டியதில்லை... தேவனுடைய நீதியின் விளைச்சலை. "யோபு இரண்டத்தனையாகப் பெற்றான்", "ஈஷன் நூறத்தனையாக என்ற வாக்குறுதியைப் பெற்றான்", "ஆபிரகாமுக்குக் கொடுத்த உடன்படிக்கையின்படி ஆயிரம் மடங்கு வந்தாக வேண்டும்." இதெல்லாம் பேச்சு வழக்கில் சொல்லப்படும் கணக்கீடு. அள்ளித் தூவும் விதையைச்

சுமந்து போகிறவன் அழுது கொண்டு போகிறான். எத்தனை நெல்லை விதைத்தோம் என்று கால்குலேட்டர் (Calculator)- ஐ வைத்துக் கணக்குப் பார்ப்பதில்லை. கெம்பீரத்துடன் அவன் சுமந்து வரும் அரிக்கட்டுகளில் இருக்கும் நெல்மணிகளை கணக்கெடுக்க எந்த ஒரு கம்ப்யூட்டர் மென்பொருளும் (Computer Software) இல்லை.

ஏழைகளுக்கு உதவி செய்யாவிட்டால் தேவன் நரகத்தில் தள்ளிவிடுவார் என்ற பயத்தில் செய்வதால் பிரயோஜனமில்லை. பயப்படுகிறவர்கள் தேவ இராஜ்ஜியத்தைச் சுதந்தரிக்க முடியாது. அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். (1 யோவான். 4:18) அப்படித் தள்ளிவிட்டு, கொடுப்போம் அன்போடு! உலகத்தாரிடம் இருக்கும் சாதாரண அன்போடு அல்ல, அது மனிதாபிமானம். நாம் கிறிஸ்துவின் அன்பின் சிந்தையோடு செய்ய வேண்டும். அதைத்தான் பரிசுத்தாவியானவர் ஏற்கெனவே நம் இருதயங்களில் ஊற்றி விட்டாரே! (ரோமர். 5:5)

## சாறிபாத் விதவையின் விதைப்பு (1 இராஜாக்கள் 17)

கேரீத் ஆற்றில் தண்ணீரின் வேகம் குறைந்தது,

நுரையடிப்பு நின்றது,

சிற்றோடையானது,

கையினால் மொண்டு கொள்ள முடியாமல் போனது,

நூலிழையில் ஓடி, மயிரிழையாகி, முடிவில்

பாறையின் சிறுசிறு குழிகளில் நின்றது ...

எலியா தண்ணீரே குடிக்காமல் கூட ஓரிரு நாட்கள் சமாளித்திருக்கலாம். சாப்பாடு இல்லாமல் கூட சில நாட்கள் இருந்திருக்கலாம்; தண்ணீரில்லாமல் முடியாது. இரத்தத்தில் 90%க்கு மேல் தண்ணீர்தான். இரத்தத்தில் தண்ணீர் குறைந்தால் உயிருக்கே ஆபத்து. வெயிலின் கொடுமையால் இறந்து போன சென்னை நகரவாசிகளின் செய்திகளை வாசித்த போது; வெயில் எவ்வளவாய் தண்ணீரை, இரத்தத்தை, ஏன் கண்ணீரைக் கூடப் பாதிக்கிறது என்பது புரிந்தது.

சரி, இப்போது எலியாவுக்கு உதவி தேவை. சாப்பாடும் தண்ணீரும் இல்லாமல் தொடர்ந்து அவன் தேவ சமூகத்தில் நிற்க முடியாது; மயக்கம் வந்து விடும். யார் மூலமாகவாவது தேவன் உதவியை அனுப்பித்தான் ஆக வேண்டும். அந்த "யார்" யார்?!

சாறிபாத்தில் எலியாவுக்கு உதவும்படி, வசதி படைத்தவர்களில் யாரையாவது ஒருவரைத் தேவன் தெரிவு செய்திருக்கலாம். ஆனால் மரணத்தின் விளிம்பில் நின்று கொண்டிருந்த, அந்த ஏழை விதவையைத் தேவன் தெரிந்து கொண்டது சற்று யோசிக்க வைக்கிறது. அந்த ஏழையிடம் request பண்ணவில்லை தேவன், கட்டளை கொடுக்கிறார்! இந்தக் காரியம் இன்னும் அதிகமான சிந்தனைக்குள் நம்மை இழுத்துச் செல்கிறது.

வறுமையின் வேதனையின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்த அந்த விதவையை இன்னும் அதிகமாகக் கஷ்டப்படுத்தியதைப்போல் இருக்கிறதல்லவா எலியாவின் வார்த்தைகள். அவன் தேவனுடைய ஊழியக்காரன், தேவனுடைய வார்த்தைகளைத்தான் அவன் பேசியாக வேண்டும், வேறு வழியில்லை.

விதவை மனம் வருந்தினாலும், தேவனுடைய ஊழியக்காரனுக்குக் கீழ்ப்படிந்து அவனுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து போஷிக்கிறாள். தேவன் அந்த உபசரிப்பை விதையாகக் கையிலெடுத்து; பானையிலும்

கலசத்திலும் அவளுடைய நீதியின் விளைச்சலைக் கட்டளையிடுகிறார். “அநேக நாட்கள்” சாப்பிட்டார்களாம்; அதாவது அவளுடைய வாழ்க்கையின் முடிவு பரியந்தம் போஷிக்கப்பட்டார்கள்.

அந்த ஏழை விதவை ஆசீர்வதிக்கப்பட வேண்டும்; அதே வேளையில் ஒரு தேவ ஊழியக்காரனும் போஷிக்கப்பட வேண்டும். “ஒரே கல்லில் இரண்டு மாங்காய்” என்ற தத்துவத்தில் (Concept)-ல் தேவன் செயல்படுகிறார்.

அப்படியே பசியில் செத்துப் போகட்டும் என்று விடுபவரல்ல; தன்னுடைய ஜனங்களை ஆசீர்வதிப்பதே தேவனுக்குப் பிரியம். (எண். 24:1) உயிரோடு வாழ்வதுதான் தேவனுடைய சித்தம்; சாக வேண்டும் என்பது சாத்தானுடைய திட்டம்; அதைத் தவிடு பொடியாக்குவதே எனக்குத் தேவன் தந்த தரிசனத்தின் வட்டம்! அதை சுற்றிச்சுற்றியே என்னுடைய ஓட்டம்!! (எசே. 18:32)

ஏழைகள் சபையில் இருக்கலாகாது என்று ஏன் சொன்னார்? (உபா. 15:4) பசியினால் செத்துப் போகும் ஒரு சரீரத்தில் இருக்கும் ஆத்துமா இன்னும் சரியாக குணப்படாமல், நித்திய ஜீவனுக்குத் தகுதியில்லாமல் இருக்குமானால் நிலைமை என்னவாகும்? அதனால்தான் இன்னும் தேவனை அறிந்து கொள்ளாமல் இருந்த அந்த தனிப்பட்ட ஒரே ஒரு (single) ஆத்துமாவுக்காக தேவன் தன்னுடைய வல்லமையான கிரியைகளை நடப்பிக்கிறார். மழையை நிறுத்துகிறார், கேரீத் ஆற்றை வற்றச் செய்கிறார், எலியாவைப் புறப்பட வைக்கிறார்.

அவள் ஆசீர்வதிக்கப்படுவதுடன் இங்கே காரியம் முடிந்துவிடவில்லை. பாருங்கள் 22-ம் வசனத்தில் ஒரு அற்புதத்தையும், 24-ம் வசனத்தில் ஆத்தும இரட்சிப்பையும் அந்த விதவை பெற்றுக் கொள்கிறாள்.

தேவனுடைய இராஜ்ஜியக் கட்டட வேலையில் “ஆசீர்வாதம்” என்ற முத்திரையிடப்பட்ட செங்கல்கள் முக்கியப் பங்குகளை வகிக்கின்றன. சுவிசேஷ வேலையைப் பகிர்வு (share) பண்ணுகின்றன, உலகமெங்கும் சுமந்து செல்கின்றன.

இரட்சிப்பின் வஸ்திரத்தை எவ்வளவாய்ப் பாதுகாக்கிறோமோ, அவ்வளவாய் தேவன் இயேசு சிலுவையில் தந்த மற்ற ஆசீர்வாதங்களையும் பாதுகாப்போம். கவலையற்றிருப்போமானால், நியாயத்தீர்ப்புக்கு தப்புவது எப்படி? (எபி. 2:4)

நீதியின் விளைச்சலைச் சந்தோஷமாகப் பெற்றுக் கொள்வதற்கு முன்பாக ஒரு விவசாயி கண்ணீரோடுதான் விதைக்கிறான். வெயில் எரித்துக் கொண்டிருக்கும் மத்தியான வரப்பின் மீது காலில் செருப்பில்லாமல் வேகமாக ஓடி ஓடி கையில் விதைகளைச் சுமந்தபடி அந்த ஏழை விவசாயி... சேற்றில் கால்கள் புதைய, உள்ளேயிருக்கும் நெருஞ்சி முட்கள் உள்ளங்காலைப் பதம் பார்க்க... வேதனையோடு முகத்தை சுளித்தபடி... விதை தூவும் அந்த விவசாயி... அதிகம் தண்ணீர் தேங்கி விதை அழுகிவிடக்கூடாது என்பதற்காக வரப்பின் வாசலோரம் காவலிருந்து அடைக்கும் அவன்... வீட்டை மறந்து, ஓய்வை மறந்து, உடல் இளைக்க, கறுக்க, காவலிருந்து ... விளைச்சலின் காலம்வரைப் போராடும் அவன் ... விளைந்த பிறகு? அவனுடைய முகத்தின் கவலை சுருக்கங்களைச் சிரிப்பு பறக்கடிக்கிறது.

## விளைச்சல் ஏன் பட்சிக்கப்படுகிறது ?

நாம் தேவனுடைய சித்தத்தின்படி வாக்குத்தத்தங்களை விசுவாசித்துப் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களுடன் நம் ஆசைக்கு முடிவு கட்டிவிடுவது

நல்லது. பண ஆசையினால் உலகத்தின் மீதும் அதன் ஆசீர்வாதங்களின் மீதும் நம் கண்களைத் திருப்பும் போது ... அவலட்சணமான பசுக்கள் கரையேறி வருகின்றன. (ஆதி. 41:18-24) அவைகள் அழகும் புஷ்டியுமான நம் ஆசீர்வாதத்தைப் பட்சித்து இருந்த இடம் தெரியாமல் ஆக்கிவிடுகின்றன. "அவலட்சணம்" என்றாலே முகத்தைச் சுருக்குபவர்கள், இந்த விஷயத்தில் மட்டும் கண்களை அகல விரிக்கிறார்கள்! அது இறக்கைகளைக் கட்டிக் கொண்டு ஆகாயத்தில் பறந்து போய்விடும்; கூடவே, தேவன் நமக்களித்த மகிமையையும் கொண்டு போய்விடும், எச்சரிக்கையாயிருப்போம்.

இந்த விபரீதம் நம்மை கட்டாயப் (Compel) படுத்தினால்? வெளியே தள்ளிக் கதவைப் பூட்டுவோம். லஞ்சம் கொடுக்க வரும் சாத்தானின் வேலைக்காரனிடம் வேண்டாம் (No) சொல்லுவோம். உள்ளே நுழைந்து விட்ட ஆசீர்வாதத்தின் மீது சந்தேகம் வருகிறதா? அந்த பணத்தில் இருந்து காணிக்கை கொடுக்காதிருங்கள், அடுத்ததாக இனிமேல் "அந்த மாதிரியான" வருமானம் உள்ளே நுழையாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். முடிந்தால் உள்ளே வந்ததையும் "திருப்பி" விடலாம். (சமாளித்துக் கொண்டே ஓடாதீர்கள், இந்த விஷயத்தில் துணிந்து ஒரு முடிவை எடுக்காவிட்டால் தடைகள் விலகாது, மலையும் பெயராது! புதிய மலைகள் வேறு உருவாகிவிடும்!)

ஒரு இன்சுரன்ஸ் ஏஜண்ட் (insurance agent) கமிஷன் (commission)-ஐ சம்பளமாகப் பெறுவதால் அது தவறாகாது. ஆனால் அதே கமிஷன் (commission) இன்னொரு இடத்தில் தவறாக மாறலாம். அது வியாபாரம் போலத்தான், அப்படிப் பார்த்தால் மளிகைக் கடை வைத்திருக்கும் ஒரு வியாபாரி வாங்கிய விலையைவிட அதிகப்படியான விலையில் பொருளை (product)-ஐ விற்றால் அதுவும் தவறு என்றாகிறதே! என்று வாதிடுபவர்களும் இருக்கிறார்கள். திரைமறைவில், இரகசியமாக, யாருக்கும் தெரிந்து விடக்கூடாது என்பதான ரீதியில் நடக்கும் விஷயத்தில் கண்டிப்பாகத் தவறு மறைந்திருக்க சந்தர்ப்பமுண்டு. தவறான விதைகள், முட்களை முளைத்தெழும்பச் செய்யும்.

எது சரியானது என்று எப்படிக் கண்டு பிடிப்பது என்ற குழப்பமான சூழ்நிலைகள் நேரிடும் சந்தர்ப்பங்களும் உண்டு. ஜெபிக்கும் போது பரிசுத்தாவியானவரின் ஆளுகைக்குள் நம் பிரச்சனைகளை "கைவிட்டு" விட வேண்டும்! நம் தேவன் நமக்கு உண்மையுள்ளவராய் இருந்து, நம் நடைகளைப் பாதுகாப்பார். தேவனுக்கு உண்மையாய் இருக்க வேண்டும் என்ற வைராக்கியம் எழும்பினாலே போதும், மீதியைத் தேவன் பார்த்துக் கொள்வார். நம் வயல்களின் படைச்சால்களில் விஷப் பூண்டுகள் முளைக்காமல் பார்த்துக் கொள்வார்.

தேவ ஜனங்களைத் தேவனுக்கு ஆராதனை செய்யப் போக விடாமல்; ஓய்வு நாளையும் வேலை நாட்களாக மாற்றும் மேலதிகாரிகளின் வயலின் எல்லைகளில் வெட்டுக்கிளிகள் இறங்கத்தான் செய்யும், பட்சிக்கத்தான் செய்யும். கடைசியாக, ஆராதனைக்குப் போக அனுமதித்த பார்வோன், அதை முதலிலேயே செய்திருந்தால், வயலில் பச்சை இலைகளாவது மீதமிருந்திருக்கும். மேலதிகாரிகளுக்கு மட்டுமல்ல, கீழதிகாரிகளுக்கும் எச்சரிக்கையாக இந்த வார்த்தைகள் வருகிறது. (யாத். 5:15)

வாழ்ந்திருந்த காலத்தில் தேவனை மறந்து போனதினால், அல்லது உண்மையாகச் சேவிக்காததினால் (பெயரளவில் கிறிஸ்தவர்களாக வாழ்ந்ததினால்) எல்லைகளில் வெட்டுக்கிளிகள் தங்கள் கொடுக்குகளைக் கூர்மையாகத் தீட்டிக் கொண்டு இறங்குகின்றன! (உபா. 28:38-48) (வெட்டுக் கிளிகள் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் உயிரினம் நாம் இன்று பார்க்கும் 3 செ.மீ. நீளமுள்ள பச்சைப் பூச்சிகள் அல்ல. அது ஒரு

ஆட்டுக் குட்டியின் அளவிலான ஒரு பெரிய ஜந்து!)

பாவங்களும் பட்சிப்பதற்குக் காரணமாகின்றன. என்னென்ன பாவங்கள்? கண்ணிகள், கபடுகள், உலக ஐசுவரியம், ஏழைகளை விசாரிக்காமல் இருப்பது, சுயநலம் போன்ற காரணங்கள் தான். (எரே. 5:17, 25-28) "நீதியைச் சரிக்கட்டும்" விதமாக தேவன் விளைச்சலைப் பட்சிக்க விட்டுவிடுகிறார்.

தேசத்தின் குடி மக்கள் "குடி" மக்களாக மாறியதால், அவர்களுடைய "வெறியாட்டம்" தேவனுடைய கோபத்தைப் பச்சைப் புழு, வெட்டுக்கிளி, கம்பளிப்பூச்சிகள் என்று அணிவகுக்க வைக்கின்றன.

## பட்சிப்பு நிறுத்தப்பட என்ன செய்ய வேண்டும்?

மனம் திரும்பி, உபவாசித்து, தாழ்த்தி, அழுது, ஜெபித்தால்? ... "ஒரு வேளை" தேவ கோபம் மாறும்? இக்காலத்தில் இயேசுவினிமித்தம் தேவன் "நிச்சயமாகவே" தன் கோபத்தை மாற்றிக்கொண்டு, திரும்ப வருவார். பட்சிக்கப்பட்ட ஆசீர்வாதங்களையும் திரும்பக் கொண்டு வருவார். மிருகங்களுக்கும் இரக்கம் கிடைக்கும். வயலில் நெல் விளைந்தால் தானே, மாடுகளுக்கு வைக்கோல் கிடைக்கும்? (தானி. 4:12) (யோவேல். 1:20) "வெறி" என்பது "குடி"யை மட்டுமல்ல, களியாட்டுகள் எல்லாமே இதில் உள்ளடக்கம்!

## பாவ விஷம்

பிறந்த நாள் முதல் "மறுபடியும் பிறக்கும்" நாள் வரை ஒவ்வொரு மனிதனையும் பாவம் ஆளுகை செய்கிறது, ஆக்கிரமிக்கிறது ... ஆவியின் கூறுகள் சரீரத்தினால் செய்யப்படும் பாவங்களை "உள்வாங்குகிறது." பாவம் விஷம் போல ஆத்துமாவிற்குள் சென்று கலக்கிறது. (சிகரெட்டின் நச்சுப் பொருட்கள் இரத்தத்தில் கலப்பது போல)...

7 செ.மீ.(c.m.) நீளமே உள்ள சிகரெட்டில், பினாயில், பிணத்தை பதப்படுத்தும் திரவம், பெட்ரோ-ய வாயு என மொத்தம் 4000 நச்சுப் பொருட்கள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா? (எனக்கு மட்டுமென்ன, இப்போதுதான் தெரியும்!) உலகப் பாவங்களைக் கணக்கிட்டால் அது இன்னும் பல ஆயிரங்களைத் தாண்டும். பாவங்கள் சரீரத்தைத் தீட்டுப்படுத்தியதால், (infection-ஆல்) வியாதி வருகிறது. "50%" வியாதிகள் பாவத்தினால்தான் வருகிறது. பாவ வாழ்க்கைக்கு முடிவாக ஒரு "சம்பளம்" கணக்கிடப்பட்டுத் தரப்படுகிறது. அந்தக் கணக்கு "மரணம்".

சிகரெட்டில் உள்ள 4000 விஷப் பொருட்களில் 400 புற்றுநோயை உருவாக்குபவை. மாரடைப்பு, பக்கவாதம், ஆஸ்துமா என 58 விதமான கொடிய நோய்கள் சிகரெட்டால் உண்டாகின்றன. புகை பிடிப்பதால் வாழ்நாளில் 22 முதல் 26 வருடங்கள் குறைகிறது. இயேசு இல்லாத ஒரு மனிதனின் வாழ்க்கையில் "ஜீவன்" இல்லாததினால், பாவம் நாளுக்கு நாள் தன் எண்ணிக்கையைக் கூட்டிக்கொண்டே போகிறது. பாவம் பூரணமாகிறபோது, மரணம் வருகிறது.

புகையிலைப் பொருட்கள் மூலம் நம் இந்திய அரசாங்கத்திற்குக் கிடைக்கும் ஆண்டு வருமானம் 27,500 கோடி ரூபாய். ஆனால் அதனால் ஏற்படும் வியாதிக்கு அரசு செலவழிக்கும் தொகை 32,500 கோடி ரூபாய்! தீவினையை விதைத்து, தீவினையை அறுத்து வருஷந்தோறும் 5,000 கோடி ரூபாய் நஷ்டத்தை சம்பாதிக்கிறது நம் புத்திசாலி அரசாங்கம். (Government) ஆனால் மக்களைப் பாவ நோயிலிருந்து விடுவிக்கும் மகத்தான சவிசேஷ வேலைக்கு நாம் 1 பைசாவும் செலவழிப்பதில்லை.

ஆனால் சபைக்கு இந்தப் பொறுப்பு இருக்கிறது. (Cigarette) சிகரெட்டை விடக் கொடூரமான பாவ விஷத்தை (சாத்தானின் வித்தை) மனித ஆத்துமாக்களி-ருந்து வெளியேற்ற எவ்வளவு செலவழித்திருக்கிறோம். கணக்கெடுப்போம், குறைவாக இருந்தால் கணக்கை அதிகப்படுத்துவோம்.

சிகரெட்டில் உள்ள நிக்கோடின், கஞ்சா, ஹெராயின் போன்றப் பயங்கர போதைப் பொருட்கள் மக்களை அடிமைப்படுத்துகிறது, பாவத்தைப் போலவே. புகைபிடிப்பவரை மாத்திரமல்ல, சுற்றியுள்ளவர்களையும் அந்தப் புகை பாதிக்கிறது. முக்கியமாகக் குழந்தைகள் ஆஸ்துமா, இருமல், சளி போன்ற பாதிப்புக்குள்ளாகிறார்கள். நம் பாவங்கள் சிறுவர்களுக்கும், சிறுமியர்களுக்கும் இடறலாக இருப்பது போல.

மக்களை இந்தப் பாவத்திலிருந்து விடுவிக்க என்ன வழி? சுய ஆற்றல் (Will Power) தன் உடல் நலம் பற்றிய அக்கறை, குடும்பத்தின் மீதான நேசம், இருந்தால் சீக்கிரத்தில் இந்தப் பழக்கத்தை விட்டுவிடலாம். கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து நிறுத்துவது என்பது சரியாக வராது. நிறுத்த வேண்டும் என்று முடிவெடுப்பவர்கள், உடனடியாக நிறுத்த வேண்டும்.

- புகைப்பதை நிறுத்திய 20 நிமிடங்களில் இருந்து அதன் பலன்கள் நமக்குக் கிடைக்க ஆரம்பிக்கும்.
- 20 நிமிடங்களுக்குள் "இரத்த அழுத்தமும்" நாடித்துடிப்பும் சீராகும்.
- 8 மணி நேரத்திற்குள் கார்பன்-மோனாக்சைட் என்ற நச்சுப் பொருள் உடலை விட்டு முழுவதுமாக வெளியேறிவிடும்.
- 24 மணி நேரத்திற்குள் மாரடைப்பு (Heart attack) வருவதற்கான அபாயம் குறையும். நுரையீரலில் இருந்து சளி போன்று கழிவுகள் வெளியேறும்.
- 48 மணி நேரத்திற்குள் நிகோடின் நமது உடலை விட்டு வெளியேறி விடும், சுவாசம் சீராகும், சுவை உணரும் திறன் அதிகரிக்கும்.
- 12 வாரங்களில் இரத்த ஓட்டம் முழுமையாகச் சீராகி விடும்.
- 3-9 மாதங்களில் சுவாசக் கோளாறு, இருமல் வராது.
- 5 வருடங்களுக்குப் பிறகு இதய நோய் வரும் வாய்ப்பு 50% குறையும்.
- 10 வருடங்களுக்குள் நுரையீரல் புற்றுநோய் வரும் அபாயம் 50% குறையும்.
- 15 வருடங்களுக்குப் பிறகு இருதய நோய் வருவதற்கான ஆபத்து 100%ஆகக் குறைந்து விடுகிறது. "முழுமையான விடுதலை!"

"இரட்சிக்கப்படுவதற்கு" யாருமே முயற்சி எடுப்பதில்லை. வேளை வரும்போது இயேசு எதிர்பாராமல்தான் மனிதர்களைச் சந்திக்கிறார். இது நம்மால் உண்டானதல்ல, தேவனுடைய ஈவு. படிப்படியாக அல்ல, முழு இருதயத்தோடு தேவனிடம் திருப்பப்படுகிறோம்.

மனம் திரும்பி, பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொண்ட உடனேயே பரிசுத்தாவியானவரின் கிரியைகளைப் பார்க்க முடியும்.

- உடனடியாக தேவன் தரும் சந்தோஷம் மனதை நிரப்பும். ஆனால் அது இதுவரை அனுபவித்திராத, புரியாத புதிராக நாமே மாறியிருப்பதாகத் தெரியும். இருதயத்தில் என்னவோ ஒரு மாற்றம், என்னவென்று புரியாது, இயேசு அற்புதம் செய்கிறார்.
- சில வாரங்களில் பிறர் பார்க்கக் கூடிய வெளிப்படையான பாவங்கள்

நம்மிடம் இருக்காது.

- சில மாதங்களில் இரகசியப் பாவங்களும் கழண்டு போக முயற்சியெடுக்கும்.
- 1 வருஷத்திற்குள் "குட்பை" (Good Bye) சொல்லிப் போய்விடும்.
- சில வருஷங்களில் சாத்தானின் ஆளுகையிலிருந்து ஒவ்வொன்றாக (One by one) விடுதலையடைய ஆரம்பித்து... பல வருடங்களில் முழுமையான விடுதலைக்குள் வந்திருப்போம்! அல்லேலூயா!!
- புகைப்பதை (Smoking) நிறுத்திய 1 வாரத்திற்குள் தலைவலி, குழப்பமான கனவுகள், எரிச்சல், மனச்சோர்வு, ஏமாற்ற உணர்வு, இப்படியாக சில உடல் ரீதியான சிக்கல்கள் இருக்கும். ஆனால் புகை பிடிப்பதால் வரும் பயங்கர நோய்களை விட இவைகளின் தாக்கம் புறக்கணிக்கத்தக்க அளவில் மிகவும் குறைவானதே.
- மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக் கொண்ட புதிய விசுவாசிக்கும் ஆரம்பக்காலத்தில் இப்படியாகச் சில ஆவிக்குரிய சிக்கல்கள் இருக்கும். வண்ணமயமான (colorful) இவ்வுலகத்தின் இன்பங்களை இழக்க நேர்ந்ததால் உண்டான சோகம், "இரட்சிப்பைப் பற்றி சாத்தான் உருவாக்கும் மனக்குழப்பங்கள்", மற்றவர்களின் வித்தியாசமான ஏளனப் பார்வையால் உண்டாகும் தர்மசங்கடம், ஒரு சிலரின் எதிர்ப்புக்களால் ஏற்படும் எரிச்சல் ... என்றாலும் நித்திய ஜீவனை இழப்பதைவிட, இந்த இழப்புக்களை விரும்பிக்கூட ஏற்றுக் கொள்ளலாம்.

வருடந்தோறும் மே மாதம் 31-ம் தேதி "உலக புகையிலை ஒழிப்பு தினம்" -என அனுசரிக்கிறார்கள். சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் "புகையிலை ஒழிப்பு மையம்" மூலம் மருத்துவர்களின் ஆலோசனைகள், உதவிகளை இலவசமாகத் தருகிறார்கள். புகைபிடிப்பவர்கள் யோசித்து முடிவு எடுத்தே ஆக வேண்டிய நாள் இது. (ஆதாரம்: தினத்தந்தி)

அகில உலககெங்குமுள்ள மக்களின் பாவங்கள் ஒழிக்கப்பட, அவர்கள் சாத்தானின் ஆளுகைக்குள் இருந்து மீட்கப்பட்டு, இயேசுவின் மூலமாக நித்திய ஜீவனைப் பெற 2007 வருஷங்களாக சுவிசேஷ ஊழியங்கள் இடைவிடாமல் நடத்தப்பட்டு வருகின்றன. "புகை ஒழிப்பு திட்டத்துடன் ஒப்பிட்டால் (compare பண்ணினால்) சுவிசேஷப் பணிக்கு இதுவரை செய்யப்பட்டிருக்கும் செலவுகள்", இனிமேலான தேவைகள் கணக்குப் பார்க்க முடியாது. மாதத்திற்கு சுமார் 500-600 ரூ. வரை சிகரெட்டுக்குச் செலவிடத் தயங்காத நடுத்தர மக்கள், நம் ஜீவனுக்குப் பாதுகாப்புக் கொடுத்து, பரலோகம் சேர்க்கும் வேதத்தை (Bible-ஐ) ஒரே ஒரு முறை 100 ரூபாய் கொடுத்து வாங்கத் தயங்குகிறார்கள்.

## விரல்கள் விதைகளானபோது...

அநீதியின் விளைச்சல் உலக மக்களின் எல்லைகளில் விளைந்து கொண்டேதான் இருக்கிறது. தேவன் "நீதி சரிக்கட்டுதலாக" இந்த விளைச்சலை உபயோகிக்கிறார். "தண்டனையாக" "பழிவாங்குதலாக"க் கூட சில நேரங்களில் பிரயோகிக்கிறார். ஜனங்கள் பழக்கத்தின் காரணமாக தேவனுடைய இந்த காரியங்களைக் கூர்ந்து கவனிப்பதில்லை. அதை வாழ்க்கையின் போக்காக எடுத்துக் கொள்கின்றனர். "வாழ்க்கை என்றால் அப்படித்தான் இருக்கும்" என்று சகஜம் (casual) ஆக்குகின்றனர். நீங்களும் நானும் கூட அதற்கு விதிவிலக்கல்ல.

ஆனால் அதோனிபேசேக் ராஜா அப்படி இந்த விஷயத்தைச் சாதாரணமாக

எடுக்காமல்; அது தேவனால் உருவானது என்பதை புரிந்து கொள்ளும் ஒரு சம்பவத்தை நியாயாதிபதிகள் 1ஆம் அதிகாரத்தில் பார்க்கிறோம். ஆனாலும் என்ன பிரயோஜனம்? அவனுக்கு மீண்டும் வாழ்வதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. தன் குற்றத்தை உணர்ந்து, அறிக்கையிட்டுச் சாகிறான். அவனுக்கு இப்படி ஒரு அகோர மரணம் சம்பவித்ததற்குக் காரணம்; அவன் விதைத்த, முன்னாட்களின் நச்சு விதைகள்தான்.

70 ராஜாக்களின் கைகால் பெருவிரல்கள் வெட்டப்பட்டவர்களாய் மேஜையின் கீழ் விழுந்ததைப் பொறுக்கித் தின்றார்கள். நினைத்துக் கூடப் பார்க்க முடியாத இந்த வெறிச் செயலைச் செய்தவன் "அதோனிபேசேக்" ராஜாதான். அவன் செய்ததையே, திரும்ப அவனுக்குச் செய்தார்கள். போரில் அதோனிபேசேக் ராஜா தப்பி ஓடிப் போகையில், அவனைத் தொடர்ந்து பிடித்து, அவன் கைகால்களின் பெருவிரல்களை வெட்டிப் போட்டார்கள்.

அதோனிபேசேக் அன்று ஒரு அரக்கன் போல் அந்த 70 ராஜாக்கள் மீது பாய்ந்ததினால்; 70 அரக்கர்கள் இன்று அவன் மேல் பாய்ந்தார்கள். முட்செடியாக வளர்ந்திருந்த அவனுடைய கிரியைகளின் விளைச்சல் அவனைப் பீறிப் போட்டது.

1000 முறைகள் கேட்டு, இப்போது 1001 ஆவது முறையாக கேட்கப் போகிற பழங்கதை ஒன்றுண்டு: அது, ஒரு மனிதன் தன் வயதான தகப்பனாரை வீட்டுக்கு வெளியே ஒரு குடிசையில் வைத்து; ஒரு பழைய தட்டில் சாப்பாடு கொடுப்பானாம். ஒரு நாள் அந்த வயோதிகர் இறந்து போனார். அந்த மனிதனின் 5 வயது மகன் பத்திரமாக அந்தத் தட்டை எடுத்து, அலமாரியில் வைத்துப் பூட்டினான். ஏன் என்று அந்தப் பையனிடம் கேட்டதற்கு; "அப்பா, உங்களுக்கும் வயதாகும், அப்போது உங்களுக்குச் சாப்பாடு கொடுக்கப் பழைய தட்டுக்கு நான் எங்கே போவேன்?" என்றானே பார்க்கலாம்! விதைக்கும் அந்த வினாடியி-ருந்தே, உங்கள் விளைச்சலும் உங்கள் கண்கள் காணாத அளவில் ஆரம்பமாகிறது. எச்சரிக்கை! அப்போதே உங்கள் விளைச்சல் உங்களைத் துரத்த ஆரம்பிக்கிறது!!

விளைச்சல் உடனே கண்களுக்குத் தெரிவதில்லை, அது "கால அவகாசம்" எடுத்துக் கொள்கிறபடியால் மனிதனுடைய இருதயம் பாவம் செய்கிறதற்குத் துணிகரங் கொள்கிறது. (பிர. 8:11) "அவன் பண்ணாத அட்டூழியம் கிடையாது, அவனுக்கென்ன, நல்லாத்தானே இருக்கான்?" என்று சாத்தான் பேசும் இரகசியங்களை இறுகப் பிடித்துக் கொள்கின்றன மனதின் விரல்கள். "தேவன் கண்டும் காணாதவர் போல இருக்கிறார்" என்று கணக்குப் போட ஆரம்பித்துவிடுகிறார்கள். அவர் கண்டும் காணாமல் இருப்பதில்லை, "மனதில் வைத்திருக்கிறார்" என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்! (1 சாமு. 15:2, ஓசியா 7:2)

70 ராஜாக்களின் பெருவிரல்களை வெட்டியவனுக்கே இந்த கதி என்றால்; தன்னுடைய 70 சகோதரர்களைக் கொலை செய்தவனுக்கு என்ன கதி? நியாயாதிபதிகள் 9ஆம் அதிகாரம் இக்கேள்விக்குப் பதில் சொல்லுகிறது.

☛ மயக்கும் வார்த்தைகளைப் பேசி மக்களை ஏமாற்றுகிறான். (விதை. **No.1**)

☛ விக்கிரக கோயிலின் காணிக்கையை வாங்குகிறான். (விதை. **No. 2**)

☛ வீணரும், போக்கிரியுமானவர்களை முக்கியப் பொறுப்பான அதிகாரங்களில் வைக்கிறான். (விதை. **No. 3**)

☛ தன் சகோதரர்கள் 70 பேரைக் கொலை செய்கிறான். (விதை. **No. 4**)

இந்த முக்கியமான (Highlight) விதையில்தான் அதிக விஷமிருந்தது, முட்செடியாக வியாபித்தது. அதி-ருந்தே அவனுக்கு எதிராக அக்கினி புறப்பட்டு வந்தது, பட்சித்தது. யோதாம் ஜனங்கள் ஒலிவமரம், அத்திமரம், திராட்சைச் செடி இருக்க முட்செடியைத் தெரிந்தெடுத்தார்கள்; அது அவர்களின் காட்டையே, கொளுத்தியது.

யோதாமின் சாபம் விளைச்சலாக வருகிறது. 70 சகோதரர்களைக் கொலை செய்த பாவத்தை, அதனால் வந்த இரத்தப் பழியை, தேவன் அவன் மேலேயே திரும்பும்படி செய்தார். அவன் எல்லைகளை வியாபித்த விளைச்சல் இராட்சத picture plants ஆக அவனையே விழுங்கியது.

சகோதரர்களை ஒரே "கல்லின் மேல்" கொலை செய்தான்.

- ☛ அவன் தலையின் மேல் "கல்" விழுந்தது. (விளைச்சல் No. 1)
- ☛ மண்டை உடைந்து, உயிர் இழுத்துக் கொண்டு கிடந்தது. (விளைச்சல் No. 2)
- ☛ ஒரு சாதாரண பெண்ணினால் வேதனை, வெட்கம், அவமானம். (விளைச்சல் No.3)
- ☛ வேலைக்காரனால் குத்தப்பட்டுச் செத்தான். (விளைச்சல் No. 4)

## அறுவடை நேரத்தில் விதைப்பின் காலங்கள் மறந்து போகிறது!

முன் இருந்தவைகளைப் பற்றி ஞாபகம் இல்லை; அப்படியே பின்வரும் காரியங்களைப் பற்றியும் இனிமேலிருப்பவர்களுக்கு ஞாபகம் இராது. (பிர. 1:11)

"தன் மருமகள் தன்னை சரியாகப் பராமரிக்கவில்லை" என்று அங்கலாய்க்கும் மாமியார், முற்காலத்தில் "தன் மாமியாரைக் கவனிக்காததை" மறந்து போகிறாள். பெற்ற தாயைப் பாரமாக நினைக்கும் மகன், "வருங்காலத்தில் தன் மகனுக்குச் சுமையாகப் போகிறோம்" என்று யோசிக்க மறந்து விடுகிறான். மனைவியை அடித்து, பிறந்த வீட்டுக்கு துரத்தினால்; கல்யாணம் பண்ணிக் கொடுத்த தங்கை அதே போல, அடிபட்டு கண்ணைக் கசக்கிக் கொண்டு வந்து நிற்கும் சம்பவம், கதைகளில் மாத்திரம்தான் வரும் என்று நினைக்கிறோம்.

எல்லோரும் உங்களிடம் எரிந்து விழுவதாக குற்றம் பிடிக்கும் நீங்கள்; யாரிடமாவது அன்பாகப் பேசியிருக்கிறீர்களா? மகன் கீழ்ப்படியவில்லையா? நின்று, நிதானித்து, உங்களுடைய கடந்த காலத்தை ஆராய்ந்து பாருங்கள்... உங்கள் தலைமையின் கீழாக வேலை பார்க்கும் வேலைக்காரர்களைக் கனப்படுத்தாத உங்களை, உங்கள் மேலதிகாரிகள் எப்படி மதிப்பார்கள்? (மத்.5:7)

இப்படியே இந்தக் காரியம் (subject) காலம் காலமாக பல்வேறு பரிமாணங்களில் பரிணாம வளர்ச்சி பெற்று வந்து கொண்டே இருக்கிறது. நம் மூளையின் ஞாபக மறதி என்ற பகுதி முன்னுரிமை (advantage) எடுத்துக் கொள்கிறது. நம் இறந்த காலத்தைக் கறுப்புத் துணியைப் போட்டு மூடுகிறது.

> "விதைப்பும் அறுப்புமே, பூமியின் மீதினில் மாறி மாறி வருமே
> ஒன்று, இரண்டென, எத்தனை வருடங்கள் கனவெனக் கழிந்தது பார்
> சிந்திப்பீர், சிந்திப்பீர்! காலங்களைச் சிந்திப்பீர்!
> இயேசு கிறிஸ்துவின் வேலை ஒன்றே இன்றுப் பிரதானம்."

சகோ. எமில் ஜெபசிங் அவர்களின் பாடல் வரிகள் இது... யார் சிந்தித்தார்கள்?

யார் சிந்தித்தால் என்ன? சிந்திக்காமல் போனால் என்ன? இனிமேலாவது நாம் சிந்திப்போம்!

## சுவிசேஷ வயலில் புதிய அணுகுமுறைகள்

வேளாண்மைத் துறையில் நீர்த்தேவை அதிகரித்து வருவதால்; “திருத்திய வேளாண்மை முறைகள்” (2003-04) நெல்லை “தாமிரபரணி படுகை நதி திட்டத்தில்” செயல்படுத்தப்பட்டது. இதன்படி 30-40% நீரைச் சேமித்து வைத்து கூடுதல் பரப்பில் நெல் பயிரிடலாம். 10-19% வரை கூடுதல் மேனி கிடைக்கும். 1 ஹெக்டேர் (Hect.) நிலத்தில் ரூ. 4,700/- முதல் 6,800/- வரை கூடுதல் இலாபம் கிடைக்கிறது.

“திருத்திய விதை”களை அதாவது முளைகட்ட வைத்துப் பயிரிடுகிறார்கள்.

இதற்கும் சுவிசேஷ வேலைக்கும் என்ன சம்பந்தம்? கடுகுக்கும் பரலோகத்திற்கும் என்ன சம்பந்தமோ அதேதான். பரலோகத்தின் தாக்குதல் எப்போதும் பூமியின் சகல காரியங்களின் மீதும் இருந்து கொண்டேயிருப்பதால்; தெய்வத்துவக் காரியம் ஒன்றை விவரிக்கும் போது; அதற்குப் பூமியில் உள்ள ஏதாவது ஒன்றை உவமையாகக் காட்டினால் அது ஒத்திருப்பதைப் பார்க்க முடிகிறது. ஏனென்றால் அதையும் இதையும் உருவாக்கியவரும், ஆளுகை செய்பவரும் தேவனே!

இயேசு கிறிஸ்து பரலோகத்திற்குப் போன பிறகு; ஆரம்ப நாட்களில் சுவிசேஷ வேலைகள் செய்ய ஏற்பட்ட தேவைகளை விட இப்போது மிக மிக அதிமாக தேவைகள் பெருகியிருக்கிறது. “முன்மாரி”யை விட “பின்மாரி” அதிக இரைச்சலுடன் பொங்கிப் பிரவாகம் எடுக்கும் அளவிற்குத் தேவையாக இருக்கிறது. விதைக்கப்படும் வசனங்களும் உப்பால் சாரமேறினதாகவும், மண் குகையில் 7 முறை புடமிடப்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

சாதாரணமாக, பிரசங்கிக்கப்படும் வசனங்களை விட, நாம் அனுபவித்த, கிரியைகளில் முயற்சித்த வசனங்களுக்கு மதிப்பு (value) அதிகம், விளைச்சலும் அதிகம். அதிகப்படியான இடங்களில் சுவிசேஷம் பரவவும், அதிக எண்ணிக்கையுள்ளோர் இயேசுவை ஏற்றுக் கொள்ளவும், பரலோகத்தில் அனுதினமும் சந்தோஷம் உருவாகவும் அது வழிவகுக்கும்.

விதையைப் பதப்படுத்தித் தயாரிக்க நாற்றங்கால் மிக முக்கியம். 1:5 மீ. அளவுள்ள 8 மேடைகளை வயல் மண்ணினால் தகுந்த இடைவெளிவிட்டு ஏற்படுத்த வேண்டும். பாத்திக்கு 95 கிராம் D.A.P. உரத்தைப் பொடித்து, மண்ணுடன் கலந்து 4 செ.மீ. (c.m.) உயரத்திற்குப் பரப்ப வேண்டும். மண் கரைந்து விடாமல் இருக்கப் பாத்திகளின் ஓரமாக மூங்கில் குச்சிகளை நட வேண்டும். முளை கட்டிய விதையைப் பாத்திக்கு 375 கிராம் வீதம் பரவலாக விதைக்க வேண்டும்.

விதையை மூட 1 செ.மீ. (c.m.) உயரத்திற்கு மண் தூவி, பூவாளியால் நீர் தெளிக்க வேண்டும். நாற்று மேடையை விதைப்பதற்கு 10 நாட்களுக்கு முன்பாகவே தயாரித்துவிட வேண்டும். (நாம் உணவுக்காகப் பயன்படுத்தும் நெல் விதையைப் பதப்படுத்த எவ்வளவு கஷ்டப்பட வேண்டியதாயிருக்கிறது என்பதைக் கவனியுங்கள்).

ஒரு சுவிசேஷக் கூட்டத்தில் பிரசங்கிக்கப் போகும் முன்னதாக, அல்லது சபையில் பேசப் போகும் முன்னதாக, புத்தகம் எழுதும் முன்னதாக, வேதத்தை வாசித்து, தியானித்து, பிரசங்கபீடக் குறிப்பெடுப்பது லேசான

காரியமல்ல. உதாரணத்திற்கு சகோ. ஸ்டான்- **(Bro. R. Stanley)** பிரசங்கிக்கும் போது, வார்த்தைகள் ஒழுங்கும் கிரமுமாக, நறுக்குத் தெரித்தாற்போல் இருக்கும். காரணம் அவர் நாற்றங்கா-ல் விதைகளைத் தயாரித்து எடுத்து வருவதால் தான். (பிர. 7:27) **(Tamil translation-**ம்) தமிழில் மொழிபெயர்த்தலும் இதற்கு இன்னொரு காரணம். விதைகள் தடைகள் இல்லாமல் **(free-**ஆக) வளர அதற்கு இடமும், காற்றோட்டமும் கிடைக்கிறது!

13-15 நாட்கள் வயதுடைய நாற்றுக்களை நடவுக்குப் பயன்படுத்த வேண்டும். நாற்றுக்களைப் பறிக்கும் போது தனித்தனியாகப் பிடுங்காமல், பத்தைகளாக எடுத்து நடுவதற்கு வசதியாக, ஆங்காங்கே வைத்துக் கொள்ள வேண்டும். வேர் படுக்கை வசமாக இருக்கும்படி வைத்து, 3 செ.மீ. **(c.m.)** ஆழத்திற்கு மிகாமல் நடவு செய்ய வேண்டும்.

“நடவுக் கயிற்றில்” 20 செ.மீ. **(c.m.)** இடைவெளியில் அடையாளத்துக்காகக் கலர் துண்டு துணிகளை கட்டி, மாறி மாறிப் போட்டு நடவு செய்ய வேண்டும். இப்படிச் செய்யும் போது களைக் கருவி உபயோகிக்க வசதியாக இருக்கும், அதற்கேற்ப “வரிசை சதுர நடவு” முக்கியம்.

2.25 செ.மீ. **(c.m.)** உயரத்திற்கு நீர் தேங்கி இருக்கும்படி நீர் பாய்ச்ச வேண்டும். நீர் காய்ந்து, மணல் பரப்பில் லேசான வெடிப்புகள் தோன்றிய பிறகு மறுபடியும் 2.25 செ.மீ. **(c.m.)**-க்கு நீர்கட்ட வேண்டும். இப்படியாக மண் காயாதபடி பிஞ்சுபருவம் வரும் வரை தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும்.

இயேசுவை ஏற்றுக் கொண்ட இளம் விசுவாசிகளை “நாற்றங்கால் விசுவாசிகள்” என்று வைத்துக் கொள்வோம். நாற்றங்காலிலேயே வளர முடியாது. அவர்களின் உள்ளான “குழந்தை மனிதன்” வளருவது அவசியம். பால் சத்தானது தான் என்றாலும் வளரும் வயதில் “திட உணவு”ம் தேவை. தேவனை உண்மையாய் ஆராதிக்கும் ஆவிக்குரிய சபைகளில் அவர்கள் நாட்டப்படுவது அவசியமாயிருக்கிறது. கிறிஸ்துவில் வேரூன்ற, கனி கொடுக்க, அவர்களுக்கு ஆவிக்குரிய தகப்பன்மார்களும், ஆவிக்குரிய பிரசங்கங்களும், வெளிப்பாடுகளும் அவசியம் தேவை.

ஒவ்வொரு தனிப்பட்ட விசுவாசிகளின் மீதும் தனிப்பட்ட கவனம் சபை மேய்ப்பர்களுக்குத் தேவை. அதிக அங்கத்தினர்கள் **(members)** உள்ள பெரிய சபையாக இருந்தால்? உதவி ஊழியக்காரர்கள் மூலமாகவாவது கவனிக்க வேண்டும். ஒவ்வொருவரின் எல்லைகளுக்குள்ளாகவும் நுழைந்து, கவனித்து, விசாரித்து உதவி செய்ய வேண்டும். (உபா.1:9,23)

அபிஷேகம் குறைவுபடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். (2 தீமோத். 1:6) அனுதினமும் பரிசுத்தத்தை, விசுவாசத்தை, இரட்சிப்பை, உள்ளான மனுஷனைப் புதுப்பித்துக் கொண்டே இருக்க வேண்டும். (2 கொரி.7:1) ஞாயிறு ஆராதனை **(Sunday service)** மட்டும் போதாது, மற்ற நாட்களில் நடக்கும் ஆவிக்குரிய காரியங்களிலும் கலந்து, சீரான வளர்ச்சியைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். (அப். 5:42)

“களை எடுப்பதும்” விவசாயத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. **“Conoveeder”** (உருளும் களையெடுப்பான்) மூலம் களைகளை மண்ணுக்குள்ளேயே அழுத்தி விடலாம். இதனால் வயலுக்குத் தளைச்சத்து கிடைக்கிறது. **“Rottariveeder”**-க் கொண்டு 10-12, 12-22, 30-32, 40-42 நாட்களுக்கு என்று செடிகளினூடே உபயோகித்து களைகளை அப்புறப்படுத்த வேண்டும். இதனால் மண் புரட்டிவிடப்படுவதால் காற்றோட்டம் கிடைக்கிறது. மண்ணின் நுண்ணுயிரிகள்

ஊக்குவிக்கப்படுகின்றன.

“சாத்தானின் ஊடுருவலை” இது குறிக்கின்றது. ஓநாய்கள் வரலாம். (அப். 20:29) சபேயர் மந்தையைழ்; சாய்த்துக் கொண்டு போகலாம். (யோபு. 1:15) சிங்கங்கள் எதிர்ஞ்;படலாம். (சங். 7:2) இந்த வல்லமைகளைப் பாதாளத்தில் அடக்க, பரிசுத்தாவியானவரின் வல்லமையை உபயோகிக்க வேண்டும். பாவத்தைக் குறித்துக் கண்டிப்புடன் பிரசங்கித்து, வசனத்திற்குக் கீழ்ப்படியப் பழக்குவிக்கும்போது சாத்தான் ஓடிப்போவான். (யாக். 4:7) பரிசுத்தாவியானவரால் ஆவியில் ஏற்படும் “மின்னோட்டம்” குறைவுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தற்கால விவசாயிகள் பெருமளவில் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்ப யுத்திகளையே பயன்படுத்துகின்றனர். “விரிவாக்கம் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளைத் திட்டமிடுதல்” போன்ற, விவசாயிகளுக்காக நடத்தப்படும் கூட்டங்களில் விவசாயிகள் பெரும்பாலும் பங்கேற்பதில்லை. விவசாயிகளை ஆராய்ச்சி மற்றும் பரிசோதனைகளை நிர்ணயிப்பதிலும் ஈடுபடுத்த வேண்டும். “கருத்துப் பரிமாற்ற முறைகள்” வலுவாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

பலமுனை விரிவாக்கப் பணிகளை ஒருங்கிணைத்தல், விளைபொருட்களின் மதிப்பைக் கூட்டுதல், விற்பனையில் உதவி செய்தல், விவசாய சமுதாயத்தினருக்குத் திட்டமிடுதலில் அதிகாரம் வழங்குதல், பலமுனைத் தகவல் பரிமாற்றங்கள் என்று “ஆத்மா அமைப்பு” ஒன்று திருநெல்வே-மாவட்ட ஆட்சியாளர் (Collector) மூலம் அமைக்கப்பட்டுள்ளது.

இக்காலங்களில் இயேசுவின் ஊழியக்காரர்கள் உலகளவில் “கடைசிக் கால அறுவடை” வயல்களில் ஏதாவது ஒரு வேலையை செய்து வருகின்றனர். ஒரு ஊழியக்காரர் கார், கம்ப்யூட்டர் (Car, Computer) வாங்கக் கூடாது என்றோ, இணையத் தளங்களை உபயோகிக்கக் கூடாது என்றோ வாதாட முடியாது. இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த மாதிரிதான் செய்வோம் என்று சொல்பவர்கள் “கோவேறு கழுதைகளில்” போகிறார்களா? ஊழியங்கள் தேங்கிக் கிடக்கின்றன. குறை சொல்வதற்கென்று ஊழியங்கள் தேவையில்லை.

சபைகளின் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தினால், பாதிக்கு மேற்பட்ட மதபோதகர்கள், மேய்ப்பர்கள், சுவிசேஷகர்கள் கலந்து கொள்வதில்லை. “குண்டு சட்டிக்குள் குதிரையோட்டி” பழகிவிட்டதால், அது எளிதாக இருப்பதால் வெளியே வர யோசனையாக இருக்கிறது. “ஏனோதானோ” போக்கு அதிகரித்து விட்டது. தேவனுடைய வேலையை அசதியாக செய்பவன் சபிக்கப்பட்டவன் என்று வேதம் எச்சரிக்கிறது.

இயேசு கிறிஸ்துவைப் பிரித்து பங்கு போட்டு விட்டார்கள்! பிறகு அங்கே பரிசுத்தாவியானவருக்கு என்ன வேலை? அதனால்தான் எழுப்புதல் தாமதிக்கிறது. (1கொரி. 1:10-13) அது தீவிரிக்க ஏற்பாடு செய்வோம்.

## *‘So many cooks spoil the soup’*

சூப் ஏன் குழப்பப்படுகிறது? ஏன் மணம், சுவை, நிறம், தரம் கெட்டுப் போனது? ஊழியர்களின் உபதேசக் குழப்பங்களால்தான் இது நேரிடுகிறது. வசனம் ஒன்றுதான்; பார்வைகளின் கோணம் (angle) வேறு வேறு. “விதை” யைப் பற்றிய வேத வியாக்கியானங்களிலும் இதே பிரச்சனை வந்தது. அதனால் இதன் பக்கமாக என் கவனம் சென்றது. எல்லா ஊழியக்காரர்களுக்குமே “தனக்கு மட்டும்தான் ஆவியானவர் சரியான சத்தியத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்” என்ற எண்ணம் உருவாவதுதான் தலைசுற்றலுக்குக் காரணம். இந்த விபரீதப் போக்கிற்கு என்ன காரணம்? என்ன செய்யலாம்? முடிவுதான் என்ன? என்பதைப் பற்றிச் சில

பக்கங்களுக்கு எழுதுவோம்.

எது எப்படியானாலும் உண்மையான சத்தியத்தை நாம் அறிந்து கொள்ளத்தான் வேண்டும். அதற்குப் பரிசுத்தாவியானவர் நம் ஒவ்வொருவருக்கும் ஒத்தாசையாக இருப்பாராக.

மூன்று பேர் சமைத்த "பட்டாணி & இறைச்சி" சூப் பற்றி இங்கே பார்க்கப் போகிறோம். **Jules Vern** எழுதிய ஒரு நாவல் (**Novel**)-ல் (கற்பனைக் கதை) வரும் ஒரு சம்பவம் என்னை சிரிக்கவும் வைத்தது, சிந்திக்கவும் வைத்தது. ராக்கெட்டில் நிலாவுக்குப் போன மூன்று விஞ்ஞானிகள் பற்றிய கதை. மிஷேல் அர்டான், நிக்கோல், பார்பிகோன். வசதிக்காக இவர்கள் **A,B,C** என்று அழைப்போம்.

விஞ்ஞானி (**Scientist**) "**A**" காலை உணவுக்காக "சூப்" தயாரிக்க தயாராகிறார். சந்திரனில் இருக்கும் அவர் "எடை" இல்லாத சூப் தயாரிக்க தேவையான சாமான்களை எடுத்து வைக்கிறார். முதலில் கூஜாவில் (**Jug**)-ல் இருந்த தண்ணீரைப் பாத்திரத்தினுள் கவிழ்த்தார், வெளியே வரவில்லை! அடியில் தட்டியவுடன் "நீர் உருண்டை" ஒன்று வெளியே பாய்ந்தது! "தண்ணீர் ஏன் இப்படி விளையாடுகிறது?" என்று ஆச்சரியத்துடன் அதைப் பிடிக்கப் போனார். ("!" இனி தேவையில்லை இந்தக் காரியங்களெல்லாம் பூமியில் நடந்தால் தானே ஆச்சரியம், இது நடப்பது நிலவில் அல்லவா)

ஈர்ப்பு இல்லாத இடங்களில் திரவங்கள், கோள வடிவத்தை அடையும் என்பது உனக்குத் தெரியாதா? எடையற்ற நிலையில் திரவம் தனது மூலக்கூறுகளுக்கு இடையிலான சக்திகளுக்கு மட்டுமே உள்ளாகிறது என்று "**B**", "**A**" க்கு விளக்கம் தந்தார். பிளேட்டோவின் (**Plato**) பரிசோதனை இப்போது தேவையில்லை, சூப் தயாரிக்க கொஞ்சம் தண்ணீரை கொதிக்க வைக்க வேண்டும், அவ்வளவுதான் என்றார் "**A**" கோபமாக!

**Jug**-ஐ வேகமாக குலுக்கி, அந்தரத்தில் வட்டமடித்துக் கொண்டிருந்த பாத்திரத்தில் தண்ணீரை ஊற்ற முயற்சித்தார், சரிபட்டு வரவில்லை. கடைசியாக ஒரு நீரடுக்கினால் பாத்திரம் மூடப்பட்டது. "**A**"-ன் நம்பிக்கை மங்கலாக ஆரம்பித்தது. பதற்றப்படாதே, திடப்பொருள்களின் "நனைதல்" என்ற சாதாரண நிகழ்வுதான் இது, ஈர்ப்பு குறுக்கிடவில்லை, அவ்வளவுதான். என்று சொல்லி "**A**"-ன் கோபத்தை விசிறி விட்டார் "**B**". ஈர்ப்பு பற்றிய வாக்குவாதம் இப்போது தேவையில்லை, எனக்கு இப்போது தண்ணீர் பாத்திரத்திற்குள் இருக்க வேண்டும். அவ்வளவுதான் என்று கோபம் கொப்பளிக்க, வார்த்தைகளைக் கொப்பளித்தார் "**A**". இந்த நிலைமையில் சூப் தயாரிக்க எந்த சமையல்காரனும் ஒத்துக் கொள்ள மாட்டான் என்றார்.

உடனே "**C**" ஆறுதல் படுத்தினார், பிறகு ஒரு யோசனையை சொன்னார். "பாத்திரத்தின் வெளிப்புறத்தில் எண்ணெய் பூசுவோம், நீர் எண்ணெய் பரப்பை நனைக்காது என்பதால் வெளியே வராது" என்றார். "**A**" அகமகிழ்ந்தார், "அட, இதுதான் உண்மையான பௌதிக அறிவு" என்று மெச்சிக் கொண்டார். **Gas Stove**-ஐ பற்ற வைத்தார். அடுத்த சிக்கல் ஆரம்பித்தது, அடுப்பு கிறுக்குத்தனமாக நடந்துக் கொண்டது. தீ சடசடவென்று எரிந்து, அரை நிமிடத்தில் அணைந்து போனது. முயற்சிகளுக்கு அடுப்பு "**No**" சொல்லி விட்டது.

"ஏதாவது வழியில்லையா?" "**A**" கத்தினார். உடனே "**B**" "இதில் அதிசயம் எதுவுமில்லை, தீ சரியான பௌதிக விதிகளின்படி தான் எரிகிறது. பூமியில் தீ எரியும் போது உண்டாகும் **Carbon-di-oxide**-ம் நீராவியும் காற்றினால் நகர்ந்து விடும். அந்த இடத்தை வெளிக்காற்று நிரப்புவதால்,

எரிந்து கொண்டே இருக்கிறது. ஆனால் இங்கு ஈர்ப்பு இல்லாததால் வாயுக்கள் நகராமல் அங்கேயே நிற்பதால், தீ அணைந்து போகிறது. ஈர்ப்பு இல்லாவிட்டால் பூமியில் "Fire Service"-க்கு வேலையே இருக்காது, லொட, லொட, லொட "B" இழுத்துக் கொண்டே போக... "Stop!" பேச்சை நிறுத்தறியா, ஏதாவது செய்யுங்கடா! இடிமுழக்கமிட்டார் "A". "B"-ம் "C"-ம் தீயை ஊத ஆரம்பித்தனர், செயற்கை காற்றோட்டம் உருவாகி தீ எரிய ஆரம்பித்தது. கால், அரை, முக்கால், மணியாகியும் நீர் கொதிக்கவில்லை. "எடையுள்ள நீர் சீக்கிரமாக கொதிக்கும். அடிப்புற அடுக்குகள் குளிர்ச்சியான, கனமான மேலடுக்குகளினால் மேலே தள்ளப்படுகின்றன, இதனால் நீர் சீக்கிரம் சூடாகிறது. ஆனால் நிலாவில் எடையில்லாத நீரடுக்குகள் கலப்பதில்லை, சீக்கிரம் சூடாக்க விரும்பினால் நீரை கலக்கிக் கொண்டேயிருக்கவேண்டும். தண்ணீர் கொதிநிலைக்கு வராமல் சற்று கீழாகவே இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். எடையில்லாத நீராவியின் எடை நீரின் எடைக்கு equal-ஆக இருப்பதால் (அதாவது zero-வாக) அது நீருடன் கலந்து நுரையாகிவிடும்" என்று "C" விளக்கினார்.

"A"பட்டாணிப் பையைத் திறந்து, இலேசாக குலுக்கினார், அவ்வளவுதான் பட்டாணி அல்லோலகோலப்பட்டது! பட்டாணிகள் சுவர்கள் மீது மோதி, "C" மூச்சிழுக்கும் போது தற்செயலாக ஒரு பட்டாணி "C"யின் மூக்குக்குள் வேறு போய் விட்டது! அபாயத்தை உணர்ந்து கொண்ட நண்பர்கள் "வண்ணத்துப் பூச்சிகள் சேகரிக்க உபயோகப்படுத்தும் வலையினால்" பட்டாணிகளைப் பிடிக்கத் தொடங்கினார்கள். (நிலாவில் அந்த வலை எங்கேயிருந்து வந்தது? என்று கேட்டு வைக்காதீர்கள், கதை கந்தலாகிவிடும்!)

"தேர்ச்சி பெற்றச் சமையல்காரன் கூடக் கையை விரித்திருப்பான்" என்று "A" சொன்னது 100/100 சரி. இறைச்சித் துண்டங்களை வதக்க Fork-னால் அதை இறுகப் பற்றிக் கொள்ள வேண்டியதாயிருந்தது. அப்போதும் இறைச்சித் துண்டங்கள் குதித்தெழும்பவேச் செய்தன.

எப்படியோ சூப் தயாரானது. மூவரும் வெவ்வேறு நிலைகளில் அந்தரத்தில் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் நிலையில் Dining table-க்கு என்ன வேலை? சூப் டிமிக்கி கொடுத்தது! "A"கோபத்துடன் பாத்திரத்தை தட்டியபோது, கோள வடிவமுள்ள பெருந்திவலை ஒன்று வெளியே வந்தது! சூப்பை கைப்பற்றி அதை மீண்டும் பாத்திரத்திற்குள் அடைப்பதற்குள், "A"ஒரு செப்படி வித்தைக்காரனின் சாமர்த்தியத்தைக் காட்ட வேண்டியதாயிருந்தது! கரண்டிகளின் மேல் தொடர்ச்சியான படலமாக சூப் தொங்கியது. கரண்டி மேல் வெண்ணெய் பூசிய பிறகு சூப் சிறு சிறு கோளங்களாக மாறிவிட்டது. அதை வாய்க்குள் போட்டுக் கொள்ள முடியவில்லை. "C" மெழுகுத்தாள் ஒன்றைக் கிழித்து குழாய்களாக்கினார். பிறகு 3 பேரும் அதன் வழியாக சூப்பை உறிஞ்சிக் குடித்தனர். கதையை இத்தோடு நிறுத்துவோம்.

இதே வேலை இப்போது சபைகளில், ஊழியர்களின் பிரசங்கங்களில், புத்தகங்களில் நடந்து கொண்டிருப்பதைப் பார்ப்போம்! நிலாவில் 3 பேர் சமைத்த சூப்பிற்கே அந்த கதி! இங்கே பூமியில் 30 பேர், 300 பேர், 3,000 பேர், 30,000 பேர், 3,00,000 பேர் சமைக்கிற சூப்பிற்கு என்ன கதியோ!

எனக்குத் தரப்பட்ட "விதை" என்ற தரிசனக் கருவும் இப்படித்தான் பந்தாடப்படுகிறது. தேவ ஜனங்கள் ஏழைகளாக இருக்கலாம் என்று சொல்பவர்கள் எபி.11:9 வசனத்தைக் காட்டுகிறார்கள், ஐசுவரியமாய் இருக்க வேண்டும் என்பதே தேவ சித்தம் என்பவர்கள் சங்.112:3-ஐக்

காட்டுகிறார்கள். நானும் கூட மறுபிறப்படைந்த ஆரம்ப நாட்களில் வேதத்தை விட வேத வியாக்கியான புத்தகங்களையே அதிகம் விரும்பிப் படிப்பதுண்டு. முதலில் நான் விரும்பி வாசித்த மூன்று ஊழியர்களின் புத்தகச் செய்திகள் எனக்கு அதிக பிரயோஜனமுள்ளதாக இருந்தபோதிலும், மறுபக்கத்திலிருந்த முரண்பாடுகள் தலையைக் கிறுகிறுக்க வைத்தன.

என்றாலும் நான் விடுவதாக இல்லை. ஒன்றும் சாப்பிடாமல் இருந்து செத்துப் போவதை விட, இந்த "குழப்பல் சூப்"பையாவது குடித்து உயிர்வாழ்வது நல்லது இல்லையா? இப்படியாக என்னுடைய உள்ளான மனுஷனும், குழப்பங்களும் சேர்ந்தே வளர்ந்தன. ஒருவரையொருவர் விமரிசனம் செய்வது கூட "விதைப்பும் அறுப்பும்" நியதியின்படிதான் நடக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. ஒரு ஊழியக்காரர் அடுத்த ஊழியக்காரரின் பிரசங்கத்தைக் குறை சொல்லுகிறார். அடுத்ததாக அவர் விதைத்ததையே தன்னுடைய ஊழியத்தில் அறுவடை செய்கிறார். அவருடைய பிரசங்கம் இன்னுமொருவரின் விமரிசனத்திற்குள்ளாகிறது. விமரிசனத்திற்குள்ளான புத்தகத்தை வாசிக்கும் ஒரு விசுவாசி; அந்த புத்தகத்திலிருந்துக் குறிப்பெடுத்து அதைப் பின்பற்ற (Follow பண்ண) முயற்சிக்கிறார். அவரின் நடவடிக்கைகளில் காணப்படும் நெருடல்கள் அடுத்த விசுவாசியை இடறிவிழ வைக்கிறது. ஒரு வழியாகக் கையை ஊன்றி எழும்பும் அவர்; அடுத்தவரிடம் போய்ப் புறணி பேசி, புரளி கிளப்பி விடுகிறார், கடைசியில் அமளி துமளியாகி விடுகிறது. (அப். 20:30)

இந்த வட்ட அடுக்கு சுழற்றி சுற்றி சுற்றி "விதை" வரைக்கும் வந்தது, கடந்தும் போய்விட்டது. ஆனால் ஒன்றை நிச்சயப்படுத்திக் கொண்டேன். பரிசுத்தாவியானவர் ஒரு சத்தியத்தைச் சொன்னால், இது இம்மி பிசகாமல் சத்தியமாகத்தான் இருக்கும். மாறுபாடுள்ளவனுக்குத் தேவன் மாறுபட்டவராகத்தான் தோன்றுவார். பச்சைக் கண்ணாடிகள் பொருத்திய கண்ணாடியை போட்டுக் கொண்டுப் பார்த்தால் எல்லாம் பச்சையாகத்தான் தெரியும்.

ஆண்டவர் மேலும், அவர் தந்த ஆவியின் மேலும் தவறில்லை. இயேசு கிறிஸ்துவின் மீதும் தவறில்லை, அவர் தந்த அபிஷேகத்தின் மீதும் தவறில்லை. பரிசுத்தாவியானவரும் தவறு செய்யவில்லை, அவரது கிருபை வரங்களும் தவறிழைக்கவில்லை. தவறு நம் "பச்சைக் கண்ணாடிகள்" மீது தான்! அதை கழட்டி விட்டு தரிசனக் கண்ணாடியை மட்டும் மாட்டுங்கள் எல்லாம் சரியாகத் தெரியும். அதுசரி, தரிசனம் பெற்ற ஊழியக்காரர்கள் கூட அடுத்த ஊழியக்காரரை குறை சொல்லத்தானே செய்கின்றனர்? ஓகோ, அது வேறேயா, இதுக்கு என்ன பதில் சொல்ல? அவர்கள் கண்ணாடியை சரியாக துடைத்திருக்க மாட்டார்கள், அவ்வளவுதான்!

நான் பெற்றுக் கொண்டத் தரிசனம் தவறில்லை. அதைப் பார்ப்பவர்கள் அணிந்திருக்கும் பலதரப்பட்ட கண்ணாடிகளும், அதில் இணைக்கப்பட்டிருக்கும் பல நிறக் கண்ணாடிகளும்தான் காரணம்? அதற்கு நான் என்ன செய்ய? "விதை"தான் என்ன செய்யும்? அது வளர்ந்து கொண்டேதான் இருக்கும்.

வேதவாக்கியங்களின்படி போதிக்க வேண்டும் என்று வேதத்தில் ஆலோசனை வருகிறது. அப்படித்தான் போதிக்கிறார்கள். என்றாலும் அந்த வசனத்தைப் புரிந்து கொள்ளுதலில் வேறுபாடு இருக்கிறபடியால், அது உபதேசத்திலும் வந்து விடுகிறது. ( 1பேதுரு. 4:11)

ஒருவன் "பச்சை" நிறமான ஒரு மரத்தை பார்க்கிறான். அவன் தன் வாழ்நாள் முழுவதும் அந்த மரத்தின் நிறத்தை மற்றவர்கள் சொல்வதை

வைத்து “பச்சை” என்று Feel பண்ணுகிறான். ஆனால் வேறொருவன் முதலாமவன் பச்சையாக Feel பண்ணும் நிறத்தை, நீல நிறமாக Feel பண்ணுகிறான். அதாவது முதலாமவன் ஆகாயத்தை எவ்விதமாக Feel பண்ணுகிறானோ அந்த விதமாக இவன் மரத்தை Feel பண்ணுகிறான். ஆனால் எல்லோரும் மரத்தின் நிறத்தை பச்சை என்று சொல்வதால் அவனும் தான் Feel பண்ணும் நிறத்தை பச்சை என்றே நினைத்துக் கொள்கிறான். ஆனால் பிறப்பு முதல் இறப்பு வரை கண்களின் இத்தன்மை மாறுவதில்லை. இந்த விஷயத்தில் ஒருவன் எவ்விதமாக Feel பண்ணுகிறான் என்பதை அடுத்தவனுக்கு கடைசி வரையில் தெரியப் படுத்தப் போவதுமில்லை. வேதத்தைப் புரிந்துக் கொள்ளுதலும் இவ்விதத்தில் தான் இருக்கிறது. இந்த உதாரணம் (example) உங்களுக்குப் புரிந்தாலும் சரி, புரியாவிட்டாலும் சரி. நிஜம் அதுதான்.

## முட்செடிகள்:

மக்கள் அதைத்தான் விரும்புகிறார்கள், அதனால் அதையே வித்திடவும் செய்கிறார்கள், இதனால் தேச எல்லையெங்கும் முட்காடுகள், இவை வசனத்தை நெருக்கிப் போடுகின்றன. (மத். 13:7) அதுமட்டுமா அதி-ருந்தே அக்கினி புறப்படுகிறது, விளைச்சலாக! (நியா. 9:15) இது ஏன் நடக்கிறது என்றால், சாத்தானின் மயக்கும் வார்த்தைகளால்! கலர் கலரான கனவுகளோடு, அவனோடு சென்று ஏமாந்து போகிறார்கள்.

அதுமட்டுமா, உண்மை தெரிந்ததும் அவன் Black Mail பண்ணுவதால் தப்பிக்க முடியாமல் மாட்டிக் கொள்கிறார்கள். (நியா. 9:14) என்றாலும் முடிவில் அந்த முட்செடி மிதித்துப் போடப்படும். தேவனுக்கு விரோதமான ஆலோசனைகள் நிலைப்பதில்லை. (2 இரா.14:9, 2 நாளா. 25:18)

மனோசே, கர்த்தருக்கு விரோதமாக துரோகம் செய்தான். தன் தகப்பன் எசேக்கியா தகர்த்துப் போட்ட சாத்தானின் பலிபீடங்களை திரும்பக் கட்டுகிறான். (இயேசுவை ஏற்றுக் கொண்ட தகப்பன் விட்ட பாவங்களுக்கு மகன் உயிர் கொடுக்கும் காரியங்கள்... சினிமாவை உதாரணமாகச் சொல்லலாம்.)

இதைத் தேவப்பிள்ளைகள் சாதாரணமாக எடுத்துக் கொண்டு விட்டுவைப்பது விபரீதத்திற்கு வித்திடுகிறது. இப்படிப்பட்டப் பாவங்களால் விழும் முட்செடிகளின் விதைகளும் முளைத்தெழும்புவதால் அவைகள் நம் வீட்டிலுள்ள சகல ஆசீர்வாதங்களையும் நெறித்துப் போடுகின்றன.

வயலின் மீது மழை பெய்யும் போது அதில் விதைக்கப்பட்டிருக்கும் நல்ல விதைகள் மாத்திரம் முளைப்பதில்லை, கூடவே நமக்கேத் தெரியாமல் விதைக்கப்பட்டிருக்கும் களைகளும் முளைத்து விடுகிறது. நல்ல விதைகளுக்கு என்று தனியாக மழையை எப்படி பெய்யவைக்க முடியாதோ, அப்படியேதான் இதுவும். T.V.-ல் இருந்து வரும் சினிமா பாட்டுக்கள், சாத்தானின் அசுத்தமான Networks, நல்ல Programme போலத்தான் தோன்றும். ஆனால் உள்ளே மறைந்திருக்கும் வக்கிரங்கள் போன்ற விஷவித்துக்களும் முளைத்து பயிரை நெருக்க ஆரம்பிக்கிறது. (சினிமா பாடல்களை “வேசியின் பாடல்கள்” என்று வேதம் கூறுகிறது. ஏசா. 23:15). இது மட்டுமா Computer முன் உட்கார்ந்தால் Internet-ல் விஷ விதைகள், Cell Phone-க் கையில் எடுத்தால் SMS-ல் விஷ விதைகள்) ஒன்றல்ல, இரண்டல்ல, ஓராயிரம் முட்செடிகளின் விதைகள், வித்தியாசம் தெரியாததால், விவரம் தெரியாததால், எது சரியானது என்று தெரியாததால் விதைக்கப்பட்ட விதைகளே ஏராளம், முட்செடிகள் காடாக மாறும் போது தேவ கோபம் அதில் பற்றியெறிய ஆரம்பிக்கிறது.

கோபம், பொறாமை போன்ற குணங்களும் ஆசீர்வாத விளைச்சலைக் கெடுக்கும் முட்செடிகள்தான் (யோபு. 5:2-5,8,9). தேவன் எதிர்பார்க்கும் ஆவியின் கனிகள் கிடைக்காமல்; மாமிசத்தின் கிரியைகளான "கசப்பான பழங்களை"க் கண்டவுடன் தேவன் கோபத்தில் பாதுகாவலை அகற்றி விடுகிறார். (ஏசாயா. 5:2) ஆடுமாடுகள் உள்ளே சென்று பயிரை மேய்ந்துப் போடுகின்றன. பயிர் விளையாத இடத்தில் முட்செடிகள்தான் முளைக்கும். ஆசீர்வாத விளைச்சல் இல்லாமல் போவதை விட, அதற்குப் பதிலாக சாபம் முளைப்பது தான் மிகப் பெரிய வேதனையாகும். (ஏசாயா.5:1-6)

ஆகாமியம், பெருமை, தேவனை மறப்பது போன்ற குணாதிசயங்கள் தேவனிடமிருந்து அக்கினி விதைகளை இறங்க வைக்கின்றன. சமீபத்தில் "ஊட்டி எஸ்டேட்"டில் (நீலகிரி மாவட்டம்) ஏற்பட்ட புகை மண்டலத்தினால் காட்டின் மரங்கள் கருகி சாம்பலானது. நெருப்பில்லாமல் புகையாது என்று பழமொழி உண்டு, ஆனால் நெருப்பில்லாமல் புகைந்ததே! (அப். 2:19) தேவனால் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும். (ஏசா. 9:10,13,18)

இராஜாவின் பெருமை என்னும் நெருப்பு வித்தினால், தேவனுடைய அக்கினிச் செடிகள் முளைக்கின்றன. (தான் ஆண்டவருடைய கையில் வெறும் கோடாரி தான் (வாள், தடி) என்பதை உணராததினால்) (ஏசா. 10:15) தேசத்தின் ஜனங்கள் பட்சிக்கப்படுகிறார்கள்.

## தேவனுடைய கோபத்தை உடனடியாக நிறுத்தியாக வேண்டும், அதற்கு என்ன செய்ய ?

"காட்டுத் தீ" அல்லது "பிரேரி புல்வெளித் தீ" எதுவானாலும் அணைக்க, தீ எரிந்துக் கொண்டிருக்கும் மறுபுறத்தில் தீ மூட்டுவதுதான்; என்று **Penny Moor** என்பவர் "பிரேரி புல்வெளி" என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

காட்டுத்தீ முட்செடிகள், புற்களின் மீது பற்றி சடசடவென்று வேகமாக எரிந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது. நடந்து வந்துக் கொண்டிருந்த அகதிகள் தப்பிக்க வழி தெரியாமல் திகைத்து நிற்கும் போது, அங்கிருந்த ஒரு வயதான வேட்டைக்காரன் எப்படியாவது அந்த பயணிகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற முடிவெடுக்கிறான்.

$^{1}/_{4}$ மைலுக்கருகில் தீ வந்து விட்டது. வேட்டைக்காரன் பயணிகளில் சிலரை கூப்பிட்டு; சுமார் 20 அடி விட்டமுள்ள வட்டப்பரப்பிலுள்ள புற்களை பிடுங்கி அப்புறப்படுத்தச் சொல்கிறான். பிடுங்கியதும் தரை வெளியே தெரிந்தது. எளிதில் தீப்பிடிக்கும்படி இருந்த பெண்களின் மெலிதான உடைகளின் மீது கனமான போர்வையை போட்டு மூடும்படி ஆலோசனை கொடுக்கிறான். பிறகு அவர்களை ஒரு விளிம்பில் நிறுத்தினான். உயரமாக வளர்ந்திருந்த புல்லின் எதிர்விளிம்பில் சென்று, கை நிறைய புற்களைப் பறித்து, துப்பாக்கியின் வெடிமருந்துள்ள இடத்தில் வைத்தான். காய்ந்த புல்-ல், துப்பாக்கியின் தீச்சுடர் பட்டதும் நெருப்பு பிடித்துக் கொண்டது. அச்சிறியத் தீயை ஒரு முட்புதரின் அடியில் வைத்து விட்டு, வட்டப் பகுதியின் நடுவில் வந்து நின்று கொண்டு கவனித்தான்...

தீ புதரில் ஆவேசமாக பற்றியெறிய ஆரம்பித்தது. "இது ஆபத்தான விளையாட்டுப் போலத் தெரிகிறதே, எதிரியை தூர விரட்டுவதற்குப் பதிலாக பக்கத்தில் அல்லவா கொண்டு வருகிறாய்?" என்றான் பக்கத்திலிருந்தவன் பயம் கலந்த ஆச்சரியத்துடன்.

பதில் எதுவும் சொல்லாத வேட்டைக்காரன் புன்சிரிப்புடன் கவனித்துக் கொண்டிருந்தான். தீ மூன்று பக்கங்களிலும் பரவியது. நாலாவது பக்கத்தில் எரிபொருள் இல்லாமல் போனதினால், தானாகவே அணைந்துக்

கொண்டிருந்தது, தரையை மெழுகியது போல சுத்தமாக்கிவிட்டுச் சென்றது. பயணிகளைத் தீச்சுவாலை நெருங்கியதும், அவர்கள் வேட்டைக்காரன் தீ மூட்டிய இடத்திற்கு நகர்ந்து தங்களை அனலிலிருந்து காப்பாற்றிக் கொண்டனர்.

சில நிமிடங்களில் தீச்சுவாலைகள் ஒவ்வொரு திசையிலும் பின்வாங்கத் தொடங்கியது. புகைமூட்டம் சூழ்ந்திருந்தது, ஆனாலும் அவர்கள் காப்பாற்றப்பட்டு விட்டனர். நம்பிக்கையோடு நிம்மதி பெருமூச்சு விட்டனர்.

காட்டுத்தீயை அணைக்கும் இம்முறை மேலோட்டமாகப் பார்க்கும்போது எளிதாகத் தோன்றினாலும், மிகக் கஷ்டமானது. அனுபவமில்லாத ஒருவர் இந்தக் காரியத்தைச் செய்திருந்தால் அவர், நிலைமையை இன்னும் மோசமாக்கியிருப்பார்.

வேட்டைக்காரனின் இந்தச் செயல் இரகசியம் என்ன? ஒரு எளிய **Physics Law** தான்! காற்று எரியும் முட்செடிகளி-ருந்து பயணிகளை நோக்கி வீசிக் கொண்டிருந்தாலும், அவர்களுக்கு முன் தீச்சுவாலையின் ஒரு இரகசியமானக் காற்றோட்டம் எதிர்திசையில் தீயை நோக்கி வீசிக் கொண்டிருந்தது!

தீயினால் வெப்படைந்த இலேசான காற்று; புல்வெளியில் இருந்து உட்புறமாக வீசிய குளிர்ந்த காற்றினால் மேலே, தள்ளப்பட்டது. இந்த இரகசியக் காற்றோட்டத்தை உணர வேண்டுமானால் தீ அருகில் நெருங்கி வரும் வரை காத்திருக்கத்தான் வேண்டும். வேட்டைக்காரன் அவசரப்பட்டிருந்தால், தீ எதிர்திசையில் பரவி ஆபத்தில் முடிந்திருக்கும். அதே நேரத்தில் அதிகம் தாமதித்திருந்தாலும் ஆபத்து, தீ மிகப் பக்கத்தில் வந்து விடும்.

தேவனை அறியாத, காட்டில் அலைந்து திரிந்து கொண்டிருக்கும், படிக்காத, ஒரு சாதாரண வயதான வேட்டைக்காரன் தன் சமயோசித புத்தியால், ஒரு சாதாரணக் காட்டுத்தீயை அணைத்து, பரிதாபத்திற்குரிய அகதிகளை காப்பாற்றிய தீரச் செயலை பாருங்கள்!

தேவனை அறிந்த நாம், அவரை அறிந்து கொண்டு அவரில் வளர்ந்துக் கொண்டிருக்கிற நாம், தேவனின் இந்தக் கோபாக்கினையின் நாட்களில் என்ன செய்துக் கொண்டிருக்கிறோம்? நமக்குத் தேவனுடைய கோபத்தின் காரணம் தெரியும், அதை மாற்றத் தேவையான **Spiritual Laws**-ம் தெரியும். என்றாலும் எடுக்கப்படும் முயற்சிகள் மிகக் குறைந்த அளவில் இருப்பதால் தீ அணைவதற்கான சாத்தியங்கள் தெரியவில்லை. (யோசுவா. 3:15,16,17)

பரிசுத்தாவியானவருடன் இணைந்த முயற்சியில் இறங்குபவர்களுக்கு எதுவும் சாத்தியமே. காரணம் அவருக்கு பிதாவின் இரகசியங்கள் தெரியும். 2 நாளா. 33:1-13-ன்படி தாழ்மையோடு கூடிய கண்ணீரின் ஜெபமும், ஆவியின் கனிகளும் எரிபொருள்களை அழிக்கும் வல்லமை பொருந்தியவை. ஆகாமியம், பெருமை, தேவனை மறக்கும் நன்றியில்லாத மனது... இவைகளை மாற்றுவோம். (ஏசா. 9:10,13,18)

தேசத் தலைவர்களின் பெருமையானப் போக்கு மாற வேண்டும். சுகபோக வாழ்க்கை மிக அபாயகரமானது. எல்லாவற்றையும் விட அபிஷேகம் மிக வல்லமை வாய்ந்த ஒரு தீயணைப்புக் கருவியாகும்! (ஏசா. 32:12, 55:7)

வசனத்திற்குக் கீழ்ப்படிந்து தேவனின் கோப தீக்கு முற்புறமாக "எதிர்த்தீ"யை உருவாக்குவோம். வேட்டைக்காரனிடம் துப்பாக்கி மாத்திரம் தான் இருந்தது. நம்மிடமோ அரண்களை நிர்மூலமாக்கும் காண்டாமிருகத்தின் பலன், ஒளிரும் சர்வாயுத வர்க்கம், "யெகோவா நிசி"

என்ற வல்லமையின் நாமம். (2 கொரி. 10:7), (சங். 92:10), (யாத். 17:15) இன்னும் என்னவெல்லாமோ உண்டு! அவற்றை விதைப்போம், தேவனின் “மன்னிக்கும் தயை பெருத்த இருதயத்தை” வசப்படுத்துவோம்! (ஏசா. 55:7) சரியான முயற்சி வெற்றியைக் கொண்டு வரும், வெற்றி நமதே! அல்லேலூயா!!

## சிலர் (விதைக்காமல்) போனால் என்ன ?

அதனால் தேவனுடைய உண்மை அவமாய்ப் போகாது (ரோமர். 3:3). இயற்கையின் விதிகளை எப்படி மாற்ற முடியாதோ, அதைப் போலவே வேத வசனத்துக்கடுத்த ஆவிக்குரிய விதிகளையும் மாற்ற முடியாது.

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்தால் பாக்கியம் பெற முடியும். விதியை மாற்ற முயற்சித்தால்? அதாவது வேதத்தை பெயரளவில் வாசித்து விட்டு; பாக்கியவானாக முயற்சித்தால், நடக்காது. (சங். 1:1)

ஏழைகளின் நியாயத்தை விசாரிக்கும் அரசாங்கம் (Government) தான் நிலைத்திருக்கும். பணக்காரர்களின் நியாயத்தை விசாரித்துவிட்டு, எத்தனை தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி தெளித்தாலும், பதவி நாற்கா-யை (Chair-ஐ) எவ்வளவுதான் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாலும், ஆட்சி பறிக்கப்படும், விதியை (Law) மாற்ற முடியாது. (நீதி. 29:14)

சரி, காரியத்தின் கடைத்தொகைக்கு வருவோம். விதைத்தால் தான் அறுவடை என்ற ஆவிக்குரிய கோட்பாடு (Spiritual Law)- ஐயும் மாற்ற முடியாது. (2 கொரி. 9:10)

“Perpetuum Mobile” (நிரந்தர இயக்கம்) என்ற ஒரு பௌதிக கோட்பாடு (Physics Law) ஒரு நீளமான உவமையாக இருந்தாலும் ஒரு நீண்ட சத்தியமும் அதனைத் தொடர்ந்து வருகிறது. கவனமாக இருக்காவிட்டால் புரியாது; பிறகு என்னைச் சொல்-க் குற்றமில்லை.

அதாவது “தூண்டுதல் எதுவுமின்றி முடிவில்லாமல் இயங்கிக் கொண்டே இருப்பது” என்று அர்த்தம். அதுவும் சும்மா இயங்காமல் ஏதாவது உபயோகமான வேலைகளைச் செய்தபடியே இயங்குவது. (பொருள்களைத் தூக்குவது, சக்கரங்களைச் சுழலச் செய்வது... இதுபோன்று ஏதாவது). ஆனால் இது “சாத்தியமில்லாதது” என்று விஞ்ஞான உலகம் உறுதி செய்து, இந்த விவகாரத்திற்கே முற்றுப்புள்ளி (Fullstop) வைத்தது. என்றாலும் சிலர் முயற்சியை நிறுத்தியபாடில்லை. (சில விசுவாசிகளின் விதைப்பில்லாத ஆசீர்வாத முயற்சிகளைப் போலவே.)

இந்த Perpetuum mobile Machines செய்ய முயற்சிப்பது முற்றிலும் பயனற்ற வேலை. நூற்றுக்கணக்கான இயந்திரங்கள் இவ்விதமாகச் செய்யப்பட்டும் ஒன்றாவது சரியாக இயங்கவில்லை. இந்த இயந்திரங்களைச் செய்த ஒவ்வொருவரும், அதை இயங்கவிடாமல் செய்யக் கூடிய ஏதாவது ஒன்றை மறந்து விட்டிருந்தனர்!

பண்டைக்காலத்தில் (இடைக்காலத்தில் என்று சொல்லலாம்) ரசவாதிகள் (தங்கம் உருவாக்கும் பொற்கொல்லர்கள்) தங்கள் வேலையை விட இந்த matter-க்கு முக்கியத்துவம் கொடுத்து மூளையை குழப்பிக் கொண்டனர்!

நிரந்தர இயக்க இயந்திரத்தை மட்டும் கண்டு பிடித்து விட்டால், மனிதனின் ஆற்றலுக்கு அளவே இல்லாமல் போய்விடும். தேவனைப் போலாகலாம் என்று chair-ஐத் தூக்கிக் கொண்டு தேவனையே தாண்டிக் குதிக்க முயற்சிப்பார்கள்! அதனால்தானோ என்னவோ தேவன் மனிதனின் அறிவுக்கும், முயற்சிகளுக்கும் ஒரு எல்லைக்கோடு போட்டுவிட்டார்!

(யோபு. 33:17) 6 உதாரணங்களின் மூலமாக இந்த சத்தியத்தைப் புரிய வைக்க முயற்சியெடுக்கிறேன்.

**No.1:** **Los Angeles** நகரில் ஒரு ஹோட்டல் விளம்பரத்திற்காக இரண்டு பெரியத் தூணாதாரங்களின் மேல், ஒரு பிரமாண்டமான சக்கரம் அமைக்கப்பட்டு, குண்டுகள் அதை சுழற்றி ஓட வைப்பதைப் போல தோற்றத்தை உண்டு பண்ணக்கூடிய ஒரு "போ- நிரந்தர இயக்க இயந்திரத்தை" **(Duplicate Perpetuum Mobile)** வடிவமைத்திருந்தனர்.

சாமர்த்தியமாக மறைத்து வைக்கப்பட்டு இருந்த ஒரு மின்சார அமைப்பினால் அது இயக்கப்பட்டு வந்தது. சில மாணவர்களை இது மிகவும் கவர்ந்து விட்டது. அது மிகவும் தத்ரூபமாக இருந்ததால் அதை உண்மையென்றே அவர்கள் நம்பினார்கள். அவர்களின் ஆசிரியர் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அது மின்சாரத்தால் இயக்கப்படுகிறது என்பதை அவர்கள் நம்பவில்லை.

அக்காலங்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் அந்நகரில் மின்சாரம் நிறுத்தப்படுமாம். அதனால் அன்றைய தினத்தில் அந்த ஹோட்டலுக்குச் சென்று பார்க்கும்படி அந்த **Teacher** தன்னுடைய **Students**-க்கு கட்டளையிட்டார். போய்ப் பார்த்துவிட்டு தலையை தொங்கவிட்டபடி மாணவர்கள் திரும்பி வந்தனர். கேட்டதற்கு, இல்லை இயங்கவில்லை, சக்கரம் மூடப்பட்டிருந்தது என்றனர் வெட்கத்துடன்.

ஆற்றல் அழிவின்மை விதியின்மேல் அவர்களுக்கு நம்பிக்கை உண்டாயிற்று; அந்த நம்பிக்கையை, பிறகு அவர்கள் இழக்கவேயில்லை.

அதாவது விதைக்காமல் அறுவடை மட்டும் வயல்களின் மீது நிகழ்ந்து கொண்டேயிருந்தால், அது நிஜமல்ல, **Magic**. நம் தேவன் மந்திரவாதியல்ல, நாமும் மந்திரவாதிகளல்ல. அது சாத்தியமல்ல என்று பரிசுத்தாவியானவர் வசனத்துக்கு வசனம் சொல்-யும் இவர்கள் நம்புவதில்லை. (1 சாமு. 12:15) "ஆசீர்வதியும் தேவனே" என்று ஜெபிக்கின்றனர்.

இவர்கள் முயற்சிப்பது போல் விதைப்பில்லாமல் அறுவடை இருக்குமானால், விளையும் ஆசீர்வாதத்தை சேர்த்து வைக்க இடமில்லாமல் செவ்வாய் கிரகத்துக்குப் போக வேண்டியதாயிருக்கும். இந்த பேச்சுக்களெல்லாமல் ரொம்ப நாளாகவே நடந்து கொண்டிருக்கிறது, வெறும் பேச்சோடுதான் நிற்கிறது. அதனால் தான் ஆவிக்குரிய நிரந்தர இயக்க இயந்திரத்தை தேவன் செயலற்றதாக்கிவிட்டார்! (பிர. 7:13)

"போ- நிரந்தர இயக்க இயந்திரத்தைப்" போல, சாத்தானால் ஏமாற்றப்படுபவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் தேர்ச்சியடையாத மாணவர்களைப் போன்றவர்கள்தான். படித்தும் தெரியவில்லை, அவர்கள் "மாம்சீக கண்ணோட்டத்தில்" பார்ப்பதால் மறைத்து வைக்கப்பட்டுச் செயல்படுத்தப்படும் "சாத்தானின் இரகசியம்" புரிவதில்லை. (சங். 73:12)

ஒரு குறிப்பிட்டக் காலக்கட்டத்தில் பரிசுத்தாவியானவர் இடைபடும் போது புரிந்து கொள்வார்கள், பிறகு அவர்கள் விசுவாசத்தை இழந்து போகமாட்டார்கள். (சங். 36:9)

**No.2:** உருவாக்கப்பட்ட நூற்றுக்கணக்கான நிரந்தர இயக்க இயந்திரங்கள் 1860-ஆம் ஆண்டு பாரிஸ் நகரில் ஒரு கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு இயந்திரம் மிக சாமர்த்தியமாக வடிவமைக்கப்பட்டிருந்தது. ஒரு பெரிய சக்கரத்தின் அறைகளில் இரண்டு குண்டுகள் உருண்டு கொண்டிருந்தன. "எவராலும் அதை நிறுத்த முடியாது" என்று அதைக் கண்டுபிடித்தவர் கூறினார். பலர் நிறுத்த முயன்றனர், ஆனால் கைகளை எடுத்த உடன் அது மீண்டும் சுற்றிக்கொண்டே இருந்தது.

அதை நிறுத்துவதற்குப் பயன்படுத்தியச் சக்தியினாலேயே அது மறுபடியும் சுழன்றது என்பது ஒருவருக்காவது தெரியவில்லை.

பார்வையாளர்கள் அந்த இயந்திரத்தை நிறுத்துவதற்காக, பின்புறமாகத் தள்ளியபோது; மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு **Spring** அதை இயக்கியது!

ஆண்டவருக்கு காணிக்கைக் கொடுக்காமல், ஆசீர்வாதத்தை மட்டும் எப்படியாவது வாங்கிவிடலாம் என்று திட்டமிட்டுச் செயல்பட்ட விசுவாசக் கூட்டத்தார் தோல்வியைத் தழுவிக் கொண்டே இருந்தனர். (ஆமோஸ். 4:7)

சிலர் மிக சாமர்த்தியமாக, நூதன முயற்சிகளை மேற்கொண்டனர். அப்படி முயற்சித்தபோது, அவர்களையும் அறியாமலேயே "தேவ நியதி"யான "விதைப்பு" என்ற பகுதியைத் தொட்டு, அசைத்து, கடைசியாக அதற்குள்ளாகவே போய்விட்டிருந்தனர். அவர்கள் விழித்துக்கொண்ட போது வாக்குத்தத்தம் "ஆம்" என்றும் "ஆமென்"என்றுச் சொல்லியும் வேலை செய்ய ஆரம்பித்தது! (எபே.1:19) குண்டுகளைச் சுழல வைத்தது, நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்தியது. (ரோமர். 3:31)

**No.3:** ரஷ்ய எழுத்தாளர்கள் பலர் இந்த **Perpetuum Mobile** பிரச்சனையால் மிகவும் கவரப்பட்டனர். 19-ம் நூற்றாண்டில் பிரபலமான **Suldicov-Shethrin** என்பவர் தன்னுடைய "நவீன காப்பியம்" என்ற நூலில் ஒரு சைபீரிய குடியானவன் **Alexander Sheklow**-ப் பற்றியும் அவருடைய இயந்திரத்தைப் பற்றியும் கூறுகிறார். **Alexander Sheklow** (வயது 35, ஒல்லியான உருவம், வெளுத்த முகம், சிந்தனை தேங்கிய கண்கள்).

சற்றுப் பெரியதாயிருந்த அவருடைய அறையின் பாதிப் பகுதியை ஒரு மிகப் பெரிய "சமஇயக்கச் சக்கரம்" அடைத்துக் கொண்டிருந்தது. வெளிப் பகுதி மரத்தால் செய்யப்பட்டிருந்தது. பெட்டியைப் போன்று பலகைகள் ஆணிகளினால் இணைக்கப்பட்டிருந்தது. காலியான அதன் உட்புறத்தில் ஒரு "சூட்சுமம்" இருந்தது. அது. ஒன்றையொன்று சமநிலைப்படுத்தும் "மணல் மூட்டைகள்"தான். ஆரங்களிடையே இருந்த ஒரு கம்பு, சக்கரத்தை சுழலவிடாமல் நிறுத்தி வைத்திருந்தது.

பார்க்கப் போயிருந்த சுல்திக்கோவ் ஷேத்ரினிடம் அதைக் இயக்கிக் காட்டுவதற்காகக் கம்பை வெளியே உருவி எடுத்தார், சக்கரம் சுழலவில்லை!

"சுழல வேண்டுமே! இது சற்று மந்தமாக இருக்கிறது, அடிக்கடி இடக்கு செய்கிறது" என்று சொல்லிக் கொண்டே மீண்டும் விளிம்பைப் பிடித்து முழுபலத்துடன் சுற்றிவிட்டார். சக்கரம் சுழல ஆரம்பித்தது, சிக்கலின்றி பலமுறை சுழன்றது, மணல் மூட்டைகள் பலகைகள் மீது மோதி சறுக்கிச் செல்வதைப் பார்க்க முடிந்தது.

பிறது, மெல்ல மெல்ல வேகம் குறைந்தது ... குறைந்தது ... கிறீச்சிட்டு நின்றே விட்டது! மறுபடியும் சக்கரத்தைக் கைகளினால் பிடித்துத் தள்ளிக் கொண்டே, "எங்கோ பிரச்சனை" என்று தடுமாற்றத்துடன் கூறினார். "உராய்வை மறந்து விட்டீர்களோ?" என்றுக் கேட்டார் ஷேத்ரின். "உராய்வெல்லாம் ஒன்றுமில்லை, சில சமயம் சக்கரம் சுழல்கிறது, சில நேரங்களில் டிமிக்கியடிக்கிறது, சக்கரம் மட்டரக பொருளினால் செய்யப்பட்டதுதான் காரணமாக இருக்கும்" என்று முணுமுணுத்தார்.

அவர் சொன்ன சாக்குப்போக்கு எதுவுமே இதற்கு காரணம் அல்ல, தவறான கோட்பாடே காரணமாகும். தூண்டுதலினால் சக்கரம் சிறிது சுற்றியது. ஆனால் வெளியிலிருந்து கொடுக்கப்பட்ட இந்த ஆற்றல் உராய்வினால் தீர்ந்து போனதும் சக்கரம் நின்றுதானே ஆகவேண்டும்?

“செழிப்பின் உபதேசத்”தினால் கவரப்பட்ட பலர் (நான் அதை தவறென்று வாதிடவில்லை, வேத வசனங்களை சார்ந்ததாக இருக்கும் சத்தியங்கள் எதுவும் தவறாக இருக்க வாய்ப்பில்லை... சில நேரங்களில் எல்லை மீறும் போது தவறான உபதேசமாக மாறிவிடவும் வாய்ப்புண்டு) (நீதி. 25:16). தங்களின் உள்ளான மனிதனின் வளர்ச்சிக்குத் தக்கபடி தங்கள் முயற்சிகளைத் தொடர்ந்தனர்; எப்படியாவது தேவனிடமிருந்து ஆசீர்வாதத்தை வாங்கிவிட வேண்டுமென்று! (நானும் முயன்றிருக்கிறேன், இல்லையென்று சொல்லவில்லை.) முயற்சிகள் அடிசறுக்க... சோர்ந்து... விசுவாசத்தை விட்டே பின்வாங்கிப் போனார்கள். (1 இரா. 17:12)

ஆசீர்வாத வாக்குத்தத்தக் கட்டளைகளை கைக்கொள்ளாமல், வெறுமனே சுவரில் மாட்டி அழகு பார்த்தார்கள். ஆரம்பக்கட்ட முயற்சி **success** ஆனது போல தோன்றியது. தோல்வி **slow motion**-ல் எழும்பி அவர்களைப் பின்னாகத் தள்ளிப் போட்டது! (1 கொரி. 15:2)

தங்கள் தோல்வியை ஒத்துக் கொள்ளாமல், “தேவனுக்குச் சித்தமில்லை, பில்லி சூனியம், அது இது” என்று கதைவிட ஆரம்பித்தனர். (எண். 23:23) அவர்கள் முயற்சித்ததில் தவறில்லை. கொஞ்சம் ஜெபம், கொஞ்சம் விசுவாசம், கொஞ்சம் அறிக்கை என்று காலத்தை ஓட்டினர், முடியவில்லை. வாக்குத்தத்தக் கட்டளை என்ற உராய்வினால் இவர்களின் முயற்சிகள் தீர்ந்து போனபோது, சக்கரம் நின்று விட்டது! (யாக். 1:6,7)

**No.4:** **Arkpherious (Jermany)** என்பவர் கண்டுபிடித்த **Perpetuum mobile** தான் மிகவும் புகழ் வாய்ந்தது. **King Peter** இதை வாங்க பல முயற்சிகள் எடுத்தார். இதற்கு 1 லட்சம் ரூபிள் விலை பேசினார். “இது போ-யல்ல, கெட்ட எண்ணம் கொண்டவர்கள்தான் அவ்விதமாகப் பொய் பிரச்சாரம் செய்து வருகின்றனர்” என்று அறிக்கை வேறு கொடுத்தார்.

ஐரோப்பா முழுவதும் சுற்றினார், பேரும் புகழும் குவிந்தது. போலந்து அரசர் ஹெசி ஹாசல் பிரபு என்பவர் இதை வாங்க முடிவெடுத்து, அதை பல சோதனைக்குட்படுத்திப் பார்த்தார்.

12.11.1717ஆம் ஆண்டு இந்த இயந்திரம் இயக்கி விடப்பட்டது, கதவை பூட்டி சீல் வைத்தார். 26.11.1717 அன்று திறந்துப் பார்த்த போது, அது விடாமல் ஓடிக் கொண்டிருந்தது! இதே போல 40 நாட்கள், 2 மாதங்கள் என்று சோதனை செய்துப் பார்த்தார், ஓடிக் கொண்டேதான் இருந்தது!! உடனே “முதல் நிரந்தர இயக்க இயந்திரத்தை உருவாக்கியவர்” என்ற நற்சான்றிதழ் வழங்கப்பட்டது.

சிலர் நம்பவில்லை, இந்த புரட்டை வெளிப்படுத்துபவருக்கு 1,000 மார்க் (ஜெர்மன் நாணயம்) என்று பரிசுத் தொகையும் அறிவிக்கப்பட்டது.

சில நாட்களில் வெளியான ஒரு “கண்டனக் கட்டுரை”யில் அந்த இயந்திரம் இயங்குவதற்குக் காரணமான “ஒரு இரகசிய விளக்கப் படம்” வெளியானது.

சக்கரத் தூண்கள் அமைக்கப்பட்டிருந்த உட்பகுதியில் பதுங்கியிருந்த ஒரு ஆள் மூலமாக, கயிற்றினால் இழுக்கப்பட்டு, சக்கரம் இயக்கப்படுவதாக அந்த படத்தில் சித்தரிக்கப்பட்டிருந்தது. அகஸ்மாத்தாய் குட்டு வெளிப்பட்டு விட்டது!

ஆர்க்பெரியசுக்கும் அவருடைய மனைவிக்கும் ஏற்பட்ட குடும்பத் தகராறினால் கோபமடைந்த மனைவியும், வேலைக்காரியும் சேர்ந்து அவரை “போட்டுக் கொடுத்து” விட்டனர். ஆனால் ஆர்க்பெரியஸ் சாகும்வரை உண்மையை ஒத்துக்கொள்ளவே இல்லை. தன் மனைவி தன் மீதுள்ள வன்மத்தினால் இவ்விதமாகத் தூற்றியதாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

வாக்குத்தத்த ஆசீர்வாதங்களுக்கு எதிரான போராட்டத்தில் சாத்தான் தான் பெருமளவில் வெற்றி பெற்றான் என்பது மறுக்க முடியாத உண்மைதான் என்பதை வெட்கத்தோடும், வேதனையோடும் ஒப்புக் கொள்கிறேன் (ஒப்புக் கொள்வோம்.) (சக. 3:1)

2007 வருட சபை வரலாற்றில் இவனை நம்பி ஏமாந்தவர்கள் ஏராளம், ஏராளம்! தேவ ஜனங்களைக் கவிழ்த்துப் போட அவன் செய்த பித்தலாட்டங்கள் ஒன்றா இரண்டா? (மாற்கு. 4:15)

விழிப்புணர்ச்சியுள்ள சிலரைக் கூடச் சலனத்துக்குட்படுத்திக் கெடுத்தே விட்டான். மிக மிகச் சிலர் **alert** ஆனார்கள், ஆனால் மிக **late** ஆக! சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் போகத்தக்கதாக தேவ ஜனங்களை மயக்குவதில் அவனைப் போலக் கில்லாடி எவருமில்லை! (லூக்கா. 22:31)

ஆனாலும் தேவ ஜனத்தின் பக்கத்தில்தான் வெற்றி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சிலர் அவனை நம்பாமல் அவனுடைய புரட்டுக்களை வெளிப்படுத்த முயற்சிகள் எடுத்தபோது, அகஸ்மாத்தாய் இரகசியம் வெளியே வந்துவிட்டது! (2 கொரி. 2:11). சாத்தானின் இரகசிய பதுங்கு அறையில், தேவ இராஜ்ஜிய வித்துக்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தார்கள். அவை ஜெபம், சுவிசேஷம், வசனம், அபிஷேகம், உழைப்பு, ஆவியின் கனிகள், விசுவாசக் கிரியைகள், ஆசீர்வாதங்கள், பணம் போன்றவை! அதை பார்த்தவர்கள் உலகத்திற்கு வெளிப்படுத்தினார்கள் (படுத்துகிறார்கள், படுத்துவார்கள்). (சங். 25:14) என்றாலும் அவன் "புழுகு மூட்டைகளை அவிழ்த்து விடுவதை" நிறுத்தவில்லை. அவன்தான் அதற்கு அப்பன் ஆச்சே! தேவ ஜனங்கள் மீதே பழியைத் தூக்கிப் போடுகிறான், அசகாய சூரன்! (யோவான். 8:44)

**No.5:** உபீம்சேவ்-ன் "இயக்க ஆற்றல் திரட்டி" **(Aqumulator)** மேலோட்டமாகப் பார்த்தால் ஏமாற்றப்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உண்டு. சம சக்கர இயக்க கோட்பாட்டில் "காற்றாடி விசை" ஒன்றை **Model** ஆக செய்தார். காற்றில்லாத வெற்றுக் குழ-னுள் பால் பேரிங்குகளின் மீது வைக்கப்பட்டு, செங்குத்தான அச்சைச் சுற்றி சுழற்றும் தட்டினால் செய்யப்பட்டிருந்தது. நிமிடத்திற்கு 20,000 சுற்றுகள் சுழலும்படி அதை முடுக்கிவிட்டால், 15 நாட்கள்வரை நிற்காமல் சுழலும். ஆழ்ந்த சிந்தனையில்லாதவர்கள் இதை நேரில் பார்க்கும்போது, கண்டிப்பாக ஏமாந்து போவார்கள்.

போ- நிரந்தர இயக்க இயந்திரங்களைப் போல சாத்தான் காட்டி ஏமாற்றுவது பெரும்பாலும் புறஜாதியாரையும், பெயர்க் கிறிஸ்தவர்களையும் தான். "அவர்கள் விதைக்காமலேயே நன்றாகத்தானே இருக்கிறார்கள்" என்பான். அவர்கள் வாக்குத்தத்தத்தின் உடன் பங்காளிகள் அல்ல என்ற சத்தியத்தை அறியாதவர்கள் நம்பத்தான் செய்வார்கள். (ரோமர். 4:14)

**No.6:** **Perpetuum mobile** அமைக்க முயன்று, இருந்த பணத்தையெல்லாம் செலவழித்து, வறுமையில் மூழ்கி, வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டவர்கள் பலர்.

ஆனால் அது சாத்தியமல்ல என்ற தெளிவு; உயர் மதிப்புள்ள பல கண்டுபிடிப்புகளுக்கு வித்திட்டது. 16ம் நூற்றாண்டில் **Dutch Sc. Steevin** என்பவர் "சாய்தளத்தில் செயல்படும் சக்திகளின் சமநிலை பற்றிய விதி"யைக் கண்டுபிடித்தது ஒரு முக்கியமான எடுத்துக்காட்டாகும். அவருடைய முக்கியக் கண்டுபிடிப்புகளை இக்காலங்களில் எந்நேரமும் நாம் உபயோகித்து வருகிறோம். **Decimal Law, Trigonometry, Pascal Law, Liquid state law** போன்றவைகள் அதில் முக்கியமானவைகளாகும்.

Rules and Regulation-ஐ கண்டு கொள்ளாமல்; வாக்குத்தத்தக் கதவுகளுக்குள் நுழைந்து, அடி வாங்கிக் கொண்டு திரும்பியவர்கள் பலர். (ஆயிரமாயிரம், லட்சாதிலட்சம், கோடானுகோடி) (கலா. 3:22) தேவ பிள்ளைகளின் வறுமை, சபை வரலாற்றில் சகிக்கமுடியாத ஒரு Blackmark ஆக... சுவிசேஷ வரலாற்றில் மறுக்கமுடியாத ஒரு அடிச்சறுக்கலாகவும் மாறிப்போனது. (ஓசியா. 4:6) என்றாலும் தரிசனம் பெற்றவர்கள் "அது சாத்தியமல்ல" என்ற சத்தியத்தைக் கண்டு கொண்ட போது; விழித்துக் கொண்டனர். புதிய சகாப்தத்தை நோக்கிப் படியேற ஆரம்பித்தனர். சாத்தானை "பேய் முழி முழிக்க" வைத்தனர்! (யாக். 4:7) அல்லேலூயா!!

## இளைஞர்களே... ஆத்ம பாரம் எங்கே ?

தங்களுடைய எல்லைகளில் விளைந்திருக்கும் பயங்கரங்களின் விளைச்சல்களைப் பார்க்கவோ, அதைப் பற்றி யோசிக்கவோ, அதை தடுத்து நிறுத்தவோ தேவையான வெளிச்சம் இல்லாமல், தேவனைக்குறித்த ஞானமில்லாமல், வல்லமையில்லாமல் இருக்கிறார்கள்.

சாத்தானின் கைவசமிருக்கும் விபரீத விதைகளை (Fornication, Impurity, Licentiousness) உற்றுப்பார்க்கும் சந்தர்ப்பம் இந்தத் தரிசன கண்ணோட்டத்தில் கிடைத்தது. இந்தப் பாவங்களில் வா-ப பையன்களையும், பெண்களையும் விழ வைத்து, அவர்கள் நரம்பு மண்டலத்தை கெடுத்து, வியாதியில் தள்ளி, கொன்று, பாதாளத்திற்குள் இழுத்துக் கொண்டு போவது சாத்தானுக்கு எளிதாக இருக்கிறது. வருங்காலத்தில் சுவிசேஷ வேலைக்கு ஆள் இல்லாமல் செய்து விட்டால், தேவ இராஜ்ஜியக் கட்டுமானப் பணி நிறுத்தப்படும். உலகத்தையே சுடுகாடாக்கிவிடலாம் என்று சாத்தான் திட்டமிடுகிறான். அதைத் தடுத்து நிறுத்த, நமக்கு இறுதிகட்டத் தருணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

காலச்சக்கரத்தின் பல் சக்கரங்கள் தேய ஆரம்பித்துவிட்டன. இயேசு கிறிஸ்து பிதாவின் வலதுபாரிசத்தில் இல்லை. அவர் வாசலருகே வந்து வெகுகாலங்களாகி விட்டன. வரப்போகும் இராக்காலத்தில் நமக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்படப் போவதில்லை. அதனால் நம் காலத்தில், நம் காலம் முடியுமுன் ஏதாவது செய்வோம். (எபே. 5:16)

தன்னுடைய இளைய தலைமுறையினரை சாத்தான் முற்றுகையிட்டிருக்கும் பயங்கரம் புரியாமல் 40, 50, 60, 70 சில நேரங்களில் 80, 90 வயதுடைய அப்பா, மாமா, சித்தப்பா, பெரியப்பா, தாத்தா, பெரியதாத்தா, சின்னத்தாத்தா எல்லோரும் தங்கள் ஊழியத்திலேயே கண்ணாயிருக்கும் சுயநலப்போக்கை அடையாளம் கண்டுபிடிக்க எனக்கு ரொம்பக்காலம் பிடித்தது.

தன் சொந்தக் குடும்பத்தைக் கவனிக்காமல், தேவனுடைய சபையை விசாரிக்க முடியாது என்று வசனம் எச்சரிக்கிறது. (1தீமோத். 3:5) பிள்ளைகளைத் தனியாக வீட்டில் வைத்து விட்டு, பெரியவர்கள் Fasting Prayer போகும் நேரங்களில் சாத்தான் பிள்ளைகளைத் தேடி வருகிறான். சுவிசேஷ ஊழியத்திற்கு போகும் போது தன் Teenage பிள்ளைகளுக்கு அவர்களுடைய வயது, படிப்பு, ஆவிக்குரிய வளர்ச்சி இவைகளுக்கு ஏற்றபடி ஏதாவது ஒரு வேலையைக் கொடுத்து, கூடவே கூட்டிப் போகலாம். (புல. 3:27)

America-வில் வாலிபர் மத்தியில் மிக சுறுசுறுப்பாக ஊழியம் செய்யும் ஊழியர் Rawn Lucy (www.battlecry.com) அமெரிக்க இளைஞர்களைப் பற்றி ஒரு Survey எடுத்திருக்கிறார்.

II World War Period-ல் இரட்சிக்கப்பட்ட இளைஞர்கள் 65% இருந்தார்களாம். இப்போதோ வெறும் 4% ஆக அவர்கள் குறைந்து விட்டிருப்பதாக தெரிவித்திருந்தார். (பெயர்க் கிறிஸ்தவ இளைஞர்களையும்,

கிறிஸ்துவில் வளராதவர்களையும் இந்தப் பட்டியலில் சேர்க்கவில்லை. சத்தியத்தின்படி நடக்கும் இளைஞர்கள் மட்டும்.) ஒரு கிறிஸ்தவ நாட்டின் நிலைமையே இப்படியென்றால், மற்ற நாடுகளில் ... ? இந்தியாவின் நிலைமை என்ன?

இன்னும் சில ஆண்டுகளில் "America ஒரு காலத்தில் கிறிஸ்தவ நாடாக இருந்தது" என்று பிற்கால சந்ததியினருக்குச் சொல்ல வேண்டியதிருக்கலாம். இயேசுவின் வருகை தாமதித்தால் இந்த விபரீதம் நடக்கவும் வாய்ப்பிருக்கிறது என்று பயத்தோடு கூறினார்.

விளம்பரதாரர்கள் கூட தங்கள் **Product** ஐ **Teenage** பிள்ளைகள் மத்தியிலேயே அதிகமாக விளம்பரப்படுத்த முயற்சிக்கின்றனர் (ஒயின், சிகரெட் உட்பட). ஏனென்றால் "இந்த வயதில் ஒரு பொருளை வாங்க வைத்து விட்டால்; பிறகு எளிதாக அவர்களை மாற்ற முடியாது, தொடர்ந்து வாங்கிக் கொண்டே இருப்பார்கள்" என்ற வியாபார தந்திரம் **(technique)** தான் காரணம். இந்த யுக்தியை அவர்கள் சாத்தானிடமிருந்து பெற்றிருக்கிறார்கள் என்பதைச் சொல்-த்தெரிய வேண்டியதில்லை.

சாத்தான் வா-பர்களைக் குறி வைப்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. தேவ இராஜ்ஜியத்துக்கடுத்த வேலைகளை அவர்களே திறமையாகச் செய்ய முடியும் (யாத். 24:5) ஆலய வேலைகளை அவர்களே சிறப்பாகச் செய்ய முடியும். (யாத். 33:11) **Risk** எடுக்க தயங்க மாட்டார்கள். ஆபத்தான நேரங்களிலும் தைரியத்துடன் இருப்பார்கள். (யோசுவா. 6:23), புத்திக் கூர்மை (ஞாபக சக்தி) அதிகம் இருக்கும். (நியா. 8:14). திறமை (1 சாமு. 8:16), அழகு (பராக்கிரமம்) (1 சாமு. 9:2), யுத்த ஆயுதங்களை சரிவர உபயோகப்படுத்தக்கூடிய பலம் இருக்கும் (1 சாமு. 14:1) **Attraction!** (1 சாமு. 17:58), **Messengers** (1 சாமு. 25:5,8,9,12) காரிய சமர்த்தனாக... (1 இரா. 11:28), காட்டிலும், வீட்டிலும் வா-பர்களே! (ஆதி. 25:27). தேவனுடைய கோலைப் பிடிக்கும் பாக்கியம் பெறுகிறார்கள். (யாத். 4:20),

இப்படியாக இளைஞர்களைத் தேவனுக்காக, கோதுமை மணிகளாக விதைக்கும் முன்னதாக அவர்களுக்காக நாமும் விதைக்க வேண்டும். தாவீது தன்னுடைய மகன் தேவாலய வேலையைச் சிறப்பாக செய்ய வேண்டும் என்பதற்காக விதைத்தது; தற்கால கணக்குப்படி ஏறக்குறைய 5000 கோடி ரூபாய்! (1 நாளா. 29:1-7)

சாத்தானின் அடுத்த குறி பிள்ளைகள், (சிறுவர், சிறுமியர்கள், குழந்தைகள், வயிற்றில் இருக்கும் குழந்தைகள், கர்ப்பஸ்திரிகள் ...) ஏன்? இவர்கள் தான் உருவாகி, பிறந்து, வளர்ந்து வாலிபராக உருவெடுக்கப் போகிறவர்கள் என்பதால்.

பிள்ளை பெறும் வேதனை (ஆதி. 3:16), பிள்ளைகளுக்கு வாரிசுரிமை இருப்பதால் (ஆதி. 15:3), கைக்குழந்தையின் அழுகுரல் கூட ஜெபம் தான், அதைத் தேவன் கேட்கிறார்! (ஆதி. 21:17), நீதிமான்களுடைய பிள்ளைகளுடன் தேவன் இருக்கிறார். (21:20), அனாதைப் பிள்ளைகள் மேல் விசேஷித்த கரிசனையுடையவர் நம் தேவன் (யாத். 22:22), பிள்ளைகளை நரபலி கொடுப்பவர்களுக்குத் தேவன் பயங்கர எதிரியாக வருகிறார். (லேவி. 20:2) **...etc.,**

சாத்தான் இளைஞர்கள் மீது தன் ஆளுகையை, அதிகாரத்தைச் செலுத்தி, அவர்களை அடிமைப்படுத்தி அசையக்கூட முடியாதபடி செய்கிறான். ஒரு நாற்காலியின் மீது நிமிர்ந்து உட்காருங்கள். கைகள் இரண்டையும் முன்னால் கால் மீது வைத்துக் கொள்ள வேண்டும். பாதங்களை நாற்காலிக்கு கீழாகக் கொண்டு போகக்கூடாது. இப்போது, பாதங்களை

அசைக்காமல் (நகர்த்தாமல்), முன்புறம் சாயாமல், கைகளை ஊன்றாமல் எழும்பி விடுங்கள் பார்க்கலாம். (முயற்சித்துத் தான் பாருங்களேன்) எவ்வளவு சிரமப்பட்டு முயன்றாலும் நிச்சயமாக எழுந்திருக்க முடியாது!

என்ன செய்தால் நாற்காலியை விட்டு எழும்பலாம்? கால்களை நாற்காலிக்குக் கீழாக நகர்த்தினாலோ, முன்புறமாகச் சாய்ந்தாலோ (கைகளை ஊன்றினாலோ) எழும்பி விடலாம். (ஏன்? இங்கு என்ன நடக்கிறது?)

நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் போது நம் “ஈர்ப்பு மையம்” முதுகெலும்புக்கு அருகே 20 செ.மீ. உயரத்தில் இருக்கிறது. இதிலிருந்து ஒரு “நேர்க்குத்துக் கோடு” வரைந்தால்; நாற்காலியினூடே, பாதங்களுக்குப் பின்னதாக அது இருக்கும். பாதங்களுக்கு ஊடாக நம் “ஈர்ப்பு மையம்” சென்றால் தான் எழும்ப முடியும்.

அதனால் தான் எழுந்து நிற்க வேண்டுமானால்; ஈர்ப்பு மையத்தை இடம் பெயரச் செய்ய முன்புறமாக குனிய வேண்டும். அல்லது ஈர்ப்பு மையத்தின் நேர்க்குத்துக் கோடு ஊடுருவிச் செல்வதற்கு வசதியாக பாதங்களை நாற்காலிக்கு அடியில் கொண்டு போக வேண்டும்.

இந்த இரண்டு காரியங்களையும் செய்ய நாம் அனுமதிக்கப்படாவிட்டால்; ஒரு போதும் நாற்கா-யில் இருந்து எழும்பவே முடியாது. அவன் அனுமதிக்கமாட்டான்; இயேசுவின் நாமத்தினால் அவனைப் பின்னாகத் தள்ளிவிட்டு எழுந்து நில்லுங்கள்.

“விற்று தரித்திரருக்குக் கொடு” என்ற ஒரு கடினமான, விதைப்பின் இரகசியத்தை தேவன் இயேசு ஒரு வாலிபனிடம் சொன்னதும்; தேவனுடைய எதிர்பார்ப்பை நிராகரித்து, அவரை ஏமாற்றிவிட்டுச் சென்ற வாலிபனைப் போல இருக்க வேண்டாம். இயேசு கிறிஸ்து சொன்னபடி செய்யுங்கள், இவ்வுலக பொக்கிஷங்களும் கிடைக்கும், பரலோக பொக்கிஷங்களும் கிடைக்கும். காண்பதும் கிடைக்கும், காணாததும் கிடைக்கும். (மத். 19:21,22) விதைப்பைப் பற்றிய பிரசங்கங்கள் சர்ச்சைகளுக்குள்ளாகக் காரணம் என்ன? ஐசுவரியத்தின் மயக்கம்தான், கொடுக்க மனசில்லை, குறைந்து போயிருமே என்கிற பயம் தான்.

இளைஞர்களே! இயேசுவை விட்டு ஓடாதீர்கள். இயேசுவுக்காகப் பாடனுபவிக்க, இவ்வுலகத்தில் மட்டும்தான் தருணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பரலோகத்தில் தான் சிலுவையில்லையே! அதனால் இந்தச் சந்தர்ப்பத்தைக் கை நழுவ விடாதிருங்கள். (மாற்கு. 14:52)

கனவு காணுங்கள்... தரிசனத்தைக் கேட்டு வாங்குங்கள்... நிழல் நிஜமாவது நிச்சயம்... வேத வசனங்கள் சத்தியம், சந்தேகமே வேண்டாம். (அப். 2:17) சபையைச் சுத்திகரிக்கும் வேலையை, வாலிபர்களின் கையில்தான் பரிசுத்தாவியானவர் கொடுத்திருக்கிறார். அசுத்தமானவைகளையும், தீட்டானவைகளையும் “வெளியே கொண்டு போய் புதையுங்கள்.”(அப்.5:6,10)

“பவுல்” என்ற வாலிபனின் சுவிசேஷ வரலாற்றைக் கைப்பைக்குள் எப்போதும் வைத்திருங்கள். (அப். 7:58).

காரின் இருக்கைக்குக் கீழே முடங்கிக் கிடந்த சுவிசேஷ C.D.” களை வெளியே எடுங்கள், போட்டுக் கேளுங்கள். (ரோமர். 10:18) “யுத்த சத்தம்” “வானமுதம்” மாதாந்திர பத்திரிக்கைக்கு வருட சந்தா கட்டி வீட்டுக்கு வரவழையுங்கள். பக்கத்து வீட்டு அமலாக்கா வாசிக்காமல் சும்மா போட்டு வைத்திருக்கும் “அறைகூவல்” பழைய புத்தகங்களைக் கேட்டு வாங்குங்கள். அடுத்த ரோட்டில் இருக்கும் தாமஸ் அங்கிள் வீட்டில் இருக்கும் Christian

**Library**-ல் **Bro. Stanley** அவர்களின் புத்தகங்கள் இருக்கிறதா? என்று கேட்டு வாங்குங்கள்.

**Church**-ல் 3 நாட்களுக்கு **Rivival Meetings** நடக்கிறதாம். யோசித்துக் கொண்டு உட்காராமல் புறப்பட்டுப் போங்கள்! **Prayer Cell Meeting** “அப்பா, அம்மா போவார்கள்” என்று சொல்லிவிட்டு, வீட்டில் தூங்காதீர்கள்! சுவிசேஷ ஊழியங்களுக்கு “வயதான தாத்தாக்கள் போவார்கள்” என்று நினைத்து கொண்டு, **T.V.** பார்த்துக் கொண்டிருக்காதீர்கள். **All night Prayer**-ஆ? “தூக்கம் வராதவர்கள் போவார்கள்” என்று சாக்குப் போக்குச் சொல்லாதீர்கள். **Fasting Prayer** ஆ? “பசிக்குமே” என்று யோசிக்காதீர்கள்.

ஏன் இதெல்லாம், **Bible** வாசித்தால் போதாதா? போதாதுதான். **School, Teacher, Lessons, Syllabus, Examinations** இதெல்லாம் எதுக்கு? புத்தகத்தை வாங்கி வீட்டில் உட்கார்ந்து படித்தாலே போதுமே? எப்படி எப்படி? **School**-க்குப் போகாமல் அப்படி வீட்டிலேயே உட்கார்ந்து படி, நீ **Pass** பண்ணுகிற லட்சணத்தைப் பார்க்கலாம்?

ஒரு அடி நீளமுள்ள ஒரு பெரிய ரொட்டியை உன்னிடம் கொடுத்தால், அதை அப்படியே முழுசாக விழுங்க முடியுமா? உன்னால் அப்படியே விழுங்க முடியுமானால் பைபிளை மாத்திரம் படித்தால் போதும். ரொட்டியை பிட்டுதான் (பிய்த்து) தான் சாப்பிட முடியும். அல்லது **Slice** செய்து 2 **slice**-க்கு நடுவாக **Butter, Jam, Sauce** எதையாவது வைத்துத்தான் சாப்பிட முடியும். **Sandwich** ஆகச் செய்யலாம். வசனத்தைக் கவனியுங்கள், அவர் அப்பத்தை பிட்டுக் கொடுத்தார், அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டன, அவரை அறிந்தார்கள்! (லூக்கா. 24:30,31)

வசனத்தை வாசிக்கும் போது புரியாது. ஒருவர் அதை விளக்கிச் சொல்லும் போது, நம் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட, தேவனை அறிந்து கொள்வோம், பிறகென்ன... அவரை விட்டுப் பிரியவே மனசு வராது.

“நித்திரை மயக்கத்தை” ஜன்னலுக்கு வெளியே தள்ளி, நீங்கள் உட்புறமாக குதியுங்கள். “ஐத்திகு” நிலைமை உங்களுக்கும் வர வேண்டாம்! (அப். 20:9). பவுலின் அபிஷேகத்துடன் புறப்பட்டு, தேசங்களில் தூங்கிக் கொண்டிருக்கும் கணக்கிலடங்கா “ஐத்திகுகளை” காப்பாற்றுங்கள். (அப். 20:12)

சாத்தானுக்கு எதிராக யுத்தக் களத்தில் இறங்க வாலிபர்களை மிஞ்ச ஆளில்லை. காரணம் அவர்கள் பலவான்கள் (ஆவியிலும்), இள இரத்தம்! இந்தக் கடைசிக் கால உலகம் வாலிபர்களை நம்பித்தான் கர்ப்ப வேதனையுடன் சுற்றிக் கொண்டிருக்கிறது. (1 யோவான். 13,14) வாலிப வயதில் தங்களைத் தேவனுக்காக வித்திட்ட, தேவ மனிதர்களின் இக்கால செழிப்பையும், மாறாமல் இருக்கும் அவர்களுடைய இளமையையும் பார்த்து ஆச்சரியப்படுகிறேன். (யோபு. 33:25)

துதியுங்கள். (சங். 148:12). வேதம் வாசியுங்கள். (நீதி. 1:4). சாத்தானின் வேதத்தில் இருந்து குறிப்பெடுக்கப்பட்டப் புத்தகங்களைத் தேடிப் போகாதீர்கள். “இது பாதாளத்துக்குப் போகும் வாசல்” என்று கண்ணுக்குத் தெரியாத இரகசிய எழுத்துக்களால் அதில் எழுதப்பட்டிருக்கிறது. பாதாள வாசல் வரைக்கும் போய் திரும்பி வந்ததால் சொல்கிறேன். இயேசு மட்டும் வராதிருந்தால் என் நிலைமை என்னை? (என் கல்லறையின் மேல் 23 வயதில் ஒரு காட்டு மரம் வளர்ந்திருக்கும்).

பாவத்தைத் தவிர மற்ற காரியங்களில், பேதைகளாக இருக்காதீர்கள். சாத்தானுக்கு அது வசதியாகப் போய்விடும். இழுத்துக் கொண்டு போவான். இதற்கு முன் அநேகரை நாசப்படுத்தி விட்டான்.

தம்பி, தங்காய்! நீயாவது தப்பித்துக் கொள். (நீதி. 7:7லிருந்து கடைசி வரை)

உங்கள் அலங்காரம் Hair style-ல் அல்ல, தேவனுக்காகக் கோதுமை மணிகளாக மாற முடிவெடுக்கும் உங்கள் "பராக்கிரமத்தில்" இருக்கிறது. தேவனுடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது. உன்னால் முடிந்தால், அவர் கண்களுக்கு மறைவாக என்ன வேண்டுமானாலும் செய்து கொள்! (பிர. 11:9).

இரட்சிக்கப்பட இதுவே ஏற்ற வயது, 70 வயது அல்ல. இடையில் என்னென்ன நடக்குமோ யாருக்கும் தெரியாது. (பனிப்பாறைகள் உருகுகிறது, கடல் மட்டம் உயருகிறது, சுனாமி அபாயங்கள், பூமி அதிர்ச்சிகள், கொள்ளை நோய்கள், நீரைப் போல பாவங்கள்... எச்சரிக்கிறோம்). நான் படித்த ஒரு "திகில் கதை" என் ஞாபகத்துக்கு வருகிறது. மிகச் சிறிய திகில் கதை! அது:

"ஒரு பெரிய அணு யுத்தம் நடந்து முடிந்தது. உலகின் கடைசி மனிதன் அந்த அறையில் உட்கார்ந்திருந்தான், கதவு வெளியே இருந்து பூட்டப்பட்டது!" (ஏசாயா. 44:25) (எரே. 8:9)

உலக மனிதர்கள் தங்களையும் அறியாமல் தங்கள் மன உணர்வுகளில், இந்த உலகத்துக்கு வரப் போகிற ஒரு பெரிய ஆபத்தை, முடிவை எதிர்பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால் உலகத்துக்கு வரப்போகிற பேராபத்தை தடுத்து நிறுத்த எவராலும் முடியாது என்பதால்; பயந்து நடுங்கிக் கொண்டே வாழ்ந்து வருகிறார்கள். (பிர. 8:17) ஆனால் வேதத்தின்படி... அந்த திகில் கதையில் வருகின்றதான சம்பவம் உலகத்தில் நடக்கப் போவதில்லை. (நீதி. 19:21) இயேசுவை ஏற்றுக் கொண்டாலே போதும், இந்த உலகத்தின் முடிவுவரையென்ன, உலகத்தின் முடிவுக்குப் பிறகும் நமது ஆத்துமாவுக்கு பாதுகாப்பு உண்டு. தேவனைப் பற்றிய அறிவில்லாத மூளையறிவின் வெளிப்பாடுகள்தான் இப்படிப்பட்ட "திகில் கதை"கள்! (தானி. 4:18)

பாவம் செய்த நாட்கள் போகட்டும், மறந்து விடுங்கள்... அவைகளால் விளைந்த களைகளைப் பிடுங்கி, சுவிசேஷ வயல்களில் எருக்களாக்குங்கள். தன் வாலிப வயது முழுவதையும் சுவிசேஷத்திற்காக வித்திடச் செலவழித்தவர் நம் தேவன் இயேசு! அவருடைய விதைப்பை வீணாக்காதபடி சபை என்னும் மணவாட்டி "ஏங்கும் கன்னியாய் காத்திருக்கிறாள்"! (ஏசாயா. 62:5)

வறுமையோடு, படிக்க முடியாமல், வேலை கிடைக்காமல், திருமணம் நடக்காமல், குழந்தையில்லாமல் ... இப்படி வாலிபர்கள் கஷ்டம் அனுபவிப்பதற்கு காரணமே வசனத்தை அலட்சியம் பண்ணியதால்தான். (எசே. 10:12) இளைஞர்கள் எழும்பும் வரை தேசத்தில் பாழ்க்கடிப்புகள் நிற்காது. (எசே. 48:15)

சத்தியத்தை அறிந்து கொள்ளுங்கள், அது உங்களை விடுவிக்கும். நீங்கள் சிறை வைக்கப்பட்டிருக்கும் அறைக்கு வெளியே தொங்கிக் கொண்டிருக்கும் பூட்டை திறந்து உங்களை வெளியே கொண்டு வரும்.

## ஒண்ணாம், இரண்டாம் காவலையும் கடந்து "ராஜ வீதி" வழியாக நடந்து போவீர்கள். (அப். 12:10)

இளைஞர்களே! யுவதிகளே! எழும்புங்கள், இந்த புத்தகத்தை வாசியுங்கள். (அதற்காக முதியவர்களும், இடைப்பட்ட வயதுடையவர்களும் வாசிக்காமல் மூடி விடாதீர்கள்.) பிறகு கொண்டு போய் விதையுங்கள்! விதையுங்கள்!! இளைய உள்ளங்களில் விளைய வையுங்கள்!

## இயேசு வந்து கொண்டிருக்கிறார்!